# செயற்றிறன் அறிக்கை - 2025



**கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு**

**(செலவுத் தலைப்பு இலக்கம் - 124)**

# பொருளடக்கம்


| உள்ளடக்கம் | பக்க இலக்கம் |
| --- | --- |
| **அத்தியாயம் 01** | |
| **நிறுவனத்தின் தோற்றுவாய்/நிறைவேற்றுப் பொழிப்பு** | 1-22 |
| **அத்தியாயம் 02** | |
| **முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்** | 23-54 |
| **அத்தியாயம் 03** | |
| **வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயற்றிறன்** | 55-62 |
| **இணைப்பு I** | |
| **அத்தியாயம் 04** | |
| **செயற்றிறன் குறிகாட்டிகள்** | 63 |
| **அத்தியாயம் 05** | |
| **பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை (SDG) அடைவதன் செயற்றிறன்** | 64-68 |
| **அத்தியாயம் 06** | |
| **மனிதவளத் தோற்றுவாய்** | 69-76 |
| **அத்தியாயம் 07** | |
| **இணக்க அறிக்கை** | 77-85 |

# அத்தியாயம் 01

## நிறுவனத்தின் தோற்றுவாய்/நிறைவேற்றுப் பொழிப்பு

### 1.1 தொலைநோக்கு

**வளர்ச்சியின் பலாபலன்களினைச் சமமாக அனுபவிக்கும் ஒரு செழிப்பான சமூகம்.**

### 1.2 பணிக்கூற்று

**கிராமிய அபிவிருத்தியினை மேம்படுத்துதல், சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டலினை உறுதிப்படுத்துவதற்கு சகல பங்குதாரர்களின் பங்கேற்புடன் வேலைத்திட்டங்களினைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்குதல்.**

## 1.3 அறிமுகம், செயற்பாடுகள் மற்றும் பணிகள்

குடிசன மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தினால் (DCS) 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வீட்டு வருமானம் மற்றும் செலவுக் கணக்கெடுப்பின் பிரகாரம், இலங்கையின் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 82.8% கிராமப்புறம் மற்றும் தோட்டப் பகுதிகளில் வாழ்கின்றனர். அது மாத்திரமன்றி, மொத்த சனத்தொகையில் ஒவ்வொரு ஆறுபேரில் ஒருவர் பல பரிமாண வறுமையினை எதிர்கொள்கின்றனர் என்பதுடன், மேலும் அவர்களில் நூற்றுக்கு 95.3% கிராமப்புறம் மற்றும் தோட்டக் பகுதிகளில் வாழ்கின்றனர். நகரப்புறங்களுடன் ஒப்பிடும்போது, வறுமைத் தலைப்பு எண்ணிக்கைக் காட்டி, கிராமப்பறுங்களில் நூற்றுக்கு 10% த்தாலும் மற்றும் தோட்டப் பகுதிகளில் நூற்றுக்கு 27% த்தாலும் அதிகரித்துள்ளதுடன், கல்வி வாய்ப்புக்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளுக்கான அணுகல் அதேபோல ஊழியப்படை மற்றும் சமூகச் செயற்பாடுகளில் பெண்கள் மற்றும் மூத்த பிரஜைகளின் பங்கேற்பு குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது. அது மாத்திரமன்றி, கிராமப்புறப் பகுதிகளில் நிலவும் பொருளாதாரதப் பிரச்சினைகள், அப்பகுதிகளின் பொருளாதாரத்திலும் மற்றும் சமூகக் கட்டமைப்பிலும் குறிப்பிடத்தக்க எதிர்மறையான தாக்கமொன்றினை ஏற்படுத்தியுள்ளன. *

நன்கு வடிவமைக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு முறையை அறிமுகப்படுத்துவதனூடாக ஒரு நாட்டின் மனித மூலதனத்தினையும் மற்றும் உற்பத்தித் திறனினையும் அதிகரிக்கவும், சமத்துவமின்மையினைக் குறைக்கவும் மற்றும் வறுமையின் தீய சுழற்சியினை முடிவுக்குக் கொண்டுவரவும் உதவும். சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வரைவிலக்கணத்தின் பிரகாரம் சமூகப் பாதுகாப்பு என்பது தனி நபர்கள் அல்லது குடும்ப அலகுகளினை அவர்களின் வாழ்நாள் முழுவதும் வறுமை மற்றும் பாதிப்புக்களிருந்து பாதுகாப்பதற்கு செயலாக்கப்படும் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினைக் கொண்ட அமைப்பொன்றாகும். இலங்கையில் பல்வேறு சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் செயலாக்கப்பட்டாலும் அரசினூடாக ஒருங்கிணைக்கப்பட்ட ஒருங்கிணைந்த வேலைத்திட்டங்களினை ஒருங்கிணைத்து செயறப்படுத்த வேண்டிய அவசியம் இன்றைய காலகட்டத்தில் எழுந்துள்ளது.

ஆதலால், நாட்டின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தும் மேற்கூறிய சவால்களினை வெற்றிகொள்வதற்கு “ஒரு செல்வந்த நாடு - ஒரு அழகான வாழ்க்கை” என்ற அரசின் கொள்கைக்கிணங்க, யாரையும் அல்லது எந்தப் பகுதியினையும் கைவிடாத வளர்ச்சி செயல்முறையொன்றினூடாக பல பரிமாண வறுமையினை ஒழிக்கவும், ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தங்கிய சமூகங்களில் சமூக நலனினை உறுதி செய்யவும் ஒரு விரிவான வேலைத்திட்டத்தின் தேவைப்பாடு எழுந்துள்ளது.

அதன் பிரகாரம், இலங்கையில் கிராமப்புறங்களில் பேண்தகு அபிவிருத்தியொன்றினை ஊக்குவித்தல், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களினை மேம்படுத்துதல் மற்றும் சுயாதீனமான சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு சமூகங்களினை வலுவூட்டுதல் போன்ற அம்சங்களினை உள்ளடக்குவதற்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2412./8 என்ற இலக்க மற்றும் 2024.11.25 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியினூடாக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சாக நிறுவப்பட்டுள்ளதுடன், இவ்வமைச்சின் பிரதான செயற்பாடுகள் மற்றும் பணிகள் பின்வருமாறாகும்.

1. அரசினூடாக செயலாக்கப்படும் தேசியக் கொள்கையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுதல் விடயங்கள், அமைச்சுக்கு இணைக்கப்பட்ட திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுக்கான கொள்கைகள், மூலோபாயங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களினை வகுத்தல், அமுலாக்குதல், பின்னூட்டுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2. அமைச்சு விடயப் பரப்புக்கு உரித்தான பொதுமக்கள் சேவைகளினை வினைத்திறனாகவும் மற்றும் நட்புடனும் வழங்குதல்.

3. விரயம் மற்றும் ஊழலினைத் துரத்துவதனூடாக அமைச்சின் கடமைப் பொறுப்பினை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு உதவும் முறைமைக்கமைவாக புதிய முகாமைத்துவத் திட்டங்கள், தொழில்நுட்பத்தினைப் புகுத்தி சகல திட்டங்கள் மற்றும் ஒழுங்குகளினை மறுசீரமைத்தல்.

4. கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்தும் முயற்சிகளினை எதிர்வரும் காலங்களில் அமுலாக்குதல்.

5. சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

6. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களினை தேவைகளினை அடையாளம் காணுதல் மற்றும் அத்தேவைப்பாடுகளினை நிறைவேற்றுதல்.

7. பொதுசன உதவி முன்மொழிவுத் திட்டங்களினை மதிப்பாய்வு செய்தல், மறுசீரமைத்தல் மற்றும் பொருத்தமான புதிய சீர்திருத்தங்களினை அறிமுகம் செய்தல்.

8. காச நோயாளிகள், சிறுநீரக நோயாளிகள், தொழுநோயாளிகள, புற்றுநோய் மற்றும் தலசீமியா நோயாளிகள் மற்றும் அவர்களினைச் சார்ந்துள்ளவர்களுக்கும் உதவி வழங்குதல்.

9. குடும்ப உளவளத்துணைச் சேவைகளினை அமுலாக்குதல்.

10. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மரபுகளுடன் தொடர்பிலான நடவடிக்கைகள்.

11. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதற்கும் மற்றும் தொழில் வாய்ப்புக்களினை உருவாக்கிக் கொடுப்பதற்கும் உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தேவையான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

12. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் பிரதான நீரோட்டத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு ஏற்றவாறு தேவையான கொள்கைசார் மாற்றங்களினைச் செய்தல், தேவையான வசதிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

13. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களுக்குச் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களினை அமுலாக்குதல்.

14. முதியோர்களினைப் பாதுகாத்தல், சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில் முதியோர்களின் பங்கேற்பினை மேலோங்கச் செய்தல் மற்றும் மூத்த பிரஜைகளின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம், 2025.10.18 ஆந் திகதி 2458/65 என்ற இலக்க வர்த்தமானியினூடாக இவ்வமைச்சின் கீழ் செயலாக்கப்பட்டுள்ளது.

**இச் செயலகத்தின் பிரதான செயற்பாடுகளாக,**

1. அரச சார்பற்ற நிறுவனங்களினைப் பதிவு செய்தல்.
2. அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளினைக் கண்காணித்தல்.
3. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வசதிகளினை வழங்குதல்.
4. அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பிலான தேசிய செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வீசா பரிந்துரைகளினை வழங்குதல்.
5. அரச சார்பற்ற நிறுவனங்களின் முறைகேடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.

ஆகியவற்றினைக் குறிப்பிட முடியும்.

- மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் மற்றும் பணிகளினை விளைத்திறனாகவும் மற்றும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்குப் பின்வரும் திணைக்களங்கள் நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் செயலூக்கமான வகையில் செயற்பட்டு வருகின்றன.

### ❖ கிராமிய அபிவிருத்திப் பிரிவு

i. கிராமிய அபிவிருத்திப் பணியகம் (RDB)
ii. கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)

### ❖ சமூகப் பாதுகாப்புப் பிரிவு

iii. சமூக சேவைகள் திணைக்களம் (DSS)
iv. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD)
v. முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSE)
vi. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)
vii. உளவளத்துணைப் பிரிவு
viii. உலக உணவு நிகழ்ச்சித் திட்ட ஒத்துழைப்புக்கான கூட்டாண்மைச் செயலகம்.
ix. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம்.

### ❖ சமூக வலுவூட்டுகைப் பிரிவு

x. சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் (DSD)

### ❖ கல்விசார் நிறுவனம்

xi. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)

தற்போது இந்நிறுவனங்களினூடாக சேவைகளினைப் பெற்றுக்கொள்ளும் முக்கிய இலக்குக் குழுக்கள் பின்வருமாறாகும்.


- முதியோர் சமூகம் 3.9 மில்லியன் (பதிவாளர் நாயகத் திணைக்களம், 2023)
- 5 வயதிற்கு மேற்பட்ட அங்கவீனமுற்ற சமூகம் 0.73 மில்லியன் (ஊழியப்படை ஆய்வு, 2022)
- 4.5 மில்லியன் முறைசாராத் துறையில் கடமையாற்றும் சமூகம் (ஊழியப்படைக் கணக்கெடுப்பு 2022).
- போதைப் பழக்கத்திற்கு அடிமையான 152,979 பேர் (பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம், 2022)
- மனக் கோளாறுகளினைக் கொண்ட அங்கவீனமுற்ற சமூகம் 0.8 மில்லியன் (சுகாதார அமைச்சு, 2017).
- சிறையிலடைக்கப்பட்ட 28,500 தனிநபர்களின் குடும்பங்கள் (சமூகச் சீர்திருத்த திணைக்களம், 2024)
- சிறையிலடைக்கப்பட்ட தனிநபர்களின் 28,500 குடும்பங்கள் (சமூக சீர்த்திருத்தத் திணைக்களம், 2024)
- தனிப் பெற்றாரினைக் கொண்ட குடும்பங்கள் மற்றும் வீடற்ற பிச்சைக்காரர்கள்.

அதன் பிரகாரம், அமைச்சு மற்றும் இணை நிறுவனங்கள் செலவுத் தலைப்பு இலக்கம் 124 இன் கீழ் செயலாக்கப்படுவதுடன், சமூக சேவைகள் திணைக்களம் செலவுத் தலைப்பு இலக்கம் 216 இன் கீழும், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் செலவுத் தலைப்பு 331 இன் கீழும் செயலாக்கப்படுகிறது. இச் செயற்றிறன் அறிக்கையினூடாக செலவுத் தலைப்பு இலக்கம் 124 கீழ் முன்னேற்றம் காட்டப்படுகிறது.

**கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது** - அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகமானது 2025 ஒக்டோபர் மாதமளவில் எமது அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது என்பதுடன் 2025 ஆம் ஆண்டில் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் செயலாக்கப்படவில்லை என்பதால் அந்நிறுவனத்திற்கான முன்னேற்றம் இச் செயற்றிறன் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

* மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரத் துறை, 2025 ஆம் ஆண்டிற்கான குடும்ப வருமானம் மற்றும் செலவினக்கணக்கெடுப்பு (HIES) தரவுகளை தற்போது பகுப்பாய்வு செய்து வருகிறது, மேலும் இந்தக் கணக்கெடுப்பு அறிக்கை 2026 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

## 1.4.1 நிறுவனக் கட்டமைப



## 1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்/நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள்

# சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் (DSD)

## அறிமுகம்

இலங்கையின் வறுமையினை ஒழித்தல் மற்றும் சமூக நியாயத்தினை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளினை மேம்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு ஏழை மனிதனிடமும் மறைந்திருக்கும் திறன்களினை அடக்கும் தடைகளினை நீக்கி அக்குடும்பங்களினை வலுவூட்டுதல், சமூகப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம், 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க திவிநெகும (திருத்தம்) சட்டத்தினூடாக திருத்தப்பட்டு 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தினூடாக நிறுவப்பட்டுள்ளது.

## நோக்கங்கள்

- குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களினை பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் மற்றும் உளவியல் ரீதியாகவும் வலுவூட்டி நிலையான மற்றும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினை அடையும் குடும்ப அலகுகளாக அவர்களினை மாற்றுதல்.
- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குச் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

## கடமைப் பொறுப்பு

- 2025 ஆம் ஆண்டு தொடக்கம் 2029 ஆம் ஆண்டு வரையிலான 05 ஆண்டு காலப்பகுதியினுள், பன்முக வறுமையினை எதிர்கொள்ளும் 2 மில்லியன் குடும்பங்களின் பொருளாதார, சமூக மற்றும் உளம் போன்ற பிரிவுகளின் கீழ் வலுவூட்டுதல்.
- குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் வருமான ஈட்டத்தினையும் மற்றும் வாழ்வாதார வாய்ப்புக்களினையும் மேம்படுத்துவதற்காக நுண்நிதியக் கடன் வசதிகளினை வழங்குதல்.
- குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் சமூக மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

# சமூக சேவைகள் திணைக்களம் (DSS)

## அறிமுகம்

ஸ்ரீமத் ஐவர் ஜெனிங்க்ஸ் அவர்களின் தலைமையில் 1944 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரையின் கீழ், 1948 பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களம் அமைக்கப்பட்டுள்ளதுடன், ஓரங்கட்டப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு சிறந்த சூழலினைக் கட்டியெழுப்பும் நோக்குடன் இத்திணைக்களம் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம், எவரையும் அல்லது எந்தவொரு பகுதியினையும் கைவிடாது சலுகைகள் கிடைக்காத, நாட்டின் ஒட்டு மொத்த சமூகத்திற்குமென பிறப்பு தொடக்கம் இறப்பு வரை அமுலாக்கப்படும் ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தினை 2025 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்துவதற்குத் தொடங்கியுள்ளது.

அதில், அமைச்சின் கீழ் சமூக வலுவூட்டல் மற்றும் ஒருங்கிணைப்புத் தொடர்பில் தேசிய மட்டத்தில் முன்னணி நிறுவனமாகச் செயற்படும் சமூக சேவைகள் திணைக்களம், ஓரங்கட்டப்பட்ட மற்றும் நலிவடைந்த பயனளிகளுக்காகத் தயாரிக்கப்பட்ட மறுவாழ்வுத் திட்டங்களின் பிரகாரம், சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை வேலைத்திட்டங்கள் அமுலாக்குவது இடம்பெற்றுவருகிறது.

## நோக்கங்கள்

- அங்கவீனமுற்ற நபர்கள் உட்பட பிற ஓரங்கட்டப்பட்ட மற்றும் நலிவடைந்த நிலைமைக்கு உட்பட்டு பயன்கள் எதுவும் கிடைக்காத சமூகத்தின் சம உரிமைகள், வாய்ப்புக்கள், சுதந்திரம் மற்றும் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு வருமானம் ஈட்டுவதற்கான வழிகளினை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்.

## கடமைப் பொறுப்பு

- சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களினூடாக அங்கவீன இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல்.
- அங்கவீன இளைஞர் யுவதிகளின் தொழில்சார் செயற்பாடுகளினைப் புதிய தொழில்நுட்ப முறைகளினைப் பயன்படுத்தி தற்போதைய சந்தைக்கு ஏற்றவாறு மேம்படுத்துதல்.
- அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு முற்கூட்டியே தலையீடு செய்யும் வேலைத்திட்டங்களினை அமுலாக்குதல் மற்றும் அவர்களினை சமூகமயமாக்குதல்.

- பெற்றோர் பாதுகாவலரினை இழந்த அங்கவீனமுற்ற நபர்களுக்கு, முழுநேர உறைவிடப் பராமரிப்பினை வழங்குதல் மற்றும் வலுவூட்டுதல்.
- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளிதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.
- விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
- அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்குப் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களினூடாக பகல்நேரப் பராமரிப்பு மற்றும் முன் தொழில் திறன்களினை மேம்படுத்துதல்.
- சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வுச் செயற்பாட்டினை வலுவூட்டிப் பிரபலப்படுத்துவதற்கு பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்ட செயற்பாட்டுக் குழுக்களினூடாகக் கண்காணிக்கப்படும் சுயஉதவி அமைப்புக்களினூடாக புனர்வாழ்வுத் திட்டங்களின் மூலம் பயனாளிகளினை வலுவூட்டும் வேலைத்திட்டமொன்றினை அமுலாக்குதல்.
- சைகைமொழி மொழிபெயர்ப்புச் சேவைகளினை வழங்குதல்.
- ரிதியகம நிவர்தன இல்லத்தினூடாகப் பிச்சைக்காரர்களினைப் புனர்வாழ்வளித்தல்.

# அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD)

## அறிமுகம்

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் செயலகம், 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளதுடன், அங்கவீனமுற்ற நபர்களுக்கான நட்புடனான சாதகமான சூழலொன்றினை உருவாக்குவதற்காக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் நலன்புரியினை உள்ளிட்ட நிவாரணங்களினை வழங்கும் நோக்குடன், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையினூடாக எடுக்கப்பட்ட கொள்கைசார் தீர்மானங்களினை அமுலாக்குதல் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக இடம்பெறுகிறது.

## நோக்கங்கள்

- அங்கவீனமுற்ற நபர்களுக்கு நட்புடன்கூடிய சூழலொன்றினைக் கட்டியெழுப்புதல்.
- அங்கவீனமுற்ற நபர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் சமூகங்களினைச் சுயமாகவும் மற்றும் மீள்திறனுடனும் அவர்களினைப் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக எழச் செய்வதற்காக வலுவூட்டுதல்.
- அனைவருக்கும் சம உரிமைகள், வாய்ப்புக்கள், சுதந்திரங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

## கடமைப் பொறுப்பு

- அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல் மற்றும் உரிமைகளினைப் பாதுகாத்தல்.
- குறைந்த வருமானத்தினைக் கொண்ட அங்கவீனமுற்ற நபர்களின் அடிப்படைத் தேவைகளுக்கான வசதிகளினைச் செய்துகொடுக்கும் வேலைத்திட்டங்களினை அமுலாக்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுகாதாரம், கல்வி, தொழில் வாய்ப்புக்கள் மற்றும் அணுகல் வசதிகளுக்கான வாய்ப்புக்களினை விரிவுபடுத்துதல்.

# முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSE)

## அறிமுகம்

2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டு 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தினூடாக முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் அமைக்கப்பட்டுள்ளது.

## நோக்கங்கள்

- முதியோர்களின் உரிமைகளினைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- முதியோர்களின் உடல், உளச் சமநிலை மற்றும் ஆரோக்கியத்தினைப் பேணுதல் மற்றும் நலன்புரியினை மேம்படுத்துதல்.
- முதியோர்களினைப் பொருளாதார ரீதியில் வலுவூட்டுதல்.

## கடமைப் பொறுப்பு

- முதியோர்களுக்கு அரவணைப்பு, பாதுகாப்பு மற்றும் நலன்புரியினை வழங்குதல் குடும்பத்தினூடாக நிறைவேற்றவேண்டிய செயற்பாடு என்பதைச் சமுதாயத்திற்கு உணர்த்துதல்.
- முதியோர்களினைப் பராமரிப்பதற்காகப் பிரத்தியேகத் துறையின் முதலீட்டு வாய்ப்புக்களினை அதிகரித்தல்.
- முதியோர்களின் இயலுமைகள், திறன் விருத்தியின் மூலம் வருமானங்களினைப் பெருக்கும் வழிகளுக்கு முன்வைத்தல்.
- விழிப்புணர்வினை வளர்ப்பதனூடாக ஓய்வுகாலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளினைச் சமாளிப்பதற்குத் தயார்படுத்துதல்.
- உதவி தேவைப்படும் முதியோர்களுக்குப் பாதுகாப்பினை வழங்குதல்.

# இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)

## அறிமுகம்

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தினூடாகவும் மற்றும் 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (திருத்தப்பட்ட) சட்டத்தினூடாகவும் நிறுவப்பட்டு அமுலாக்கப்பட்டுவரும் அரச நியதிச்சட்ட நிறுவனமொன்றாகும். அரச ஓய்வூதியமொன்றுக்கு உரித்தினைக் கொண்டிராத சுய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பிரேரணைகள் திட்டத்தினை அமுலாக்குதல் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

## நோக்கங்கள்

- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு அவர்களின் வயோதிபக் காலத்தில் அல்லது அவர்கள் ஏதாவது நோய்வாய்ப்படும்போது அக்காலத்தில் அவர்களுக்குச சமூகப் பாதுகாப்பினை வழங்குதல் மற்றும் அவர்கள் இறந்த பின்னர் அவர்களினைச் சார்ந்திருப்பவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்.
- இளைஞர் யுவதிகளினைச் சுயதொழில்களில் ஈடுபடுவதற்கு வலுவூட்டுதல், அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை மேம்படுத்துதல் மற்றும் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்துதல்.

## கடமைப் பொறுப்பு

மீன்பிடி மற்றும் விவசாயத் துறைகளில் வேலை செய்பவர்களினைத் தவிர்த்து, பிற சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைகள் திட்டமொன்றினை அமைத்தல் மற்றும் அப்பிரேரணைத் திட்டத்தினை நிர்வகித்தல் மற்றும் முகாமை செய்தல் 2024 ஆம் ஆண்டு வரை அமுலாக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்பு என்பதுடன், அரசின் அனைத்துத் துறைகளிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் பொருந்தும் ஓய்வூதியம் குறித்த விரிவான கொள்கையினை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு குடிமகனையும் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்வதற்கு ஊக்குவித்தல் என்ற புதிய அரசின் கொள்கைக்கமைவாக, வேலைத்திட்டங்களினை அமுலாக்குதல் இந்நிறுவனத்தின் கடமைப் பொறுப்பாகும்,

# தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)

## அறிமுகம்

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தினூடாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் என்ற பெயரில் உயர்கல்வி நிறுவனமொன்றாக நிறுவப்பட்டுள்ள இந்நிறுவனம், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்டத்தின் 25 ஏ பிரிவின் கீழ் பட்டத்தினை வழங்குவதற்கு அதிகாரத்தினைக் கொண்ட நிறுவனமாக 2005 ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், சமூகப் பணி (Social Work) தொடர்பிலான கல்வியினை வழங்கும் இலங்கையிலுள்ள ஒரேயொரு அரச நிறுவனமாகும்.

நிறுவனத்தின் மையப் பிரிவான நிர்வாக சபையின் (Governing Council) ஊடாக நிறுவனத்தின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் நிதிசார் செயற்பாடுகள் அமுலாக்கப்படுகின்றன. நிர்வாக சபையின் கீழ் அமுலாக்கப்படும் கல்விசார் விவகார சபையினூடாக (Academic Affairs Board) நிறுவனத்தின் கல்விச் செயற்பாடுகளுக்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல் வழங்குதல் இடம்பெறுகிறது.

## நோக்கங்கள்

- உலகளாவிய தேவைகள் மற்றும் புதுமைகளுடன் இணைந்த புதுமையான கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில் திறன்களினை மேம்படுத்துதல் மற்றும் வாழ்க்கைத் தொழில் மேம்பாட்டினை வளர்த்தல்.

- நிலைபேறான தன்மை மற்றும் சமூக நீதியினை வளர்க்கும் சமூக அபிவிருத்தி மூலோபாயங்களின் பயன்பாட்டினை மேம்படுத்துதல்.
- சமூக நலன்புரி மற்றும் மேம்பாட்டு விளைவுகளினை மேம்படுத்தும் கொள்கைகளினை வடிவமைத்துச் செயற்படுத்துவதற்கு உதவுவதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட சமூகக் கொள்கைகளினை மேம்படுத்துதல் மற்றும் நிபுணத்துவமான உளவளத்துணைச் சேவைகளினை வழங்குதல்.

## கடமைப் பொறுப்பு

- சமூகப் பணி தொழில்வாண்மையான கல்வியினை வழங்குதல்.
- சமூகப் பணிப் பட்டப்படிப்பு, முதுகலைப் பட்டப் படிப்பினை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் சமூக அபிவிருத்தி களத்துறைக்கான புதிய பட்டப் பாடநெறிகளினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். (சமூகவியிலில் சிறப்புப் பட்டம், மானுடவியலில் சிறப்புப் பட்டம், உளவியல் மற்றும் உளவளத்துணையில் சிறப்புப் பட்டம் மற்றும் முதுமையியலில் சிறப்புப் பட்டம்).
- சமூகப் பணி தொடர்பிலான உள்ளூர் மற்றும் சர்வதேசப் பயிற்சிப் பாடநெறிகளினை நடாத்துதல்.
- சமூகப் பணி சமூக நலன்புரி மற்றும் சமூக அபிவிருத்தித் துறையில் ஆய்வுகளினை முன்னெடுத்தல் மற்றும் பிரசுரங்களினை வெளியிடுதல்.
- சமூக நலன்புரித் துறையில் உளவளத்துணை சேவைகளினை நடாத்துதல்.
- சமூக நலன்புரிச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஊழியர்களின் முகாமைத்துவம் மற்றும் வாழ்க்கைத் தொழில் திறன்களினை மேம்படுத்துதல்.

# கிராமிய மேம்பாட்டுப் பணியகம் (RDB)

## அறிமுகம்

2025 பெப்ரவரி மாதம் 10 ஆந் திகதி அமைப/25/0150/820/004 என்ற இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினைச் செயலாக்கும் மைய நிறுவனமாக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் கீழ் கிராமிய மேம்பாட்டுப் பணியகம் அமைக்கப்பட்டுள்ளது.

## நோக்கங்கள்

- சிறந்த வாழ்க்கைத் தரத்தினை உருவாக்குவதற்காக கிராமப்புறக் குடும்பங்களின்/சமூகங்களின் வருமான மட்டத்தினை அதிகரித்தல்.

- நுண், சிறு மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களினை ஊக்குவித்தல் மற்றும் திறன்களினையும், ஆற்றல்களினையும் வளர்த்தல்.
- அடிப்படை வசதிகளுக்கான (உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள்) அணுகலினை மேம்படுத்துதல்.
- சமூக மேம்பாட்டின் மூலம் சமூகப் பிரச்சினைகளினைக் குறைத்தல்.

## கடமைப் பொறுப்பு

- பிரஜா சக்தி வறுமையினை ஒழிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்குதல்.
- கிராமிய அபிவிருத்தித் துறைக்கான செயற்றிட்டங்கள்/வேலைத்திட்டங்களினை அமுலாக்கும்போது அரசின் அமைச்சுக்கள் மற்றும் பிற நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்.
- அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல், வழிகாட்டுதல், கண்காணித்தல் மற்றும் பின் தொடர் நடவடிக்கைகளினை முன்னெடுத்தல்.
- தற்போதுள்ள கிராமசக்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தினை மேலும் ஒருங்கிணைத்தல்.

## கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)

### அறிமுகம்

1974 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம், 1978 ஆம் ஆண்டிலிருந்து கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமையினை ஒழிக்கும் மூலோபாயமொன்றாக, அபிவிருத்தி நீரோட்டத்தில் ஓரங்கட்டப்பட்ட வறிய சமுதாயத்தின் சாத்தியமான பலங்களினை வெளிக்கொணர்வதன் மூலம் அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் கூட்டுத்தன்மையினை வளர்த்துக் கொள்வதற்குப் பங்களிப்பு மேம்பாட்டு எண்ணக்கருவின் அடிப்படையிலான வேறுபட்ட செயற்பாட்டுப் பயிற்சி ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக புதிய அபிவிருத்தி மூலோபாயமொன்றினை அறிமுகப்படுத்திய தேசிய நிறுவனமொன்றாகும். வறிய சமுதாயத்தின் சமூகப் பொருளாதார செயற்பாட்டினூடாக அவர்கள் முகங்கொடுக்கும் பாதகமான நிலையினை மிகவும் சாதகமான நிலைமையாக முழுமையாக மாற்றுவதற்குத் தேவையான வலுவூட்டும் வினையூக்கச் செயல்முறை இந்நிறுவனத்தின் கடமைப் பொறுப்பொன்றாகும்.

### நோக்கங்கள்

- சமூக மேம்பாடு குறித்த அறிவினை முகாமை செய்தல்.
- சமுதாய வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களின் வினைத்திறன் மற்றும் விளைத்திறனினை அதிகரித்தல்.

### கடமைப் பொறுப்பு

- சமுதாய மேம்பாடு பற்றிய அறிவார்ந்த மற்றும் நிபுணத்துவ அறிவினை சமூகமயமாக்குதல்.
- குடும்ப மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களினை வலுவூட்டுவதற்கு நேரடியாகத் தொடர்புகொள்ளக்கூடியவாறு கள உத்தியோகத்தர்களின் திறன் மேம்பாடு
- கொள்கை வகுப்பாளர்கள்/அபிவிருத்தியாளர்களுக்கான தகவல்களினைத் தொகுத்தல்.
- பிரஜா சக்தி தேசிய வேலைத்திட்டத்தின் பயிற்சி நிலையமாக, பல்பரிமாண வறுமையினை ஒழிப்பதற்கு சமூக அபிவிருத்திச் சபைகளின் (CDC) திறனினை மேம்படுத்துவதற்கு நிறுவனம் அர்ப்பணிப்புடன் உள்ளது. அதன் பிரகாரம் சமூக அபிவிருத்திச் சபை பிரதிநிதிகளினைப் பயிற்றுவித்தல் 2026 ஆம் ஆண்டில் இந் நிறுவனத்தின் பிரதான பொறுப்பாகும். மேலும், கிராமியத் தரவுகளினை அறிவுசார் வகையில் ஆய்வு செய்து கொள்கை உருவாக்கத்திற்குத் தேவையான தொழில்நுட்பம் மற்றும் அறிவுசார் உதவியினை வழங்குவதிலும் நிறுவனம் தனித்துவமான பங்கினைக் கொண்டுள்ளது.

## உளவளத்துணைப் பிரிவு

### அறிமுகம்

சமூகம் எதிர்கொள்ளும் உளநலப் பிரச்சினைகள், உள ஏற்றத் தாழ்வுகள் மற்றும் பல்வேறு உளவியல் பிரச்சினைகளுக்கு, உளவியல் ஆலோசனை மற்றும் சிகிச்சைசார் முறைகளினைப் பயன்படுத்தி உளத்தினைச் சிறந்தவாறு கட்டியெழுப்புதல் இப்பிரிவினூடாக இடம்பெறுகிறது.

### நோக்கங்கள்

- உளக் கோளாறுகளின் பாதிப்பினைக் குறைப்பதன் மூலம் உளத்தினைச் சிறந்தவாறு கட்டியெழுப்புதல் மற்றும் உளத்தினை வலுவூட்டுதல்.

### கடமைப் பொறுப்பு

- நபர்கள் எதிர்கொள்ளும் உளநலப் பிரச்சினைகள், உளநலக் கோளாறுகள், மனநோய்கள் மற்றும் பல்வேறு உளவியல் சிக்கல்களினைக் கண்டறிந்து அந்த நிலைமைகளினைக் குறைப்பது தொடர்பான ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களினை முன்னெடுத்தல்.
- சமுதாயத்தினை உளரீதியில் வலுவூட்டுவதற்காக உளவியல் உளவளத்துணை தலையீட்டினை முன்னெடுத்தல்.
- உளநலக் கோளாறுகள் மற்றும் உளவியல் பிரச்சினைகளினைக் கொண்ட சேவைநாடியினர்களுக்குத் தரமான உளவளத்துணை சேவையொன்றினை வழங்குதல்.
- உளவளத்துணை சேவையில் ஈடுபட்டுள்ள தொழில்வாண்மையாளர்களிடையே முறையான தொடர்பொன்றினை ஏற்படுத்துதல்.
- உளவளத்துணை சேவைகளினை வழங்குவது தொடர்பில் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டல்,

## உலக உணவு நிகழ்ச்சித் திட்ட ஒத்துழைப்புக்கான கூட்டாண்மைச் செயலகம்.

### அறிமுகம்

உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் என்பது (WFP) 1968 தொடக்கம் இலங்கையில் நிறுவப்பட்ட அரச அனுசரணையுடன் செயலாக்கப்படும் வேலைத்திட்டமொன்றாகும். 2023-2027 மூலோபாயத் திட்டத்தின் கீழ் இதுவரை இலங்கையில் உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக உணவுப் பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மூலோபாயத் திட்டமானது 105 அமெரிக்க டொலர் மில்லியன் மொத்தப் பெறுமதியினைக் கொண்ட ஐந்தாண்டு வேலைத்திட்டமொன்று என்பதுடன், அவசரகால சூழ்நிலைகளுக்குப் பதிலளித்தல், மிகவும் நலிவடைந்தோரின் உணவு மற்றும் ஊட்டச்சத்துத் தேவைகளினைப் பூர்த்தி செய்தல், பருவநிலை மாற்றத்திற்கு எதிரதான நீண்டகால மீள்திறனினை உருவாக்குதல் மற்றும் நிறுவனத் திறனினைக் கட்டியெழுப்பி நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்துகிறது. மேற்கூறிய நோக்கங்களினை அடைவதற்கு 2025 ஜனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் WFP ஒத்துழைப்புக்கான கூட்டாண்மைச் செயலகம் (PSWFPC), கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் சீராகச் செயற்படுவதற்காக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் கீழ் செயற்படுகிறது. இச் செயலகம், உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்துடன் (WFP) இலங்கை அரசு ஒருங்கிணைப்பினைச் செய்யும் தலைமை நிலையம் என்பதுடன், உரிய வேலைத்திட்டங்களினை அடி மட்டத்தில் தேசிய

முன்னுரிமைகளுக்கமைவாகச் சீரமைத்தல், திறமையான செயலாக்கம், பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் பயனுள்ள கண்காணிப்பினை உறுதி செய்யும்.

2025 ஆம் ஆண்டு தொடர்பில், மூலோபாய திட்டத்தின் நிகழ்ச்சித் திட்டங்களினைச் செயற்படுத்துவதற்கு WFP வருடாந்த மானிய உதவி ரூபா. 1,250 மில்லியன் என்பதுடன், உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்தல், ஓரங்கட்டப்பட்ட மக்களின் ஊட்டச்சத்தினை மேம்படுத்துதல் மற்றும் பேரிடர் தாங்கும் சக்தியினை வலுப்படுத்துதல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற் இலங்கை அரசிடமிருந்து ரூபா. 550 மில்லியன் பங்களிப்பொன்று 2025 ஆம் ஆண்டு தொடர்பில் வழங்கப்பட்டுள்ளது.

### முக்கிய மூலோபாய விளைவுகள்

1.நெருக்கடிகால நடவடிக்கைகள் : நெருக்கடிகளின்போதும் அதற்குப் பின்னரும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல்.

2. மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து: ஊட்டச்சத்து சார்ந்த மற்றும் ஊட்டச்சத்துக்கென பிரத்தியேகமான வேலைத்திட்டங்களினூடாக வாழ்வின் முதலாவது 8,000 நாட்களினை மையமாகக் கொண்டு ஊட்டச்சத்தினை மேம்படுத்துதல்.

3. மீள்திறனினைக் கட்டியெழுப்புதல்: இயற்கைப் பேரிடர்கள் மற்றும் காலநிலை மாற்றத்தினால் சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களினைக் குறைத்தல்.

4.நிறுவனத்தினை வலுவூட்டுதல் : மீள்திறன் கொண்ட உணவு முறைமைகளினை மேம்படுத்துதல் மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்த்தினை மேம்படுத்துவதற்கு தேசிய நிறுவனம்சார் திறனினை மேம்படுத்துதல்.

## நிர்வாகப் பிரிவு

அமைச்சு மற்றும் இணை நிறுவனங்களின் மனித வளங்கள் மற்றும் பௌதிக வள முகாமைத்துவம் தொடர்பிலான தாபன விதிக்கோவைகள், சுற்றுநிரூபங்களுக்கிணங்கவும் மற்றும் தருணங்களுக்கமைவாகவும் செயற்படுவதற்கு நிர்வாகப் பிரிவு அமுலாக்கப்படுகிறது. நிர்வாகப் பிரிவினூடாக பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற்று அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கும் நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளுக்கு வினைத்திறனான சேவையொன்று வழங்கப்படுகிறது.

- அமைச்சினதும் மற்றும் அமைச்சுக்கு உரித்தான சகல நிறுவனங்களின் பதவியணிக்கான நிறுவனம்சார் மற்றும் நிர்வாகம்சார் செயற்பாடுகளினைக் கண்காணித்தல்.
- உள்ளூர் மற்றும் வெளியூர் பயிற்சியினை வழங்குவதனூடாக மனித வளத் திறனினை மேம்படுத்துதல்.
- அமைச்சின் விடயப் பரப்புக்கு உரித்தான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், சட்டவரைவுகள் போன்றவற்றினைச் சரியானவாறு முன்வைப்பதனூடாகக் கொள்கை வகுத்தலுக்குப் பங்காற்றுதல்.

- தேவையான மனித வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## அபிவிருத்திப் பிரிவு

இவ்வமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளின் நோக்கங்களினை அடையப் பெறுவதற்கு ஆலோசனைகளினை வழங்குதல், வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்பு இடம்பெறுதல் இப்பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாகும். அதில் கிராமப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் பொருளாதாரத்தினைச் சிறந்ததாக மேம்படுத்தும் செயற்பாட்டுடன் தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுவரும் நிறுவனத்தின் மேலதிக செயலாளர் (கிராம அபிவிருத்தி) ஊடாகவும், சமூகப் பாதுகாப்புத் தேவைப்படும் நபர்களுக்கு அடையளாம் காணப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுவரும் நிறுவனத்தின் மேலதிக செயலாளர் (சமூகப் பாதுகாப்பு) ஊடாகவும், நபர்களுக்கு மற்றும் சமுதாயத்தினருக்கு அவர்களின் வாழ்க்கையினை முகாமை செய்வதற்கு, தீர்மானமெடுப்பதற்கு மற்றும் அவர்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழலினை வடிவமைப்பதற்கு செயலூக்கத்துடன் பங்கேற்பதற்கு இயலுமையினை வழங்குவதற்கு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கிய சமுதாயத்தினை வலுவூட்டும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தின் மேலதிக செயலாளர் (சமூக வலுவூட்டல்) ஊடாகவும் கணக்காணிப்பு இடம்பெறுகிறது.

## கணக்குகள் பிரிவு

செயற்பாடு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான வருடாந்த ஒருக்கீடுகளினை வழங்குதல், முகாமை செய்தல், கொடுப்பனவுகளினைச் செய்வதுடன், அரச கணக்குகளினை முன்னெடுப்பதன் வெளிப்படைத்தன்மையுடன், நிதிப் பிரமாணத்தினூடாக பிரதான கணக்காளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், நிதி ஒழுக்கத்துடன் முன்னெடுப்பது ஒப்படைப்பட்டுள்ள பிரிவு கணக்குகள் பிரிவாகும்.

அமைச்சுக்கான கணக்குகள் செயற்பாடுகள் மற்றும் மொத்தக் கொள்முதல் நடைமுறையினை முன்னெடுப்பதற்கு மேலாக திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் சபைகளின் கணக்குகளினைக் கண்காணித்தலும் இடம்பெறுகிறது.

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, அமைச்சின் செயலாளருக்கு நேரடியாகப் பொறுப்பினைக் கூறும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் செயலாக்கப்படுவதுடன், அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுவரும் சேவைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினைத் தரமானதாகவும் மற்றும் வினைத்திறனாகவும் முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான நிதியினைக் கணக்காய்வு செய்தல், செயற்றிறன் கணக்காய்வு, முகாமைத்துவக் கணக்காய்வு, சுற்றுச்சூழல் கணக்காய்வு, திட்ட நிர்வாகக் கணக்காய்வு மற்றும் கவனத்திற் கொள்ளக்கூடிய துறைகளினை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வினை முன்னெடுப்பதனூடாக எதிர்பார்த்த அபிவிருத்தி இலக்குகளினை எட்டுவதற்கு வழிகாட்டல்களினை வழங்குவதும் இடம்பெறுகிறது.

## திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அபிவிருத்திப் பிரிவுகளின் விடயப் பரப்புக்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களினைத் திட்டமிடுவதற்குத் தேவையான வசதிகளினை வழங்குதல், அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களினைச் செயற்படுத்துதல், முன்னேற்றத்தினை முகாமை செய்தல் மற்றும் பிற நேர் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினூடாக செயலாக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களினை ஒருங்கிணைத்தல், திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவினால் இடம்பெறுகிறது. மேலும் வெளிநாட்டு உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் கணக்காணிப்புச் செயற்பாடுகளும் இப்பிரிவினூடாக இடம்பெறுகிறது.

## உள்ளகச் செயற்பாட்டிற்கு அலகொன்றினை நிறுவுதல்.

அரச உத்தியோகத்தர்களின் நேர்மையினை உறுதிசெய்து, இலஞ்சம் மற்றும் ஊழலற்ற பொதுச் சேவையினை இலங்கையில் உருவாக்குவதன் முக்கியத்துவத்தின் மீதே அரசின் முதன்மையான கவனம் உள்ளது. அரச துறையில் வலுவான ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளினை அறிமுகப்படுத்துதல், அரசியலமைப்பின் 156 வது பிரின் கீழுள்ள ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் மகாநாடு (UNCAC) உட்பட பிற ஊழல் எதிர்ப்பு சர்வதேச உடன்படிக்கைகளினை செயற்படுத்துவதற்காக இலங்கையிலுள்ள கடப்பாடுகளுக்கிணங்க, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழலினைத் தடுப்பதற்கான சட்டம், விரைவில் பிரகடனப்படுத்தப்படவுள்ள இலஞ்சம் மற்றும் ஊழலினைத் தடுக்கும் தேசிய செயற்றிட்டம் (2025-2029) மற்றும் அரசின் பிற கொள்கை நோக்கங்களுடன் இணங்குகிறது. அதன்

பிரகாரம், இலங்கையில் அரச துறையில் ஊழலினைக் கட்டுப்படுத்தும் செயல்முறையின் ஒரு முக்கிய முன்னெடுப்பாக, அரச நிறுவனங்கள் முழுவதும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை மற்றும் நேர்மையினை வளர்க்கும் ஒரு கலாசாரத்தினை உருவாக்கி, சகல பிரஜைகளுக்கும், அரச சேவைகளினைத் திறம்பட வழங்குவதற்காக, ஜனாதிபதி செயலாளரின் PS/SB/Circular/2/2025 என்ற இலக்க மற்றும் 2025,02,18 ஆந் திகதிய சுற்றுநிரூபத்தின் பிரகாரம், எமது அமைச்சில் உள்ளகச் செயற்பாட்டு அலகொன்று நிறுவப்பட்டுள்ளது.

## உள்ளகச் செயற்பாட்டு அலகின் முக்கியமான நோக்கங்கள்.

I. நிறுவனத்திற்குள் ஊழலினைத் தடுத்தல் மற்றும் நேர்மையான கலாசாரமொன்றினை வளர்த்தல்.

II. நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையினை உறுதி செய்தல் மற்றும் நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பிலான தகவல்களனைப் பொதுமக்கள் அணுகுவதை உறுதி செய்தல்.

III. நிறுவனத்தினுள் அறநெறிசார்ந்த நிர்வாகத்தினை ஊக்குவித்தல்.

IV. முறைகேடுகளினை அறிக்கையிடுவதை வலுவூட்டுதல், தகவல்களினை வெளிப்படுத்துபவர்களினைப் பாதுகாத்தல் மற்றும் இரகசியத்தன்மையினை பேணுவதற்கான பாதுகாப்பு மற்றும் அணுகக்கூடிய திட்டமொன்றினைத் தயாரித்தல்.

V. சட்ட அமுலாக்கல் நிறுவனங்கள் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களினைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுடன் இணைந்து சட்டத்தினை அமுலாக்கம் செய்வதற்கு உதவுதல்.

## உள்ளகச் செயற்பாட்டு அலகின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

நிறுவன ஒருமைப்பாட்டின் முக்கிய கூறுகளினை இலக்காகக் கொண்டு, செயலூக்கமான, தெளிவான மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட ஊழல் எதிர்ப்பு முயற்சிகளினை உறுதி செய்வதற்காக, பின்வரும் குறிப்பிட்ட பொறுப்புக்களும் மற்றும் பணிகளும் உள்ளகச் செயற்பாட்டுப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

I. நிறுவனத்தில் காணப்படும் அமைப்பு ரீதியான தடைகளினைக் (systemic bottlenecks) கண்டறிவதற்காக தற்போதைய செயல் நடைமுறைகள் மற்றும் சுற்றறிக்கைகளினைப் பரீட்சித்தல் மற்றும் செயற்பாட்டுத் திறனினை அதிகரிப்பதற்கு அவற்றினை எளிமையாக்குதல்.

II. ஊழல் இடர் மதிப்பீட்டினை (Corruption Risk Assessment) முன்னெடுப்பதனூடாக நிறுவனத்தில் ஊழல் மற்றும் நெறிமுறையற்ற நடத்தைக்கு ஆளாகக்கூடிய துறைகளினைக் கண்டறிதல் மற்றும் இலக்கிடப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளினை எடுத்தல்.

III. நிறுவனத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட ஊழல் எதிர்ப்பு நோக்கங்கள் மற்றும் மூலோபாயங்களினை உள்ளடக்கிய நிறுவன இணக்கச் செயற்பாட்டுத் திட்டமொன்றினைத் தயாரித்து அமுலாக்குதல்.

IV. தேசிய ஊழல் எதிர்ப்பு செயற்றிட்டத்துடன் நிறுவனம்சார் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளினையும் ஏற்பாடு செய்து தேசிய ஊழல் எதிர்ப்பு மூலோபாயங்களுக்கு இணங்குதல்.

V. 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம் உட்பட தேசிய மற்றும் சர்வதேச ஊழல் எதிர்ப்புச் சட்டத்துடன், நிறுவனத்தின் இணக்கப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கு இணக்கப்பாட்டு மீளாய்வினை (Compliance Assessment) முன்னெடுத்தல் மற்றும் மேம்படுத்தவேண்டிய துறைகளினைக் கண்டறிதல்.

VI. சகல அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பிலான சொத்துப் பிரகடனங்களினை தேவைகளுக்கிணங்க உறுதிப்படுத்துதல் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுப் புலனாய்வு ஆணைக்குழுவின் கட்டளைகள் மற்றும் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்திற்கிணங்க கடப்பாட்டிலுள்ளவர்களுக்கிடையேயான முரண்பாடுகளினைக் கையாளுதல்.

VII. நிறுவனத்திற்குள் நிகழும் ஊழல் மற்றும் நெறிமுறையற்ற நடத்தை தொடர்பிலான முறைப்பாடுகளினைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பிலான பாதுகாப்பு முறைமையொன்றினை அமைத்தல், அத்தகைய சகல முறைப்பாடுகள் தொடர்பில் உரிய உத்தியோகத்தர்கள் அல்லது அலகினால் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக உறுதிப்படுதுதல் மற்றும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையினை உறுதி செய்து, புலனாய்வினை முன்னெடுத்த தரப்பினர்களுக்கு தொடர்ச்சியான நாளதுவரைப்படுத்தலினை வழங்குதல். தேவைக்கேற்றவாறு, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் புலனாய்வுக்கான விடயங்களினைத் தேடுதல் அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களினைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல்.

VIII. நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைகளினை விவரிக்கும் பிரஜைகள் பட்டயத்தினை உருவாக்கி வெளியீடு செய்தல்.

IX. அரச உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்க வேண்டிய தரப்படுத்தப்பட்ட நெறிமுறைத் தொகுப்பு உட்பட, அறநெறிசார்ந்த நிர்வாகத்தினை ஊக்குவிக்கும் கொள்கைகளினை அமைத்தல் மற்றும் அமுலாக்கம் செய்தல்.

X. ஊழல் எதிர்ப்புக் கோட்பாடுகளுக்கு அர்ப்பணிப்புடன் உந்தப்படுவதற்காக பணியாட் தொகுதியினைப் பயிற்றுவித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல் உட்பட பிற நடவடிக்கைகளினை எடுத்தல்.

XI. இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களினைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு மற்றும் தேசிய ஊழல் எதிர்ப்புக் கட்டமைப்பினூடாக நடாத்தப்படும் இணக்க மதிப்பீட்டு செயல்முறைக்கு நிறுவனம் பங்குகொள்ளும் எனவும் அத்துடன் சீரமைப்பதை உறுதி செய்து, தேசிய ஊழல் எதிர்ப்பு இணக்க மதிப்பீடு (National Anti-Corruption Integrity Assessment) தொடர்பில் ஒரு நிறுவன மையமாகச் செயற்படுதல்.

XII. அலகின் கடமைகளினை நிறைவேற்றும்போது தொடர்தேர்ச்சியான வழிகாட்டுதல் மற்றும் உதவியினைப் பெற்றுக் கொள்வதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களினைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுடன் தொடர்புகளினைப் பேணுதல்.

XIII. உள்ளகச் செயற்பாட்டு அலகின் செயற்பாடுகள், ஊழல் எதிர்ப்பு முயற்சிகளின் முன்னேற்றம், எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளினைச் சுருக்கமாகக் கூறும் காலமுறை மற்றும் ஆண்டு அறிக்கைகளினைத் தயாரித்தல்.

XIV. தனியார் துறையின் பங்குதாரர்களின் பங்கேற்புடன் இணக்கத்தினை மேம்படுத்துவதற்கான திட்டங்களினைத் தயாரிப்பதற்கான திட்டங்களினைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

## வெளிநாட்டு உதவி கிடைக்கப் பெறும் செயற்றிட்டங்களின் தகவல்கள்

| | செயற்றிட்டத்தின் பெயர் | பங்களிப்பு நிறுவனம் | செயற்றிட்டத்தின் நிதி மதிப்பீடு ரூ.மி. | செயற்றிட்டத்தின் காலவரையறை |
|---|---|---|---|---|
| 1 | உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு மீட்பு அவசரகால உதவிச் செயற்றிட்டம். (ADB) - மானியக் கூறு | ஆசிய அபிவிருத்தி வங்கி | ரூ. 695.394 மி. | 2022 ஆகஸ்டு தொடக்கம் 2026 ஆகஸ்டு வரை |
| 2 | உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு மீட்பு அவசரகால உதவிச் செயற்றிட்டம். (ADB) - கடன் கூறு | ஆசிய அபிவிருத்தி வங்கி | ரூ. 1890 மி. | 2022 செப்ரெம்பர் தொடக்கம் 2026 ஆகஸ்டு வரை |
| 3 | உணவுப் பாதுகாப்புச் செயற்றிட்டம் | உலக வங்கி | ரூ. 2738 மி. | 2023 - 2027 |

# அத்தியாயம் 02

# முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

## 2.1 சட்ட ஏற்பாடுகளினை வலுப்படுத்துதல்

### அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்ட வரைவு

அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சாசனத்திற்கிணங்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகள் தொடர்பிலான சட்ட வரைவினைத் தயாரிப்பதற்கு 2025.04.21 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அங்கவீனமுற்ற நபர்களின் தேசிய சபையினால் புதிய மாதிரி வரைவொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதனைச் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு முன்வைத்து அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகள் தொடர்பிலான சட்டவரைவினைத் தயாரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### சைகை மொழிச் சட்டவரைவு

சைகை மொழியினை முறைசார் தொடர்பாடல் ஊடகமொன்றாக அங்கீகரிப்பதற்கு வழிசெய்யும் வகையில் பிரேரிக்கப்பட்ட சைகை மொழிச் சட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு கொள்கைசார் அங்கீகாரம் 2025.06.02 ஆந் திகதி புதிய அமைச்சரவையினால் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இதுவரை சட்ட வரைஞர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வரைவு சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அவதானிப்புக்களினைப் பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கமைவாக சைகை மொழிச் சட்ட வரைவு மீதான மேல் நடவடிக்கை எடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### அங்கவீனமுற்ற நபர்களுக்கான பிரவேசிப்புக் கட்டளை வர்த்தமானி

அரச கட்டிடங்கள், பிரசித்திபெற்ற இடங்கள் மற்றும் சேவைகளினை வழங்கும் இடங்கள் அங்கவீனமுற்ற நபர்கள் பிரவேசிக்கக்கூடியவாறு தயாரிப்பதற்காக 2006.10.17 ஆந் திகதி 1467/15 என்ற இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பிரவேசிப்புக் கட்டளை வர்த்தமானி மற்றும் அதனைத் திருத்தி வெளியிடப்பட்டுள்ள 1619/24 என்ற இலக்க மற்றும் 2009.09.18 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியினை, தற்போதைய சூழ்நிலைக்கேற்றவாறு மீளவும் திருத்துவது இடம்பெற்றுள்ளதுடன் குழுவின் இறுதி அவதானிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

### அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசியக் கொள்கையினைத் தயாரித்தல்.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தற்போதுள்ள தேசியக் கொள்கையினை நாளதுவரைப்படுத்தி மீளவும் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## முதியோர்களுக்கான தேசியக் கொள்கையினைத் தயாரித்தல்.

2006 ஆம் ஆண்டில் முதியோர்களுக்கான கொள்கைகள் தொகுப்பொன்று வெளியீடு செய்யப்பட்டுள்ளதுடன், அக்கொள்கையினைக் காலத்தின் தேவைகளுக்கேற்ப மாற்றி புதிய கொள்கையொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும் என முதியோர்களுக்கான தேசிய சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வேகமாக அதிகரித்துவரும் முதியோர் சனத்தொகையினால் ஏற்படும் சிக்கலான சவால்களினை எதிர்கொள்வதற்கு இலங்கையில் முதியோர்களுக்கான முழுமையான தேசியக் கொள்கையொன்று தேவை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் சனத்தொகை மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தின் 2012 - 2024 தரவுகளின் பிரகாரம் 60 வயது மற்றும் அதனிலும் கூடிய சனத்தொகை 1981 ஆம் ஆண்டில் 6.6%, 2012 ஆம் ஆண்டில் 12% வரை இருமடங்காகவும், 2024 ஆம் ஆண்டில் 18% வரை அதிகரிக்கும் எனக் காட்டப்பட்டுள்ளது. இத் தேவைப்பாட்டினை எதிர்கொள்வதற்கு முதியோர்களுக்கான தேசிய சபையினால் இலங்கையில் முதியோர்களுக்கான தேசியக் கொள்கையொன்றினைத் தயாரிப்பதற்கு கொள்கை வகுப்பாக்கக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அக்கொள்கை வகுப்பாக்கக் குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள முதியோர் தேசியக் கொள்கை, முதியோர்களுக்கான தேசிய சபை, தேசியத் திட்டமிடல் திணைக்களம் மற்றும் இலங்கைப் பாராளுமன்றத்தின் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் 2025 ஒக்டோபர் 01 ஆந் திகதி நடைபெற்ற தேசிய முதியோர் தின நிகழ்வில் இலங்கையில் முதியோர்களுக்கான தேசியக் கொள்கையாக மும்மொழியிலும் அச்சிடப்பட்டு வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

## முதியோர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டம்

இலங்கைவாழ் முதியோர்களின் சுதந்திரம், பராமரிப்பு, சுயநிறைவு, பங்கேற்பு மற்றும் கண்ணியத்தினை உறுதி செய்து முதியோர்களின் நலன்புரி மற்றும் உரிமைகளினை ஊக்குவிப்பதற்காக 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க திருத்தம் செய்யப்பட்ட சட்டத்தினைக் கொண்டு முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் முதியோர்களுக்கான தேசிய செயலகம் நிறுவப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களினை காலத்தின் தேவைகளுக்கேற்ப மீளவும் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும் என 2019.05.14 ஆந் திகதி நடாத்தப்பட்ட முதியோர்களுக்கான தேசிய சபையின் 20 வது அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல 2019 ஆம் ஆண்டில் சட்ட விவகாரங்கள் (ஊழல் தடுப்பு) மற்றும் ஊடகங்கள் தொடர்பில் துறைசார் கண்காணிப்புச் செயற்குழுவினால் முதியோர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டம் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், 2023.05.10 ஆந் திகதி

நடாத்தப்பட்ட முறைகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பில் நடாத்தப்பட்ட செயற்குழுவினால் இச்சட்டங்கள் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் அப்போதைய தேசிய சபையினால் இச் சட்டங்களினை மீளவும் திருத்தம் செய்வதற்காக சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அச்சபையினால் தயாரிக்கப்பட்ட சட்ட வரைவு தொடர்பில் பல்வேறு பங்குதாரர்களின் கருத்துக்களினைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றதன் பின்னர் அமைச்சரவைப் பத்திரத்தினூடாக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அவ் அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெறுதல் தொடர்பில் விழிப்புணர்வூட்டுவதற்கு மற்றும் ஆரம்ப வரைவினைத் தயாரிப்பதற்கு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ளது.

## முதியோர் இல்லங்கள் தொடர்பிலான ஒழுங்கு விதிகள் மற்றும் வழிகாட்டிகளினைத் தயாரித்தல்.

உலகில் முதியோர் சனத்தொகை அதிகரிப்பு என்ற நிகழ்வுக்கு இணையாக இலங்கையின் முதியோர் சனத்தொகை பரவலும் ஒப்பீட்டளவில் அதிகரித்து வருகிறது என்பதுடன், அதனூடாக ஆதரவற்ற முதியோர் சமூகத்திற்குப் பாதுகாப்பினை வழங்குதல் மற்றும் அவர்களின் நலனுக்காக முதியோர்களுக்குச் சேவைகளின் வழங்கும் சகல நிறுவனங்களினையும் ஒழுங்குபடுத்துவது தொடர்பிலான வழிகாட்டுதல்கள் மற்றும் விதிமுறைகளினைத் தயாரிப்பதற்காக 2025.05.30 ஆந் திகதி நடாத்தப்பட்ட முதியோர்களுக்கான தேசிய சபையினால் ஐந்து பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் சகல முதியோர் இல்லங்களினையும் ஒழுங்குபடுத்துவதற்கான கட்டளைகளினைத் தயாரிக்கும் ஆரம்ப வரைவு 2025.12.31 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட நிறைவு பெற்றுள்ளதுடன், அது முதியோர்களுக்கான தேசிய சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளன.

## 2.2 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்

# அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD)

**அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.12.31 ஆந் திகதி வரை.**

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | **650.47** | **58.71** |
| மீண்டுவரும் | **34.53** | **17.02** |
| மொத்தம் | **685.00** | **75.73** |

## பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.12.31 ஆந் திகதி வரையிலான பௌதிக முன்னேற்றம்

**திறைசேரி ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.**

**மூலதன ஒதுக்கீடுகள்**

நிதியுதவியினை வழங்குதல்.

- 365 அங்கவீனமுற்ற நபர்களுக்கு மருத்துவ உதவியினை வழங்குதல் (சத்திர சிகிச்சை, மருந்துகள் மற்றும் சிகிச்சைகளுக்குச் செல்வதற்கான பிரயாணச் செலவுகள் தொடர்பில்) - நிதி முன்னேற்றம் ரூபா. 9.50 மில்லியன்.
- 539 அங்கவீனத்தினைக் கொண்ட மாணவர்களுக்கு கல்விசார் உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 11.10 மில்லியன்.
- 184 அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுய தொழில் உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 7.90 மில்லியன்.

உதவி உபகரணங்களினை வழங்குதல் (மூக்குக் கண்ணாடிகள், சக்கர நாற்காலிகள், கையூன்றுகோல்கள் போன்றன)

- 10,418 அங்கவீனமுற்ற நபர்களுக்கு உதவி உபகரணங்களினை வழங்குதல் மற்றும் உதவி உபகரணங்களினைக் கொள்வனவு செய்தல் - நிதி முன்னேற்றம் ரூபா. 15.58 மில்லியன்.

**அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சேவைகளினை வழங்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவியினை வழங்குதல்.**

- அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சேவைகளினை வழங்கும் 5 தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 1.00 மில்லியன்

**அங்கவீனமுற்ற நபர்களின் திறன் விருத்தியினை ஊக்குவித்தல்.**

- அங்கவீனமுற்ற நபர்களின் திறன் விருத்தியினை ஊக்குவிப்பதற்கு 14 நிறுவனங்களுக்கு உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 1.18 மில்லியன்.

**சைகை மொழி  சான்றிதழ் வழங்கும் பாடநெறயினை நடாத்துதல்**

- 68 அரச உத்தியோகத்தர்களுக்கு சைகை மொழி சான்றிதழ் வழங்கும் பாடநெறியினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.37 மில்லியன்.

**மூலதனச் சொத்துக்களினைக் கையகப்படுத்துதல்**

- அக்குரஸ்ஸ முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்திற்குத் தேவையான உபகரணங்களினைப் பெற்றுக்கொள்ளல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.11 மில்லியன்.

**அங்கவீனமுற்ற நபர்களுக்குத் தரவு திட்டமொன்றினை அமைத்தல்.**

2025 பாதீட்டு முன்மொழிவினூடாக ரூபா. 100 மில்லியன் தரவுத் திட்டமொன்றினை அமைப்பதற்கு ஒதுக்கீடுகள் பெறப்பட்டுள்ளன. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம், மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்குப் பயன்படுத்தும் செயற்பாடுத் திட்டத்தினைப்  பயன்படுத்தி NSPD மக்கள் தொகை செயற்பாட்டு ஆவணத் திட்டம் தயாரிக்கப்பட்டது.  மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்கள உத்தியோகத்தர்களின் உதவியுடன் கணக்கெடுப்பு வினாக்கொத்து  தயாரிக்கப்பட்டுள்ளது. களப் பணி, அலுவலகப் பணி மற்றும் கண்காணிப்புச் செயற்பாடுகள்,  தொழில்நுட்ப அறிவு தொடர்பில் தேவையான மனித வளங்களினை அடையாளம் காணும் பணி இடம்பெற்றுள்ளது. பட்டியலிடுதல் மற்றும் தரவுகளினைச் சேகரிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட வழிமுறைக்கு சபை அங்கீகாரம் மற்றும் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின்  செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் இடம்பெற்றுள்ளது.  மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம், கல்வி அமைச்சு, டிஜிட்டல் அமைச்சு மற்றும் பொது நிர்வாக அமைச்சுடன் இணைந்து கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதில் வினாக் கொத்துத்  தொடர்பில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

மென்பொருளினைத் தயாரிப்பதற்கு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. வகைப்பாடு தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களினை அறிவதற்கு இணையத் தளத்தில் வெளியீடு செய்யப்பட்டுள்ளதுடன், சைகை மொழியிலும் தற்போது பதிவேற்றம் upload செய்யப்பட்டுள்ளது. தரவுத் திட்டத்தினைத் தயாரிப்பதற்குத் தேவையான நான்கு மடிக் கணனி Laptop மற்றும் ஒரு அச்சுப் பொறி இயந்திரத்தினைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தரவுத் திட்டத்தினை அமைத்தல் தொடர்பில் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களினை விழிப்புணர்வூட்டல் (நிகழ்நிலைத் திட்டத்தில்) 2015.11.18 ஆந் திகதி இடம்பெற்றுள்ளது. அங்கவீனமுற்ற நபர்களின் தகவல்களினைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களினை விழிப்புணர்வூட்டுவதற்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் காட்சிப்படுத்துவதற்கு துண்டுப் பிரசுரமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. - (நிதி முன்னேற்றம் ரூபா. 9.89 மில்லியன்).

## மீண்டுவரும் ஒதுக்கீடுகள்

### விக்டோரியா இல்லத்திற்கு மாதாந்த பராமரிப்புச் செலவுகளினை வழங்குதல்.

- அங்கவீனமுற்ற நபர்களுக்காக முன்னெடுக்கப்பட்டுவரும் விக்டோரியா இல்லத்தின் மாதாந்தப் பராமரிப்புச் செலவுகளினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 15.00 மில்லியன் (120 அங்கவீனமுற்ற நபர்கள் வசிக்கின்றனர்).

### அங்கவீனமுற்ற நபர்களுக்கு தொழில் வாய்ப்புக்களினை வழங்குதல்.

- 39 அங்கவீனமுற்ற நபர்களுக்கு பிரத்தியேகப் பிரிவில் தொழில் வாய்ப்புக்களினை வழங்குதல் மற்றும் அவர்களின் சம்பளத்திலிருந்து 50% (ஆகக்கூடியது ரூபா. 15,000 வரை அரசினால் கொடுப்பனவு இடம்பெறுகிறது) - நிதி முன்னேற்றம் ரூபா. 0.83 மில்லியன்.

## பிற ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்,

### அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீட்டு வசதி மற்றும் சுகாதார வசதிகளினை வழங்குதல்.

சுப்பிரி வாசனா சம்பத லொத்தர் நிதியத்தின் வருமானத்திலிருந்து 5% ஒதுக்கீடுகள் இது தொடர்பில் வருடாந்தம் ஒதுக்கப்படுகிறது. அதன் பிரகாரம் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

- 403 அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீடமைப்பு உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 56.23 மில்லியன்
- 103 அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுகாதார வசதிகளினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 10.96 மில்லியன்

**அங்கவீனமுற்ற நபர்களுக்கான செயலக நிதியம்**

- 86 அங்கவீனமுற்ற நபர்களுக்கு மருத்துவ உதவிவினை வழங்குதல் (சத்திர சிகிச்சைகள், மருந்துகள் மற்றும் சிகிச்சைகளுக்குச் செல்வதற்காக பிரயாணச் செலவுகள் தொடர்பில்) - நிதி முன்னேற்றம் ரூபா. 1.99 மில்லியன்.
- 81 அங்கவீனமுற்ற மாணவர்களுக்கு கல்விசார் உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 1.99 மில்லியன்.
- 21 அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுய தொழில் உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.98 மில்லியன்.

**அங்கவீனமுற்ற நபர்களுக்கு மருத்துவ உதவியினை வழங்குதல்.**

அங்கவீனமுற்ற நபர்களுக்கு ஜனாதிபதி செயலகத்தினால் இவ்வருடத்திலிருந்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

- 197 அங்கவீனமுற்ற நபர்களுக்கு மருத்துவ உதவியினை வழங்குதல் (சத்திர சிகிச்சைகள், மருந்துகள் மற்றும் சிகிச்சைகளுக்குச் செல்வதற்காகப் பிரயாணச் செலவுகள் தொடர்பில்) நிதி முன்னேற்றம் ரூபா. 10.1 மில்லியன்.

# முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSE)

**அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் - 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.12.31 ஆந் திகதி வரை**

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 20.00 | 20.00 |
| மீண்டுவரும் | 200.00 | 196.64 |
| மொத்தம் | 220.00 | 216.64 |

**பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.12.31 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.**

**மீண்டுவரும் ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

**முதியோர்களுக்கு சுகாதார உதவியினை வழங்குதல்.**

- 4472 சிரேஸ்ட பிரஜைகளுக்கு செவிப்புலக் கருவிகள், கண்வில்லைகள் மற்றும் மூக்குக் கண்ணாடிகளினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 48,85 மில்லியன்.
- முதியோர்களுக்கு 16 மருத்துவ முகாம்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 10.23 மில்லியன்.

**முதியோர்களினைப் பராமரித்தல்**

- மாலிகாதன்ன, பன்னல மற்றும் கதிர்காமம் முதியோர் இல்லங்களின் நிர்வாக நடவடிக்கைகளுக்கான செலவினம் - நிதி முன்னேற்றம் ரூபா. 15.095 மில்லியன்.
- முதியோர்கள் தங்கள் இல்லங்களில் வாழ்வதற்குத் தேவையான ஆகக்குறைந்த வசதிகள் மற்றும் சுகாதசார வசதிகளினை வழங்குவதற்கு அமுலாக்கப்பட்ட “சுவபகசு” (வசதியான) நிதியுதவிப் பிரேரணைத் திட்டத்தின் கீழ் முதியோர்களுக்கு 2008 ஆம் ஆண்டு தொடர்பில் நிதியுதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா, 79.996 மில்லியன்.
- 13 முதியோர் இல்லங்களினைப் பழுதுபார்த்தல் மற்றும் உபகரணங்களினை வழங்குவதற்காக - நிதி முன்னேற்றம் ரூபா. 24.837 மில்லியன்.

**முதியோர் உரிமைகளினை மேம்படுத்துதல்.**

- 50,000 முதியோர் அடையாள அட்டைகளினை அச்சிடுதல், 44,889 முதியோர் அடையாள அட்டைகளினை வழங்குதல் மற்றும் 1100 லெமினேட் உறைகள் மற்றும் 65 லெமினேட் உபகரணங்களினைக் கொள்வனவு செய்தல் - நிதி முன்னேற்றம் ரூபா. 2.030 மில்லியன்.
- முதியோர்களுக்கான தேசிய சபையினை நடாத்துவதற்கு 9 சபைக் கூட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 1.259 மில்லியன்.
- முதியோர் பராமரிப்புச் சபையினை முன்னெடுப்பதற்கு 93 நீதிமன்ற அமர்வுகளினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 1.509 மில்லியன்.

**சமூக மற்றும் ஆன்மீக நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- முதியோர்களுக்கு 3 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் மற்றும் 2 கூட்டங்களினை நடாத்துதல் (முதியோர் தின நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் புது வருட வைபவ நிகழ்ச்சித் திட்டங்கள்) - நிதி முன்னேற்றம் ரூபா. 2.100 மில்லியன்.

**நிர்வாகச் செலவுகள்**

- 340 பிரதேச செயலகங்கள் மற்றும் 25 மாவட்டச் செயலகங்கள் தொடர்பில் நிர்வாகச் செலவுகளினை ஈடுசெய்தல் - நிதி முன்னேற்றம் ரூபா. 6.960 மில்லியன்.

**மூலதன ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்.**

- 74 பிரதேச செயலகங்களுக்கு தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களினைக் கொள்முதல் செய்தல், 52 கணனிகளினைக் கொள்முதல் செய்தல் மற்றும் 4 திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 19.851 மில்லியன்.

## முதியோர் நலன்புரித் தேசிய நிதியத்தினூடாக அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.

- முதியோர்களினைப் பராமரிப்பது தொடர்பிலான 9 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 1.69 மில்லியன்.
- 20 முதியோர் பகல் நேர பராமரிப்பு நிலையங்களினை அமைப்பதற்கு உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 30.73 மில்லியன்.
- திரிய பியச வீடமைப்புச் செயற்றிட்டத்தின் கீழ் 24 வீடுகளினை நிர்மாணித்தல் - நிதி முன்னேற்றம் ரூபா. 16.81 மில்லியன்.
- 13 முதியோர் பகல்நேர பராமரிப்பு நிலையங்களுக்கு உபகரணங்களினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 8.61 மில்லியன்.
- முதுமை குறித்து இளைஞர் சமூகத்திற்குக் கல்வி புகட்டும் 16 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். - நிதி முன்னேற்றம் ரூபா. 1.62 மில்லியன்.
- “ஆரோக்ய” மருத்துவ உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 875 முதியோர்களுக்கு மருத்துவ உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 21.85 மில்லியன்.
- முதியோர்களுக்கு 238 ஆன்மீகம்சார் சுற்றுலாப் பயணங்களினை ஏற்பாடு செய்தல் - நிதி முன்னேற்றம் ரூபா, 19.76 மில்லியன்.
- 205 முதியோர்களுக்கு சுய தொழில் உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 10.09 மில்லியன்.
- முதுமை தொடர்பில் பாடசாலை மாணவர்களினை விழிப்புணர்வூட்டும் 19 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். - நிதி முன்னேற்றம் ரூபா. 0.71 மில்லியன்.
- ஓய்வு காலத்திற்கு முன்னரான 23 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். - நிதி முன்னேற்றம் ரூபா. 2.29 மில்லியன்.
- முதியோர்களின் ஆரோக்கியமான வாழ்க்கை தொடர்பிலும் (யோகாப் பயிற்சி) மற்றும் டிஜிட்டல் கல்வியறிவு தொடர்பிலும் 7 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 5.52 மில்லியன்.
- கிராம மட்டத்தில் 469 முதியோர் சங்கங்களினை வலுவூட்டுதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 47.27 மில்லியன்.
- தெகிஅத்தகண்டிய சரண முதியோர் இல்லத்தின் நிர்வாகச் செலவுகள் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.24 மில்லியன்.
- பதிவு செய்யப்பட்ட முதியோர் சங்கங்களுக்கு 2000 அச்சிடப்பட்ட சான்றிதழ்களினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.35 மில்லியன்.

- கதிர்காமம் முதியோர் இல்லத்தின் கட்டுமானப் பொருட்கள் 100% கொள்வனவு செய்தல் 100% நிறைவு செய்தல் - நிதி முன்னேற்றம் ரூபா. 110.30 மில்லியன்.
- 4 முதியோர் இல்லங்களின் நிர்மாணிப்புப் பணிகளினை முன்னெடுத்தல் - நிதி முன்னேற்றம் ரூபா. 2.78 மில்லியன்.
- 2025 ஒக்டோபர் 01 ஆந் திகதி தேசிய முதியோர் தினம் கௌரவ பிரதமர் அவர்களின் தலைமையில் கொண்டாடுதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 4.84 மில்லியன்.

# இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)

**அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் - 2025 மற்றும் முன்னேற்றம் 2025.12.31 ஆந் திகதி வரை.**

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 30.00 | 17.00 |
| மீண்டுவரும் | 218.00 | 194.41 |
| மொத்தம் | 248.00 | 211.41 |

**பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.12.31 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்**

**மீண்டுவரும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்.**

**ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பிரேரணைத் திட்டங்களுக்கு புதிய அங்கத்தவர்களினை ஆட்சேர்ப்புச் செய்தல்.**

புதிய அங்கத்தவர்களின் ஆட்சேர்ப்பு எண்ணிக்கை 66,977 ஆகும்.

திரட்டப்பட்ட முதலாவது தவணைப் பணம் ரூபா. 318.68 மில்லியன்.

திரட்டப்பட்ட பின் தவணைப் பணம் ரூபா. 335.96 மில்லியன்.

பின் தவணைக் கொடுப்பனவினைச் செலுத்திய அங்கத்தவர்களின் எண்ணிக்கை 171,128 ஆகும்.

**அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் அங்கத்தவர்களுக்கு பிற பயன்களினை வழங்குதல்.**

37,386 ஓய்வூதியர்களுக்கு ரூபா. 452.37 மில்லியன் ஓய்வூதியக் கொடுப்பனவினை வழங்குதல்.

பிற பயன்கள் கிடைக்கப் பெற்ற 1750 உறுப்பினர்களுக்கு ரூபா. 38.71 மில்லியன் கொடுப்பனவினை வழங்குதல்.

**விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.**

சுயதொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு 2539 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் இளைஞர் குழுக்கள் தொடர்பிலான சுய தொழில்/ தொழில்முனைவு திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

சமூகப் பாதுகாப்புத் தொடர்பிலான விழிப்புணர்வினை அதிகரித்தல் மற்றும் வெகுசன ஊடகங்களினூடாக விளம்பரச் செயற்றிட்டங்களினை அமுலாக்குதல்.

- Whatsapp மற்றும் Face Book விளம்பர நடவடிக்கைகளினை முன்னெடுத்தல்.
- யு ரியூப் அலைவரிசை விளம்பரம்
- 02 வானொலி நிகழ்ச்சித் திட்டங்களினைத் தொகுத்து வழங்குதல்.
- 03 தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

**மூலதன நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்.**

**பதவியணிக்குத் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.**

- 7 குழுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் 405 உத்தியோகத்தர்களின் பங்கேற்பு மற்றும் 11 நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் தனிநபர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல் மற்றும் 13 பணியாட் தொகுதி உத்தியோகத்தர்களுக்கான தமிழ் மொழிப் பயிற்சிப் பாடநெறியினை நடாத்துதல். - நிதி முன்னேற்றம் ரூபா. 0.85 மில்லியன்.

**தகவல் தொழில்நுட்ப வசதிகளினை மேம்படுத்துதல்.**

- கணனி உதிரிப்பாகங்களினைக் கொள்வனவு செய்தல் - நிதி முன்னேற்றம் ரூபா. 2.90 மில்லியன்.

## வாடிக்கையாளர் சேவைகளினை மேம்படுத்துவதற்கு அலுவலக வசதிகளினை வழங்குதல்.

- தலைமை அலுவலகம், மாவட்ட அலுவலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு உபகரணங்களினைக் கொள்வனவு செய்தல். - (நிதி முன்னேற்றம் ரூபா. 9.70 மில்லியன்)

## வாகனங்களின் முன்னேற்றம் மற்றும் மேம்படுத்துதல்.

- பழுதுபார்க்கப்பட்ட வாகனங்களுக்கான கொடுப்பனவு - (நிதி முன்னேற்றம் ரூபா. 2.11 மில்லியன்)

## புதிய ஓய்வூதிய தகவல் முகாமைத்துவத் திட்டத்தினைத் தயாரித்தல்.

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் பயன்கள்/பங்களிப்புச் செயல்முறைகளினை டிஜிட்டல்மயப்படுத்துவதற்கு இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் தொழில்நுட்பப் பங்களிப்பினை ஒன்றுசேர்த்து பாதுகாப்பான, நம்பகமான மற்றும் பயனருக்கு உகந்த டிஜிட்டல் சேவையொன்றாக ஒருங்கிணைந்த கணனித் திட்டமொன்று **SSBTrustPOST** என்ற பெயரில் உருவாக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இதன் நோக்கம் பதிவு செய்தல் → OTP சரிபார்ப்பு → கொடுப்பனவு (விண்ணப்பம்/மாதாந்தம்) → வொலட்/கணக்கு முகாமைத்துவம் → மீளப் பெறுதல் **(Withdrawal)** நிர்வாகம் → SMS அறிவிப்பு → அறிக்கையிடுதல்/நிர்வாகம் என்ற முழுமையான செயல்முறை, பாதுகாப்பு மற்றும் பொறுப்பானதாக மாற்றுதல்

### பிரதான நோக்கங்கள்

1. தேசிய மட்டத்தில் பயனாளர் சேவைகளினை டிஜிட்டல் மயமாக்குதல் - பதிவு செய்தல், ஓய்வூதியக் கொடுப்பனவு, அறிக்கையிடுதல்.
2. OTP/ **SMS** ஊடாக பிரஜை சரிபார்ப்பு மற்றும் அறிவித்தல்
3. வங்கிப் பண பரிவர்த்தனை ஒருங்கிணைப்பு (**Peoples Bank IPG – Card/QR**)
4. தரவுப் பாதுகாப்பு, அணுகல் கட்டுப்பாடு, **audit trail** மற்றும் ஊழல் அபாயங்களினைக் குறைத்தல்.
5. **Debit/Credit** அட்டைகள் மற்றும் வங்கிக் கணக்குகளிலிருந்து **Online** கொடுப்பனவு, அடிப்படைப் பதிவு மற்றும் அஞ்சல் அலுவலக வலையமைப்பு. வங்கி முறைமை மற்றும் பிற திரட்டும் முகவர் நிறுவனங்களினூடான தவணைக் கொடுப்பனவினைச் செயலாக்குதல்.

இது தொடர்பில் ரூபா. 5.00 மில்லியன் ஒதுக்கப்பட்டபோதிலும் அஞ்சல் திணைக்களம், இக்கணனி அமைப்பினை இலவசமாக தயாரித்து வழங்குவதற்கு இணங்கியுள்ளதுடன், அதன் ஆரம்ப அபிவிருத்திப் பணிகள் 2025 ஆம் ஆண்டில் நிறைவு பெற்றுள்ளன.

# தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)

**அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் - 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.12.31 ஆந் திகதி வரை.**

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் (சீதுவக் கட்டிட வளாகத்தினை நிர்மாணித்தல்) | 180.00 | 29.57 |
| மூலதனம் (சிமாட் கிராமச் செயற்றிட்டம்) | 7.00 | 4.29 |
| மூலதனம் (பிற) | 50.00 | 24.21 |
| மீண்டுவரும் | 249.00 | 184.34 |
| மொத்தம் | 486.00 | 242.41 |

## மூலதன ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.

### தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு சீதுவப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு கட்டிட வளாகம்.

- A மற்றும் B என்றவாறு இரு பகுதிகளினைக் கொண்ட இக்கட்டிடத்தின் கட்டுமானம், 2017.01.01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2022 ஒக்டோபர் மாதம் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் திட்டமிடல் காலம் 2025 அக்டோபர் 30 ஆந் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. இக்கட்டிடம் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவு ரூபா. 1187.54 மில்லியனாகும். 2025 ஆம் ஆண்டில் சுவீகரிக்கப்பட்ட பௌதிக முன்னேற்றம் 0.31% ஆகும். திரண்ட நிதி முன்னேற்றம் ரூபா. 1001.31 மில்லியன், திரண்ட பௌதிக முன்னேற்றம் 98.50% ஆகும்.

## சிமாட் கிராம செயற்றிட்டம்

- 9 மாகாணங்களுக்கு உரித்தான தெரிவு செய்யப்பட்ட 9 கிராமங்களுக்கு, சமூகப் பணியில் இறுதியாண்டு பட்டப்படிப்பினைத் தொடரும் 18 மாணவர்கள் ஜனவரி மாதம் களப் பயிற்சியினை முன்னெடுத்துள்ளனர் என்பதுடன், கிராமப்புற நடவடிக்கைகளுக்கான சமூகப் பணிகளினை எளிதாக்குவது குறித்து அம் மாணவர்களுக்கு அடிப்படைக்கல்வி வழங்கப்பட்டுள்ளது. அந்த 18 மாணவர்களும் மார்ச் மாதத்தில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். மாணவர்களினால், கிராமங்களில் நிறுவப்பட்டுள்ள சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களுக்கான கிராமச் செயற்பாடுகளுக்கு வசதிகளினை வழங்கும் பணி முன்னெடுக்கப்பட்டது. சமூக உறுப்பினர்களின் பங்கேற்புடன் பொதுவான தேவைகளினைக் கண்டறிதல் அத்துடன் கிராமிய மகளிர் அபிவிருத்தி அமைப்புக்களினைச் செயலாக்குதல், "தூய்மையான இலங்கை" செயற்றிட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் பிற அடிப்படை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் அமுலாக்கப்பட்டுள்ளன. சிமாட் வேளாண்மை - (Smart Agriculture) குறித்து விவசாயிகளுக்கு நவீன முறைமைகள், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி மற்றும் வடிகால் திறன் குறித்த பயிற்சி, சிமாட் பொருளாதாரம் - **(Smart economy)** தொடர்பில் விற்பனைக்கான டிஜிட்டல் சந்தைப்படுத்தல் ஒத்துழைப்பு அல்லது ஒன்லைன்/ பேஸ்புக் சந்தையினை உருவாக்குதல், சிமாட் இளைஞர் மேம்பாடு - **(Smart Youth Development)** தொடர்பில் தனியார் மற்றும் அரச சாரா வேலைவாய்ப்புக்களின் பரவல், சிமாட் கல்வி - **(Smart Education),** சிமாட் நூலகம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வியினை அறிமுகப்படுத்துதல், பாடசாலைகளில் மின்னணு வளங்களுக்கான அணுகலினை அதிகரித்தல், சிமாட் சமூகப் பாதுகாப்பு - **(Smart Social Protection),** சமூக நலன்புரி, நுண்நிதியக் கடன் வசதிகள் மற்றும் பெண்களினைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவியினை வழங்கி மகளிர் அபிவிருத்திச் சங்கங்களினை செயலூக்கமாகுதல் இடம்பெற்றுள்ளது. (ரூபா. 4.29 மில்லியன்)

## மூலதனச் சொத்துக்களினைக் கையகப்படுத்துதல்

- உபகரணங்களினைக் கொள்வனவு செய்தலின் கீழ் 03 பிரதியெடுக்கும் இயந்திரங்கள், 10 லப்ரொப் கணனிகள், 2 டிஜிட்டல் திரை, 01 கமரா, தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் நூலகப் புத்தகங்களினைக் கொள்வனவு செய்தல் (ரூபா. 20.131 மில்லியன்)
- அம்பாறைப் பிரதேசத்திலுள்ள நிலையமொன்றினை புனர்நிர்மாணஞ் செய்தல், வாகனங்கள் மற்றும் பிரதியெடுக்கும் இயந்திரங்களினைப் பழுதுபார்த்தல் (ரூபா. 3.833 மில்லியன்).

## மீண்டுவரும் ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.

- சமூகப் பணி தொடர்பிலான பட்டப்படிப்புப் பாடநெறியினை 850 மாணவர்கள் தொடர்தல், சர்வதேச சமூகப் பணி தினக் கொண்டாட்டம், வெளி வளதாரர்கள் 30 பேர் தொடர்பில் கொடுப்பனவுகளினைச் செய்தல், கண்காணிப்பாளர்களுக்கான 4 திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல், 334 மாணவர்களுக்கு நிறுவனம்சார் புலமைப்பரிசில் உதவியினை வழங்குதல் மற்றும் 225 மாணவர்களுக்கு வருடாந்தப் பட்டமளிப்பு விழா நடாத்துதல் தொடர்பில்
- 4 நூலகக் குழுக் கூட்டங்கள் மற்றும் 2 நூலக ஆலோசனைக் குழுக் கூட்டங்களினை நடாத்தியமையினூடாக நூலக வசதிகளினை மேம்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டலினைப் பெற்றுக் கொள்ளல்.
- ஆராய்ச்சிப் பிரிவினூடாக ஆராய்ச்சித் திறன்களினை மேம்படுத்துவதற்கு 4 பதவியணி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல், 5 ஆய்விதழ்கள் மற்றும் 2 செய்தி மடல்களினை வெளியிடுதல், 2 ஆராய்ச்சிக் கருத்தரங்குகளினை நடாத்துதல் மற்றும் ரிதியகம முகாமில் வசிக்கும் " தெருப் பிச்சைக்காரர்கள்" தொடர்பிலான ஆய்வுகளினைப் பூர்த்தி செய்தல்.
- பயிற்சிப் பிரிவிரினூடாக 880 சமூக மட்ட உத்தியோகத்தர்களுக்கான 28 பயிற்சி வேலைத்திட்டங்களினை நடாத்துதல், கள மேமற்பார்வையாளர்கள் மற்றும் பீட மேற்பார்வையாளர்களுக்கு 5 பட்டறைகளினை நடாத்துதல்.

- முதுமையியல் துறையில் புதிய பட்டப்படிப்புப் பாடநெறி, உளவியல் மற்றும் உளவளத்துணை தொடர்பில் புதிய பட்டப்படிப்பு பாடநெறியினை ஆரம்பித்தல் தொடர்பிலான திருத்தப்பட்ட பிரேரணை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வடிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. உளவியல் மற்றும் உளவளத்துணை தொடர்பிலான புதிய பட்டப்படிப்புப் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான இணக்க அறிக்கை பூர்த்தி செய்து அரச சாரா உயர் கல்விப் பிரிவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.
- ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் சமூக சேவைகள் கல்லூரியினூடாக சமூகக் கொள்கைகள் மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பிலான புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு மீளாய்வுக் குழுவின் அறிக்கை கிடைத்துள்ளதுடன், சமூகப் பணிப் பட்டப்படிப்புப் பாடநெறியின் பாடவிதானம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வடிவத்தின் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

- ஆண் பெண் பாலினச் சமத்துவம் தொடர்பிலான ஆய்வு நிலையத்தினூடாக ஆண் பெண் சமத்துவம் தொடர்பிலான 6 விழிப்புணர்வூட்டும் நிகழச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல், ஈ நாளிதழ் 01 வெளியிடுதல் மற்றும் அறிவுசார் பட்டிமன்றமொன்று நடாத்தப்படுதல் இடம்பெற்றுள்ளது.
- மாணவர்களின் நலனுக்காக 02 நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 03 நலன்புரி வேலைத்திட்டங்கள், மருத்துவ மற்றும் விளையாட்டு உபகரணங்களினைக் கொள்வனவு செய்தல்.

- பாடத்திட்ட மேம்பாட்டு நிலையத்தினூடாக பாடத்திட்டம் தொடர்பிலான 3 மீளாய்வு பயிலரங்குகள் நடாத்தப்படுதல்.
- பதிவாளர் பிரிவினூடாக 17 பரீட்சைகள் நடாத்தப்படுதல் மற்றும் வருடாந்தப் பட்டமளிப்பு விழாவினை நடாத்துதல் இடம்பெற்றுள்ளது.
- தரச் சான்றிதழ் நிலையத்தினூடாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஆய்வு வேலைத்திட்டங்களின் தராதரத்தினை உயர்த்துவதற்கான 03 நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 2 பயிலரங்குகள் நடாத்தப்படுதல் இடம்பெற்றுள்ளது. அதேபோல பட்டப்படிப்புப் பாடநெறிகள் தொடர்பிலான தீர்மானமெடுக்கும் BGS பட்டப்படிப்பு கற்கை ஆய்வுச் சபைக் கூட்டம் 01 நடாத்தப்பட்டுள்ளது. (ரூபா.
- பிரதேச நிலையங்களில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பாடநெறிகளினை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்

  இதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூ. மில்லியன் 31.49 ஆகும்.

## நிறுவனத்தினூடாகக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட பாடநெறிகள்.

### சமூக சேவைகள் கல்லூரி

நிறுவனத்தின் சமூக சேவைகள் கல்லூரியினூடாக நடாத்தப்படும் சமூகப் பணி தொடர்பிலான முதுகலைப் பட்டப்படிப்புப் பாடநெறியின் (2021/2022, 2022/2023, 2023/2024) கல்வியாண்டுகளில் 252 மாணவர்கள் பாடநெறிகளினைத் தொடர்ந்துள்ளதுடன், சமூகப் பணி தொடர்பிலான டிப்ளோமா (2023.2024) பாடநெறியினை 17 மாணவர்கள் தொடர்ந்துள்ளனர். (செலவு - ரூபா. 7.737 மில்லியன், வருமானம் - ரூபா. 10.929). 2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 57 மாணவர்கள் சமூகப் பணியில் முதுகலைப் பட்டத்தினைப் பெற்றுள்ளனர்.

### பயிற்சிப் பிரிவு

நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவினூடாக தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச பயிற்சி நிலையங்களினை மையமாகக் கொண்டு உளவளத்துணை தொடர்பிலான டிப்ளோமாப் பாடநெறி (2023.2024, 2024/2025), ஆங்கிலம் தொடர்பிலான டிப்ளோமாப் பாடநெறி (2025) போன்ற கல்வியாண்டுகளுக்காக 657 மாணவர்கள் கல்விச்செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

2025 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கும் பட்டமளிப்பு விழாவில் 173 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### ஆராய்ச்சிப் பிரிவு

நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவினூடாக அமுலாக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கிடையே இலங்கை மகளிர் பணியகத்துடன் இணைந்து ஆண் பெண் பாலினப் பாகுபாடு தொடர்பிலான கற்கை ஆய்வு

சான்றிதழ்ப் பாடநெறி (70 மாணவர்கள்) மற்றும் ஆராய்ச்சி முறையியல் மற்றும் கல்விசார் ஆவணம் தொடர்பிலான சான்றிதழ் வழங்கும் பாடநெறி (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) (150 மாணவர்கள்) நடாத்துதல் முக்கியமாகும். - (செலவு - ரூபா. 0.4, வருமானம் - ரூபா. 0.4 மில்லியன்)

**நிறுவனத்தின் நிதியத்தினூடாக நடாத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- நூலக வசதிகளினை மேம்படுத்தலின் கீழ் நிறுவன மாணவர்களுக்கு வேலையரங்குகளினை நடாத்துதல் மற்றும் பணியாட் தொகுதிக்கு வேலையரங்கொன்றினை நடாத்துதல்.
- 14962 நூலகப் புத்தகங்கள் கணக்கெடுப்பட்டுள்ளன,
- தரச் சான்றிதழ் வழங்கும் நிலையத்தினால் கற்கை ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களின் தராதரத்தினை மேம்படுத்தும் 01 நிகழ்ச்சித் திட்டம், 01 பீட சபை மேம்பாட்டு கருத்தரங்கு, 02 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்,
- தரச்சான்றிதழ் வழங்கும் நிலையத்தின் கடித ஆவணங்களினை டிஜிட்டல்மயப்படுத்துவதற்கான கட்டணங்களினைக் செலுத்துதல் மற்றும் இது தொடர்பில் பயிற்சி வேலைத்திட்டமொன்று இடம்பெற்றுள்ளது.
- ஆசிய பசுபிக் சமூகப் பணி மகாநாட்டினை நடாத்துவதனூடாக சமூகப் பணித் துறையின் வளர்ச்சியினை நோக்கிப் பணியாற்றுதல்.
- ஆண் பெண் பாகுபாடு தொடர்பில் நிலையத்தினை விழிப்புணர்வூட்டும் 03 நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தேசிய மகாநாட்டினை நடாத்துதல் இடம்பெற்றுள்ளது.

  இதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூ. மில்லியன் 3.07 ஆகும்.

# கிராமிய அபிவிருத்திப் பணியகம் (RDB)

**அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.12.31 ஆந் திகதி வரை**

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 1100 | 878.94 |

**பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.12.31 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.**

**ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

- ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குமான 14022 கிராம அபிவிருத்தித் திட்டங்களினைத் (VDP) தயாரித்தல். - நிதி முன்னேற்றம் ரூபா. 129.41 மில்லியன்.

- **தெரிவு செய்யப்பட்ட 218 செயற்றிட்டங்களினை அமுலாக்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 643.59 மில்லியன்**

  ஆதரவு செயல்பாடுகள் (சாத்தியக்கூறு ஆய்வுகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள், பயிற்சிகள் மற்றும் களப் பயணங்கள்)

- செயற்றிட்டச் சாத்தியக்கூறுக்கான 23 சரிபார்ப்பு அறிக்கைகளினைத் தயாரித்தல்.
- 9 பங்குதாரர்களின் கூட்டங்களினை நடாத்துதல்.
- மாவட்டச் செயலாளர்களினை விழிப்புணர்வூட்டும் 2 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- தேசிய மட்டத்தில் பயிலுனர்களினைப் பயிற்றுவிக்கும் இரண்டு நாள் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் (TOT)
- மாவட்ட மட்டத்தில் பயிலுனர்களினைப் பயிற்றுவிக்கும் 25 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் (TOT)
- தொகுதி மட்டத்தில் 630 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்
- கள மட்டத்தில் செயற்றிட்டக் கண்காணிப்புத் தொடர்பிலான 15 களச் சுற்றுலாக்களினை முன்னெடுத்தல்
  இதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூ. மில்லியன் 51.7 ஆகும்.

## பிரஜா சக்தி தேசிய வேலைத்திட்டம்

“வளமான நாடு - அழகான வாழ்க்கை’ என்ற அரசின் கொள்கைக்கிணங்க செல்வந்தராகவிருப்பது என்பது பொருளாதார ரீதியில் வலிமையாக இருத்தல் மாத்திரமன்றி, கல்வி, சுகாதாரம், சிறந்த வாழ்க்கைச் சூழல் மற்றும் மனப்பான்மைகளினை வலுப்படுத்தலினூடாக தனிநபர் ஆளுமை விருத்தி, நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஒருங்கிணைப்பின் மூலம் உயர் வாழ்க்கைத் தரத்தினை அடைவது என இது வரையறுக்கப்படுகிறது.

அதன் பிரகாரம், வறுமையினை ஒழிப்பதாயின் நாட்டு மக்கள் எல்லா வகையிலும் செல்வந்தர்களாக மாற்றப்படுதல் வேண்டும்.

அதன் பிரகாரம், வலுவூட்டல் மற்றும் சமூகப் பாதுகாப்புத் தொடர்பில் இதுவரையில் காணப்பட்ட சகல செயல்முறையிலும் ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் பலவீனங்களினைத் தீர்த்து அது தொடர்பில் செயலூக்கமான சமூகப் பங்களிப்புடனான பொதுமக்களினை மையமாகக் கொண்ட அபிவிருத்திக் கட்டமைப்பொன்றினை அமைப்பதை அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு “பிரஜாசக்தி” வறுமையினை ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டம் அமுலாக்கப்படுகிறது.

- 9244 சமூக அபிவிருத்திக் குழுக்களினை அமைத்தல்

- பயிற்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழ் பயிலுனர்களினைப் பயிற்றுவிக்கும் 8 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்
- பிரஜாசக்தி செயலகத்திற்கான தொழில்நுட்ப உபகரணங்களினைப் பெற்றுக் கொள்ளல்

# கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)

**அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.12.31 ஆந் திகதி வரை.**

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 12.36 | 10.39 |
| மீண்டுவரும் | 59.64 | 51.87 |
| மொத்தம் | 72.00 | 62.26 |

**பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.12.31 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.**

பயிற்சிகள், ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீடுகளை மேற்கொள்ளுதல்.

- கிராம அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளவர்களின் அறிவு மற்றும் திறன்களினை மேம்படுத்துவதற்கு 10 களச் சுற்றுலாக்கள் மற்றும் 6 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்
- கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டுள்ள கள மட்ட உத்தியோகத்தர்களுக்கு அந் நிகழ்ச்சித் திட்டங்களின் நிலைபேறான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு 8 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டமை. (கிராம அபிவிருத்தித் திட்டங்களினைத் தயாரித்தல், தொழில்முனைவோர் மேம்பாடு, சமூக அமைப்பு முகாமைத்துவம், செயற்றிட்டங்களினைத் திட்டமிடுதல் மற்றும் முகாமைத்துவம், குடும்ப முகாமைத்துவம் போன்றன)
- கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் 6 களச் சுற்றுலாக்கள் மற்றும் ஒரு அறிக்கை தயாரித்தல்
- கிராம சமூகத்தின் சமூக - பொருளாதார வலுவூட்டலினை மேம்படுத்துவதற்கு 8 பயிற்சி வேலைத்திட்டங்களினை நடாத்துதல்

- குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்களின் சமூக பொருளாதார நிலையினை மேலோங்கச் செய்வதற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களினை வலுவூட்டுவதற்காக 4 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்

- கிராமங்களின் முன்னுரிமைச் செயற்றிட்டங்களினைக் கண்டறிவதற்காக 254 கிராம அபிவிருத்தித் திட்டங்களினை மீளாய்வு செய்தல்.
- இரண்டாம் நிலைத் தரவுகளினை அடிப்படையாகக் கொண்டு 14 அறிக்கைகளினைத் தயாரித்தல்.
- பிரஜா சக்தி இதழின் 2 தொகுதிகள் வெளியீடு (ஆண்டுக்கு இரு முறை வெளியாகும் இந்த இதழ் நிறுவனத்தின் இணையத்தளம் மற்றும் முகநூல் பக்கம் வழியாக வெளியிடப்பட்டுள்ளது).
- தரணய செய்தி மடலின் **(Tharanaya News Letter)** 4 தொகுதிகள் வெளியீடு.
- பிரஜாசக்தி தேசிய வேலைத்திட்டம் தொடர்பிலான பயிற்சித் தொகுதிகளினைத் தயாரிப்பதற்கு 3 பயிலரங்குகள் மற்றும் ஒரு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்படுதல். இங்கு கலந்துரையாடப்பட்ட பயிற்சித் தொகுதிகள் தொகுக்கப்பட்டு எதிர்காலத் திட்டங்களில் பயன்படுத்துவதற்காக "வலுவூட்டப்பட்ட சமூகத் தலைமைக்கான பயிற்சிக் கையேடு" தயாரிக்கப்பட்டுள்ளது.

- 5 திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல் (ஆராய்ச்சி முறையியல் குறித்த பயிற்சி)

- மாகாண மற்றும் மாவட்ட மட்ட உத்தியோகத்தர்களுக்கு பிரஜா சக்தி தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் மற்றும் பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல்.

இதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூ. மில்லியன் **4.83** ஆகும்.

- பொரள்ள மற்றும் பிலிமத்தலாவ விலுள்ள இரண்டு நிலையங்களிலுமுள்ள கட்டிடங்களினை புனர்நிர்மாணித்தல், கொழும்பு மற்றும் கண்டி மாவட்டச் செயலகங்களுக்கு ஒதுக்கீடுகளினை மாற்றி, திம்பிரிகஸ்யாய மற்றும் யட்டிநுவர பிரதேச செயலகங்களினூடாக இடம்பெற்றுள்ளதுடன், புதுப்பிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று நிறைவு பெற்றுள்ளது

- பொரள்ள மற்றும் பிலிமத்தலாவ விலுள்ள இரண்டு நிலையங்களின் பிரதியெடுக்கும் எந்திரங்கள் மற்றும் அச்சுச் பொறி எந்திரங்களினைப் பழுதுபார்த்தல்

- பொரள்ள மற்றும் பிலிமத்தலாவ விலுள்ள இரண்டு நிலையங்களின் வாகனங்களினைப் பழுதுபார்த்தல் இடம்பெற்றுள்ளது.

- பொரள்ள மற்றும் பிலிமத்தலாவ விலுள்ள இரண்டு நிலையங்கள் தொடர்பிலும் அலுவலக உபகரணங்களினைக் கொள்வனவு செய்தல்
- பிலிமத்தலாவ நிறுவனத்திற்கு CCTV கமரா பொருத்தப்பட்டுள்ளது.
  இதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூ. மில்லியன் **5.88** ஆகும்.

# உளவளத்துணைப் பிரிவு

**அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.12.31 ஆந் திகதி வரை.**

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 11.30 | 10.86 |

பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.12.31 ஆந் திகதி வரையிலான மற்றும் பௌதிக முன்னேற்றம்.

- சமூக விரோதச் செயல் மற்றும் நடத்தையில் அபாயத்தினைக் கொண்ட பாடசாலை மாணவர்களினை அடையாளம் காணுதல் மற்றும் அவர்களினை 1168 வேலைத்திட்டங்களுக்கு முன்வைத்தல் (பயனாளிகளின் எண்ணிக்கை 85,941)

- பள்ளி மாணவர்ளினை இணைய அடிமைத்தனம் மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டிலிருந்து விடுவிப்பதற்காக, 599 விழிப்புணர்வூட்டும் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல் (பயனாளிகளின் எண்ணிக்கை - 58,402)

- மனநலக் கோளாறுகளினை முன்கூட்டியே கண்டறிதல், சிகிச்சைக்காகப் பரிந்துரைத்தல் மற்றும் தற்கொலைத் தடுப்புக் குறித்து பாடசாலை மாணவர்களினை விழிப்புணர்வூட்டும் 930 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல் (பயனாளிகளின் எண்ணிக்கை - 57,215)

- இளைஞர் சமூகத்தின் உளத்தினை வலுவூட்டுவதற்கான 1186 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். (உளநலத்தினை சிறந்தவாறு முன்னெடுத்தல், போதைப்பொருள் பாவனையினைத் தடுத்தல், பாலியல் கல்வி மற்றும் தற்கொலைத் தடுப்பு குறித்த உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள்) பயனாளிகளின் எண்ணிக்கை 60.955.

- குடும்ப வன்முறை தடுப்பு குறித்த 809 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - பயனாளிகளின் எண்ணிக்கை 31,957

- வீட்டு/குடும்பம்சார்ந்த பிரச்சினைகள் குறித்து 1435 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல், - (பயனாளிகளின் எண்ணிக்கை 56,884).

- திருமணத்திற்கு முந்தைய 240 ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். (பயனாளிகளின் எண்ணிக்கை - 9396)

- உளவியல் சமூகத் தலையீடு தொடர்பில் சமூகத்தினை விழிப்புணர்வூட்டும் குழு உளவளத்துணை 372 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். (பதின்ம வயதுக் கர்ப்பம் தரித்தல், தற்கொலை தடுப்பு) - பயனாளிகளின் எண்ணிக்கை 17,596.
- மனக் கோளாறுகளினை முன்கூட்டியே கண்டறிதல், சிகிச்சைக்குப் பரிந்துரைப்பது தொடர்பில் சமூக மற்றும் உத்தியோகத்தர்களினை விழிப்புணர்வூட்டும் 1255 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். (பயனாளிகளின் எண்ணிக்கை 66,412)
- முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள முதியோர் இல்லங்களிலுள்ள டிமென்சியா அங்கவீனர் மற்றும் பிற முதுமையடைந்த அங்கவீனத்தினைக் கொண்ட முதியோர்களுக்கு 489 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தளர்வு சிகிச்சைகள் மற்றும் செயற்பாடுகளினை முன்னெடுத்தல் - பயனாளிகளின் எண்ணிக்கை 13,755)
- அஸ்வெசும பயனாளிகளுக்கு உலக வங்கியினூடாக தனிப்பட்ட பலங்கள், சவால்கள் மற்றும் போதைப்பொருள் தடுப்புத் தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் 337 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். (பயனாளிகளின் எண்ணிக்கை 20660) மற்றும் 299 தனிப்பட்ட ஆலோசனை அமர்வுகளினை நடாத்துதல்.
- அஸ்வெசும பயனாளிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக தனிப்பட்ட பலங்கள், சவால்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்புக் குறித்து 63 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். (பயனாளிகளின் எண்ணிக்கை 3484) மற்றும் 322 தனிப்பட்ட ஆலோசனை அமர்வுகளினை நடாத்துதல்.
- சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களின் செயற்பாடுகளினை அடிப்படையாகக் கொண்டு 83 நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 210 தனிநபர் ஆலோசனை அமர்வுகளினை நடாத்துதல்.
- பிற அமைப்புக்களின் வேண்டுகோளின் பேரில் 511 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் மற்றும் 3198 தனிநபர் ஆலோசனை அமர்வுகளினை நடாத்துதல்.
- 24,782 தனி நபர் ஆலோசனை அமர்வுகளினை நடாத்துதல் மற்றும் 6353 தலையீட்டுத் திட்டங்களினைத் தயாரித்தல்.
- மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்களிலுள்ள அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தச் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட

நல்வாழ்வு மற்றும் ஓய்வு 632 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். (பயனாளிகளின் எண்ணிக்கை - 32,342).

- மனநல வாரத்தினை முன்னிட்டு 23 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- 2878 தொலைபேசி அழைப்புக்கள் மூலம் தொலைபேசி உளவளத்துணை சேவைகளினை வழங்குதல்.
- உளவளத்துணை உத்தியோகத்தர்களுக்கு 2 திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அங்கவீனர் இல்லங்களிலுள்ள அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பில் செயற்பாடுகளினை அடிப்படையாகக் கொண்ட 160 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். (பயனாளிகளின் எண்ணிக்கை - 5729).
- வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைந்த 1 வது தரம் உளவியல் உத்தியோகத்தர்கள் தொடர்பில் 2 வாரங்கள் விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்துதல்.
- டிவ்வா புயலால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உளவளத்துணை சேவைகளினை வழங்குவதற்கு கள ஆய்வுகளினை நடாத்துதல்.
    - 529 பயனாளிகள் தொடர்பில் பதுளை மாவட்டத்தில் கந்தகெட்டிய, பஸ்ஸர மற்றும் சொரணதொட்ட பிரதேச செயலகங்களிலுள்ள 6 பாதுகாப்பு நிலையங்களில், செயற்பாடுகளினை அடிப்படையாகக் கொண்ட 44 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
    - 600 பயனாளிகளுக்கு கண்டி மாவட்டத்தின் கம்பள, தெல்தொட்ட, புஜாபிட்டிய, உடதும்புர, தொளுவ மற்றும் அக்குரண பிரதேச செயலகங்களில் தனிநபர் உளவளத்துணை 500 அமர்வுகள் மற்றும் செயற்பாடுகளினை அடிப்படையாகக் கொண்ட 20 நிகழச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.

# உலக உணவு நிகழ்ச்சித் திட்ட ஒத்துழைப்புக்கான கூட்டாண்மைச் செயலகம்.

**அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.12.31 ஆந் திகதி வரை.**

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 1900.00 | 985.71 |
| மொத்தம் | 1900.00 | 985.71 |

## முக்கிய மூலோபாய விளைவுகள்

1.நெருக்கடிகால நடவடிக்கைகள் : நெருக்கடிகளின்போதும் அதற்குப் பின்னரும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல்.

2.மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து: ஊட்டச்சத்துச் சார்ந்த மற்றும் ஊட்டச்சத்துக்கென பிரத்தியேகமான நிகழ்ச்சித் திட்டங்களினூடாக வாழக்கையின் முதல் 8,000 நாட்களினை மையமாகக் கொண்டு ஊட்டச்சத்தினை மேம்படுத்துதல்.

3. மீள்திறனினைக் கட்டியெழுப்புதல் : இயற்கைப் பேரிடர்கள் மற்றும் காலநிலை மாற்றத்தினால் சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்பினைக் குறைத்தல்.

4. நிறுவன வலுவூட்டல் : மீளதிறன் கொண்ட உணவு முறைமைகளினை மேம்படுத்துதல் மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தினை மேம்படுத்துவதற்கும் தேசிய நிறுவனத் திறனினை மேம்படுத்துதல்.

அதன் பிரகாரம் இந் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 1,900 மில்லியன் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2025.12.31 ஆந் திகதி வரையிலான நிதி முன்னேற்றம் ரூபா. 985.71 மில்லியன் என்பதுடன் நிறைவேற்றப்பட்ட பணிகள் பின்வருமாறாகும்.

| | நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் | முக்கிய பங்களிப்பு | முக்கிய சாதனைகள் (2025) |
|---|---|---|---|
| 01 | தோட்டக்கலை பாடசாலை ஊட்டச்சத்து நிகழ்ச்சித் திட்டம் (Home-Grown School Feeding – HGSF)<br>**மாவட்டச் செயலகங்கள்** : அனுராதபுரம், பொலன்னறுவை. மாத்தளை, மட்டக்களப்பு, மொனராகல, நுவரெலியா, கிளிநொச்சி, வவுனியா<br><br>**தலைமைச் செயலாளர் அலுவலகங்கள்**- வட மாகாணம், வட மத்திய மாகாணம், மத்திய மாகாணம், ஊவா மாகாணம். | பள்ளி மாணவர்களுக்குச் சத்தான உணவினை வழங்குதல் ; உள்ளூர் விவசாயிகளுக்கிடையலான உறவுகளினை வலுப்படுத்துவதன் மூலம் அவர்களின் வருமான வழிகளினை மேம்படுத்துதல். | • 1,850 பாடசாலைகளின் 265,600 பாடசாலை மாணவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.<br>• 1,590 தோட்டங்கள், 1,917 கோழிப் பண்ணைகள், 3,550 உணவு வழங்குனர்களுக்கு உதவப்பட்டுள்ளது.<br>• சூரிய சக்தியில் இயங்கும் 10 பாடசாலைகளின் சமையலறைகள் புதுப்பிக்கப்பட்டன. (கிளிநொச்சி)<br>• முட்டை பொரிப்பான் கட்டுமானம் (திரப்பன)<br>• கோழித்தீவன தொழிறசாலையொன்று நிறுவப்பட்டுள்ளது (பல்லெபொல/தம்புள்ள)<br>• ஊட்டச்சத்து விழிப்புணர்வு மற்றும் சமூக நடத்தைகளினை மாற்றும் தொடர்பாடல் வேலைத்திட்டத்தினை நடாத்துதல். |

| | நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் | முக்கிய பங்களிப்பு | முக்கிய சாதனைகள் (2025) |
|---|---|---|---|
| 02 | செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத் திட்டம் | தேசியப் பாடசாலை உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஊட்டச்சத்து செறிவூட்டப்பட்ட அரிசியை வழங்குவதன் மூலம் பள்ளி மாணவர்களிடையே உள்ள நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்தல். | • 12 மாவட்டங்களிலுள்ள 782,044 குழந்தைகளினைச் சென்றடைந்தது.<br>• கலங்குட்டிய அரிசி பதப்படுத்தும் அலகு மற்றும் சேமிப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன.<br>• தேசிய உணவு மேம்பாட்டுச் சபையின் ஆய்வகம் மற்றும் அலுவலகம் கட்டுமானம்.<br>• பிரத்தியேகப் பிரிவின் கூட்டாண்மையினூடாக கலவை எந்திரங்கள் அம்பாறை மற்றும் கம்பாந்தோட்டையில் நிறுவப்பட்டுள்ளன.<br>• முதலீடு : உற்பத்தித் திறனினை மேம்படுத்துவதற்காக ரூபா. 250 மில்லியன் அதிக முதலீடு செய்யப்பட்டது. |
| 03 | சொத்துக்களுக்கான உணவு உதவி (FFA) - கிராமப்புறத் தொழிலாளர்களினைப் பணிக்கமர்த்துவதன் மூலம் நீர்ப்பாசன அமைப்புக்களினைப் புனமைத்தல். | சமூகச் சொத்து உருவாக்கம்/புனரமைப்புக்கான பண/உணவு உதவிகளினை வழங்குதல். | • கிளிநொச்சி மற்றும் மாத்தளையில் 866 வீடுகளுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. (மாவட்டமொன்றுக்கு ரூபா. 37.5 மில்லியன்)<br>• சொத்துக்கள் 13 (குளங்கள், கால்வாய்கள், நீர்ப்பாசன அமைப்புக்கள், விவசாயச் சாலைகள்) சீரமைக்கப்பட்டுள்ளன. அதனூடாக சாகுபடி செய்யப்படாத இடங்களில் சாகுபடி செய்வதற்கு முடிந்தது. |
| 04 | தேசிய ஊட்டச்சத்து துணைப் பொருள் - திரிபோசா | தேசிய திரிபோசா துணையுணவின் தரம் மற்றும் உற்பத்தியினை மேம்படுத்துதல். | • அரிசி சார்ந்த மாற்று சமையல் குறிப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.<br>• 6-36 மாதங்களுக்கு அரிசி -சோயா கலவையொன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br>• நவீன எந்திரங்களில் முதலீடு (WFP 50% + அரசின் 50% / திரிபோசா நிறுவனம்) |

| | நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் | முக்கிய பங்களிப்பு | முக்கிய சாதனைகள் (2025) |
|---|---|---|---|
| 05 | Adaptation for Resilience -ADAPT4R பிராந்திய செயற்றிட்டம் (இந்தியா மற்றும் இலங்கை) | விவசாயிகளுக்கான இறுதிக்கட்ட காலநிலை சேவைகளை (LMCS) வலுப்படுத்துதல்; தகவமைப்புத் திறனை மேம்படுத்துதல். இந்தத் திட்டம் மொனராகலை, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் உள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் செயல்படுத்தப்படுகிறது. | • நேரடிப் பயனாளிகள் 15,500 மற்றும் மறைமுகப் பயனாளிகள் 640,720 (பெண்கள் > 50%) உள்வாங்கப்பட்டுள்ளனர்.<br>• பிராந்திய காலநிலை ஒத்துழைப்பினை வலுப்படுத்துதல்.<br>• பாலின சமத்துவம் மற்றும் பருவநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல். |
| 06 | எதிர்பார்க்கப்பட்ட செயற்றிட்டம் (AA) - அம்பாறை | வெள்ளப் பெருக்குத் தொடர்பான முன் எச்சரிக்கை அமைப்புகளையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் வலுப்படுத்துதல். | • சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் பங்குதாரர் கலந்துரையாடல் நிறைவடைந்துள்ளது.<br>• முன்னோடியான இடங்கள் : சாமபுர, சேனானாயக்கபுர, மிகிந்துபுர 40 மாவட்ட உத்தியோகத்தர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.<br>• சமூகத் தரவுச் சேகரிப்பு : 100+ க்கும் மேற்பட்ட வீடுகள்.<br>• மாவட்ட AA குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது;<br>• திடீர் வெள்ள மாதிரி வடிவமைக்கப்பட்டுள்ளது. |
| 07 | மாவட்ட உணவுப் பாதுகாப்பு வலையமைப்பு (DFSN) மாவட்டங்கள்: திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மொனராகல, அனுராதபுரம், வவுனியா. | மாவட்டச் செயலகப் பிரிவு மட்டத்தில் ஒரு நிலையான உணவுப் பாதுகாப்பு வலையமைப்பை உருவாக்குதல். | • DFSN வலையமைப்பு மற்றும் பணிக்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.<br>• ஐந்து மாவட்டங்களில் மூன்றுநாள் பகுப்பாய்வுப் பயிற்சி நடாத்தப்பட்டது.<br>• காலாண்டு ரீதியிலான உணவுப் பாதுகாப்பு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (யாழ்ப்பாணம்)<br>• தலையீடுகளுக்காகப் பயன்படுத்தப்படும் உணவுப் பாதுகாப்பு வரைபடங்கள் மற்றும் அறிக்கைகள். |

## வெளிநாட்டுச் செயற்றிட்டங்கள் மற்றும் வெளிநாட்டுத் தொடர்புகள்

### வெளிநாட்டுச் செயற்றிட்டங்கள்

முக்கியமான 3 வெளிநாட்டுச் செயற்றிட்டங்கள் இதுவரை எமது அமைச்சின் கீழ் அமுலாக்கப்படுவதுடன், அவற்றுள் 2 முன்னோடிச் செயற்றிட்டங்கள் கடன் கூறின் கீழ் அமுலாக்கப்படுவதுடன் மானியக் கூறின் கீழ் ஒரு முன்னோடி செயற்றிட்டம் அமுலாக்கப்படுகிறது.

கடன் கூறின் கீழ் பல்பரிமாண வறுமையினை எதிர்கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையினை குறைக்கும் நோக்கத்துடன், அஸ்வெசும பயனாளி குடும்பங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் இவ்வமைச்சின் கீழுள்ள சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதான வேலைத்திட்டமொன்று என்பதுடன், அதில் 02 முன்னோடிச் செயற்றிட்டங்களாக உலக வங்கி கடன் உதவி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் உதவியின் கீழ் இதுவரை அமுலாக்குவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவிச் செயற்றிட்டத்தினூடாக அஸ்வெசும பயனாளிகளினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னோடியான செயற்றிட்டமொன்றாக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியினைப் பயன்படுத்தி அஸ்வெசும பயனாளிகளுக்கிடையே வறிய மற்றும் கடுமையான வறிய 12,800 குடும்பங்களினை வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்டு இச் செயற்றிட்டம் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக அமுலாக்கப்படுகிறது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மறுசீரமைப்பு அவசரகால உதவிச் செயற்றிட்டத்தின் கீழ் இது தொடர்பில் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படுவதுடன், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் அமுலாவக்குவது இடம்பெறுகிறது. இது, 2022.09.09 ஆந் திகதி தொடக்கம் 2026.08.29 ஆந் திகதி வரை அமுலாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அதில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த நிதி 7 அமெரிக்க டொலர் மில்லியனாகும். (2025 ஆம் ஆண்டு தொடர்பில் ரூபா. 1685.00 மில்லியனாகும்). இதன் கீழ் அனுராதபுரம், பொலன்னறுவை, கண்டி, மாத்தளை நுவரெலியா, குருனாகல், கேகாலை, களுத்துறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இச் செயற்றிட்டம் தொடர்பில் ரூபா. 1236.55 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று எட்டப்பட்டுள்ளது. அதற்குமேலாக, சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள சமனலவெவ மற்றும் நில்லம்ப வில் அமையப் பெற்ற பயிற்சியளிக்கும் நிலையங்களின் புனரமைப்புப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

உலக வங்கி நிதியுதவிச் செயற்றிட்டத்தின் கீழ் அஸ்வெசும பயனாளிகளினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னோடிச் செயற்றிட்டமொன்றாக உலக வங்கி நிதியுதவியினைப் பயன்படுத்தி அஸ்வெசும பயனாளிகளுக்கிடையே வறிய மற்றும் கடுமையான வறிய 10,975 குடும்பங்களினை வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்டு இச் செயற்றிட்டம் அமுலாக்கப்படுகிறது. இச் செயற்றிட்டம் 2023.12.14 ஆந் திகதி தொடக்கம் 2027.09.30 ஆந் திகதி வரை அமுலாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் 8 அமெரிக்க டொலர் மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. (2025

ஆம் ஆண்டு  தொடர்பில் ரூபா. 1,118 மில்லியன் நிதி கிடைத்துள்ளது.).  இச் செயற்றிட்டத்தினூடாக காலி, மாத்தறை, கம்பாந்தோட்டை, கம்பகா, புத்தளம், கொழும்பு, மொனராகல, மன்னார், பதுளை, அம்பாறை, இரத்தினபுரி மற்றும் வவுனியா போன்ற மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன

இச் செயற்றிட்டம்  தொடர்பில் ரூபா. 27.31 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று எட்டப்பட்டுள்ளதுடன், அதன் கீழ்  செயற்றிட்டத்தினைத் திட்டமிடுதல், பயனாளிகளினைத்  தெரிவு செய்தல் மற்றும் ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன. அதேபோல ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட குடும்பங்களுக்கு  4,553 குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள்,  செயற்றிட்டத் திட்டங்கள் மற்றும்  பணித் திட்டங்களினைத் தயாரித்தல் நிறைவு பெற்றுள்ளது.

மானியக் கூறாக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியத்தின் கீழ்  1.98 அமெரிக்க டொலர் மில்லியன் மானிய கூறு அமுலாக்கப்படுவதுடன், அதனை 2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2026 ஆம் ஆண்டு வரை அமுலாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது, இத்திட்டங்கள், இவ்வமைச்சின் கீழுள்ள அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம், முதியோர்களுக்கான தேசிய செயலகம், சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச்  சேவைகள் திணைக்களம், இலங்கை மகளிர் பணியகத்தினூடாக  செயற்றிட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன.

இச் செயற்றிட்டத்தின் கீழ் இவ்வமைச்சுக்கான நிறுவனங்கள்  தொடர்பில் ரூபா. 146.985 மில்லியன் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2022.09.09 தொடக்கம் 2025.12.31  ஆந் திகதி வரை ரூபா. 50.875 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று எட்டப்பட்டுள்ளது. அதனுடன் தொடர்பிலான பௌதிக முன்னேற்றம் பின்வருமாறாகும்.

- அக்குரஸ்ஸ சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 30 பராமரிப்பு நிலையங்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 11 பராமரிப்பு நிலையங்களினை புனர்நிர்மாணம்  செய்யும்  செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளது.
- 550 அங்கவீனமுற்ற நபர்களுக்கு 11 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு 472 பாடசாலை உபகரணத்  தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- 61 அங்கவீனமுற்ற நபர்களுக்கு நடமாடும் விற்பனை ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.
- 721 அங்கவீனமுற்ற நபர்களுக்கு  தொழில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- 20 அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுய தொழில் உதவி வழங்கப்பட்டுள்ளது.
- அங்கவீனமுற்ற நபர்களினைப்  பராமரிப்பது  தொடர்பில் அவர்களின் வீடுகளிலுள்ள 1477 நபர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- வாழ்க்கைத்  தொழிற் பயிற்சி நிலையங்களில்  சுய தொழில் செய்வதற்காகப் பயிற்சி பெற்ற 8 பயனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- விழிப்புனலற்ற 13 பேருக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது.

இச்சகல வெளிநாட்டுச் செயற்றிட்டங்களினைத் திட்டமிடுதல், செயலாக்க ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புச் செயற்பாடுகள் அமைச்சின் திட்டமிடல் மற்றும் செயற்பாடுகள் பிரிவினூடாக 2025 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளது.

## 4.11.2 வெளிநாட்டுத் தொடர்புகள்

**வறுமை ஒழிப்பு மற்றும் பேண்தகு அபிவிருத்தி தொடர்பில் அரசுகளுக்கிடையிலான நிபுணர் குழுவின் முதலாவது கூட்டம்.**

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுடன் இணக்கம் மற்றும் வறுமையினை ஒழிப்பதற்காக 2024 சார்க் செயற்றிட்டத்தினை மீளவும் ஆய்வது தொடர்பில் சார்க் - ஆசிய அபிவிருத்தி வங்கி கலந்தாய்வுப் பயிலரங்கம் 2024 ஒக்டோபர் 21 மற்றும் 22 ஆந் திகதிகளில் நேபாளம் காத்மண்டுவில் நடாத்தப்பட்டது. அக்கூட்டத்தில் வறுமையினை ஒழித்தல் மற்றும் பேண்தகு அபிவிருத்தி தொடர்பிலான அரசுகளுக்கிடையிலான நிபுணர்கள் குழுவின் முதலாவது கூட்டத்திற்கு விருந்தோம்பலினை வழங்குவதற்கு இலங்கை ஒப்புக் கொண்டது. அதன் பிரகாரம் அக்கூட்டம், 2025 பெப்ரவரி மாதம் 18 மற்றும் 19 ஆந் திகதிகளில் கொழும்பு அமாரி விடுதியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் நடாத்தப்பட்டது. இந்தியாவினைத் தவிர, பிற நாடுகளின் சகல பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு, சார்க் செயலகம் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஒத்துழைப்புடன் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இது தொடர்பில் சார்க் நாடுகள், சார்க் செயலகம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் உட்பட 34 பேர் இந்நிகழ்வில் பங்கேற்றனர். உலகளாவிய சார்க் இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளினைக் கவனத்திற் கொண்டு சார்க் பிராந்தியத்திற்காகக் கருத்தப்பட்ட இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள், வறுமையினை ஒழிப்பதற்கான சார்க் திட்டம், சார்க் வளர்ச்சி இலக்குகள், கருதப்பட்ட பேண்தகு அபிவிருத்திக்கான கண்காணிப்புப் பொறிமுறை மற்றும் காலமுறை மதிப்பீடுகளினை உள்ளடக்கிய இறுதி வரைவு அறிக்கை இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளதுடன், சார்க் உறுப்பு நாடுகளில் வறுமையினை ஒழிப்பதற்கான முக்கிய தீர்மானங்கள் இதில் எடுக்கப்பட்டுள்ளன. அடிப்படைச் செலவுகள், ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஈடு செய்யப்பட்டுள்ளதுடன், இக்கூட்டத்திற்கு இவ்வமைச்சினால், பிற செலவுகள் தொடர்பில் ரூபா. 0.64 மில்லியன் செலவு ஈடு செய்யப்பட்டுள்ளது.

**வறுமை ஒழிப்புத் தொடர்பில்** BIMSTEC (Bay Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Cooperation) **நிபுணர் குழுவின் நான்காவது கூட்டம் -** 2025.10.09 **மற்றும்** 10 **ஆந் திகதி**

வறுமை ஒழிப்புத் தொடர்பில், BIMSTEC அமைச்சர்களின் கூட்டம், BIMSTEC சிரேஸ்ட உத்தியோகத்தர்களின் கூட்டம் BIMSTEC விசேட நிபுணர்களின கூட்டமாக BIMSTEC பிராந்திய நாடுகள் இணைந்து வருடாந்தம் உச்சிமகாநாடுளினை நடாத்துகின்றன என்பதுடன், அதில் BIMSTEC நிபுணர்களின் குழுவின் 4 வது கூட்டம், பத்தரமுதல்ல, வோட்டர்ஸ் எட்ஜ் களியாட்ட விடுதியில் 2025.10.09 மற்றும் 10 ஆகிய இரு தினங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
வறுமை ஒழிப்புத் தொடர்பிலான செயற்றிட்டமொன்றினைத் தயாரித்தல் உட்பட, BIMSTEC பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பின் மூலம் வறுமை மற்றும் வறுமை ஒழிப்புச் சார்பில் நடவடிக்கை எடுப்பதற்கு தகவல் தொடர்பு செயல்முறைகள், ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்யும் சிரேஸ்ட உத்தியோகத்தர்களினை உள்ளடக்கி வறுமை ஒழிப்புத் தொடர்பில் BIMSTEC நிபுணர் குழுக்கள் ஆண்டுக்கு ஒருமுறை கூடுகின்றன.

2024 ஆம் ஆண்டில் நேபாளம் காத்மண்டு தலைநகரில் நடைபெற்ற 3 வது மகாநாட்டில் முன்மொழியப்பட்டுள்ளவாறு 4 வது மகாநாடு 2025.01.09-10 ஆகிய இருதினங்கள் நடாத்தப்பட்டுள்ளன. பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து BIMSTEC அமைப்பின் உறுப்பு நாடுகள் என்பதுடன், இலங்கையில் நடாத்தப்பட்ட 4வது மகாநாடு தொடர்பில் மியன்மாரின் ஒரு உத்தியோகத்தர் மற்றும் தாய்லாந்தின் 05 உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர் என்பதுடன், பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகள் இணையவழியூடாக Zoom மூலம் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த மகாநாட்டினை BIMSTEC செயலகம் நடாத்துவதுடன், BIMSTEC செயலகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி இரண்டு வெளிநாட்டவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர். கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் மேலதிக செயலாளர், திரு. காமிணி விஜேசிங்க அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்ட இம் மகாநாடு தொடர்பில் இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சித் திட்டம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் அங்கீகரித்துள்ள செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இச் செயற்பாடுகளுக்கு ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 2.39 மில்லியனாகும்.

## சவால்கள்

1. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தில் பிரதேச மட்ட உத்தியோகத்தர்கள் இல்லாதுள்ளதுடன், சமூக சேவைகள் உத்தியோகத்தர்களினூடாக கடமைகளினை நிறைவேற்றுவதற்குச் செல்லும்போது நேரடி உத்தரவு பிறப்பிப்பதில் சிக்கலுள்ளது.
2. அமைச்சுக்கு உரித்தான சகல உத்தியோகத்தர்களுக்கு இணையம் மற்றும் கணனி வசதிகள் குறைவடைவதால் பிரதேச மட்டத்தில் தரவுகளினைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்படுதல்.
3. அமைச்சின் சில நிறுவனங்களில் நிலவும் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை.
4. முதியோர்கள், வீட்டுவசதிக்குக் குடிபெயரும் போக்கு அதிகரித்து வருவதன் காரணத்தினால் அதற்கு இணையாக உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துவதில் சிரமங்கள்.
5. சில பிரதேச செயலகப் பிரிவுகளில் அதிகளவிலான கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்படுவதால், இப்பணியினைக் கவனிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள் போதியளவில் இல்லை.
6. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு சீதுவப் பகுதியில் நிர்மாணிக்கப்படும் கட்டிட வளாகத்தின் நிர்மாணிப்பு நிறைவடையாமையினால் அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு பாடநெறிகளினை நடாத்துவதற்கு இடவசதி குறைவாகக் காணப்படுதல்.
7. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவி வெற்றிடங்களினை நிரப்புவதிலுள்ள இடவசதிகள் வறையறுக்கப்பட்டமையின் காரணமாக கல்வி மற்றும் கல்விசாரா துறைகள் தொடர்பில் கடமைகளினைத் திறம்படச் செய்வதில் சிக்கல்கள் எழுதல்.
8. ஓய்வூதியத் பிரேரணைத் திட்டத்தினை மேம்படுத்துவதற்கு போதுமானவாறு ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படாமை மற்றும் பொதுநிர்வாகச் சுற்றுநிரூபங்களினூடாக செலவு வரையறைகளினை விதித்தல்.
9. ஓய்வூதியத் திட்டத்தின் பங்களிப்பாளர்ளின் தவணைப் பணத்திற்கு ஒப்பீட்டளவில் அதிக மதிப்பு காணப்படுவதன் காரணமாக சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள குறைந்த வருமானப் பயனாளிகள் அது தொடர்பில் அரச நிதிப் பங்களிப்பினை எதிர்பாத்தல்.
10. 2025 ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் ஏற்பட்டுள்ள டிவ்வா புயல் காரணமாக பல செயற்றிட்டங்களினை நிறைவு செய்வதற்கு முடியாது போகுதல்.

## இலக்குகள்

1. பிரஜைகளின் உடல் நலத்தினை மேம்படுத்துதல்.
2. கிராம சக்தி வேலைத்திட்டத்தின் கீழுள்ள சங்கங்களின் நிதிகளினை செயலூக்கமான புழக்கத்திற்குப் பயன்படுத்துதல்.

3. 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்ட வரைவுத் திருத்தத்தினை நிறைவு செய்தல்.
4. சைகை மொழிச் சட்டவரைவினை அங்கீகரித்தல்.
5. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசியக் கொள்கையொன்றினைத் தயாரித்தல் மற்றும் தேசிய செயற்றிட்டமொன்றினைத் தயாரித்தல்.
6. தற்போது திருத்தப்பட்ட வடிவிலுள்ள அங்கவீனமுற்ற நபர்களுக்கான அணுகல் வசதிகளினை வழங்கும் வர்த்தமானி அறிவிப்பின் பணிகளினை நிறைவு செய்தல்.
7. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு உள்ளகத் தர உத்தரவாத அலகொன்றினை (Internal Quality Assurance Unit) நிறுவுவதை முன்னெடுத்தல்.
8. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கல்விச் செயற்பாடுகளினை விரிபுபடுத்துவதற்குப் புதிய பாடநெறிகளினை ஆரம்பிக்கும் தேவைப்பாடு உள்ளது என்பதுடன், தற்போது காணப்படும் பிரிவுகள் (Divisions) மற்றும் கல்விசார் பிரிவுகள் (Departments) ஆகப் பெயரிடப்பட்டுள்ள நிறுவனத்தின் கட்டமைப்பில் மாற்றமொன்றினை ஏற்படுத்துதல்.
9. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கல்விசார் செயற்பாடுகளினை மேலும் விரிவுபடுத்துவதனூடாக உயர் தரத்தினை சித்தியெய்திய அதிகளவிலானவர்களுக்கு உயர் கல்வியினை வழங்கும் நோக்குடன் நிறுவனத்தினை, பல்கலைக்கழகமொன்றாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
10. ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பிரேரணைத் திட்டங்களுக்குப் புதிய அங்கத்தவர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதை விரிவுபடுத்துதல் மற்றும் பயன்களினை விரிவுபடுத்துதல்.
11. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் ஆவணங்களினை டிஜிட்டல் மயமாக்குவதனூடாக சேவைகளினை செயற்றிறன்மிக்கதாக மாற்றுதல்.
12. உத்தியோகத்தர்களின் திறன் விருத்தி வாய்ப்புக்களினை விரிவுபடுத்துவதனூடாக சேவை உற்பத்தித் திறனினை மேம்படுத்துதல்.
13. அபிவிருத்தி வேலைத்திட்டங்களினை அமுலாக்குவதனூடாக பயனாளிகளுக்கு மிகவும் பயனுள்ள வகையில் செயற்படுத்துவதை முன்னெடுப்பதற்கு டிஜிட்டல் மயமாக்கப்பட்ட கண்காணிப்புக் கட்டமைப்பொன்றினை உருவாக்கிப் பயன்படுத்துதல்.
14. “பிரஜா சக்தி” வறுமை ஒழிப்பு தேசிய இயக்கத்தை செயல்படுத்துதல்

.........................................................................................
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி

**(மேலே காட்டப்பட்டிருப்பது சிங்களமொழியில் வெளியான அத்தியாயம் 02 இன் தமிழ் மொழி பெயர்ப்பாகும்.)**

# அத்தியாயம் 03

## 3.1 நிதிச் செயற்றிறன் கூற்று

**2025 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயற்றிறன் கூற்று**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | ஏசீஏ - எவ் |
| | **2025 திசம்பர் 31 ஆந் திகதியுடன் நிறைவு பெற்ற வருடத்திற்கான** | | | | |
| | **நிதிச் செயற்திறன் கூற்று** | | | | |
| **திருத்தம் செய்யப்பட்ட பாதீட்டு ஒதுக்கீடுகள் 2025** | | **குறிப்பு** | **உண்மை நிலை** | | |
| | | | | - | |
| | | | 2025 | 2024 | |
| **ரூ.** | | | **ரூ.** | **ரூ.** | |
| - | **வருமானப் பெறுகைகள்** | | | | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | **ஏசீஏ**-1 |
| - | சர்வதேச சந்தைகள் மீதான வரி | 3 | - | - | |
| - | வரியல்லா வருமானங்களும் மற்றும் ஏனையவையும் | 4 | - | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| | | | | | |
| - | **வருவாய் அல்லாத பெறுகைள்** | | | | |
| - | திறைசேரிக் கட்டுநிதி | | 812,534,032 | - | **ஏசீஏ** -3 |
| - | வைப்புக்கள் | | 31,328,826 | - | **ஏசீஏ** -4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 28,213,556 | - | **ஏசீஏ** -5 |
| | பிற பிரதான ஏட்டுக் கணக்குப் பெறுகைகள் | | 139,667,883 | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **1,011,744,297** | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் மற்றும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **1,011,744,297** | - | |
| | திறைசேரிக்கு அனுப்புதல் (ஈ) | | 44,457,887 | - | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **தேறிய வருமானப் பெறுகைள் மற்றும் வருமானம் அல்லாத பெறுகைகள் உ** = (இ)-(ஈ) | | **967,286,410** | - | |
| | | | | | |
| | **கழித்தல் - செலவுகள்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவுகள்** | | | | |
| 659,430,000 | சம்பளம், கூலி மற்றும் ஊழியர் பயன்கள் | 5 | 618,932,949 | - | |
| 302,627,827 | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 6 | 209,296,268 | - | **ஏசீஏ** - 2(ii) |
| 878,800,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 762,762,687 | - | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| 100,000 | பிற மீண்டுவரும் செலவுகள் | 9 | - | - | |
| 1,840,957,827 | **மொத்த மீண்டுவரும் செலவுகள் (ஊ)** | | **1,590,991,904** | - | |
| | | | | | |
| | **மூலதனச் செலவுகள்** | | | | |
| 26,600,000 | மூலதனச் சொத்துக்களினைப் புனரமைப்பதும், மேம்படுத்துவதும் | 10 | 22,105,244 | - | |
| 201,880,830 | மூலதனச் சொத்துக்களினைக் கொள்ளல் | 11 | 40,066,725 | - | |
| 4,775,000,000 | மானிய மாற்றல்கள் | 12 | 2,053,353,624 | - | **ஏசீஏ** - 2(ii) |
| - | நிதிச் சொத்துக்களினைக் கொள்ளல் | 13 | - | - | |
| 1,350,000 | திறன் விருத்தி | 14 | 1,023,639 | - | |
| 116,295,000 | பிற மூலதனச் செலவுகள் | 15 | 23,910,857 | - | |
| 5,121,125,830 | **மொத்த மூலதனச் செலவுகள் (எ)** | | **2,140,460,089** | - | |
| | | | | | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 29,534,707 | - | **ஏசீஏ** -4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 94,177,401 | - | **ஏசீஏ** -5 |
| | **பிற பிரதான ஏட்டுக் கணக்குக் கொடுப்பனவு** | | - | - | |
| | **பிரதான ஏட்டுச் செலவுகள் (ஏ)** | | 123,712,108 | - | |
| | | | | | |
| | மொத்தச் செலவுகள் எ = (ஈ+உ+ஊ) | | 3,855,164,101 | - | |
| | | | | | |
| - | **2023 திசம்பர் 31 ஆந் திகதிய கட்டுநிதி மீதி ஏ = (இ-எ)** | | (2,887,877,691) | - | |
| | | | | | |
| | **கட்டுநிதி இணக்கக்கூற்றின் பிரகாரம் மீதி** | | (2,887,877,691) | - | **ஏசீஏ** -7 |
| | **திசம்பர் 31 ஆந் திகதிய கட்டுநிதி மீதி** | | - | | **ஏசீஏ** -3 |

## 3.2. நிதி நிலவரம் தொடர்பிலான கூற்று

| | | | ஏசீஏ-பீ |
|---|---|---|---|
| 2025 திசம்பர் 31 ஆந் திகதிய | | | |
| நிதி நிலவரம் தொடர்பிலான கூற்று | | | |
| | குறிப்பு | உணமை நிலை | |
| | | 2025 | 2024 |
| | | ரூபா. | ரூபா. |
| நிதியல்லாத சொத்துக்கள் | | | |
| சொத்து, பொறித்தொகுதி, உபகரணங்கள் | ஏசீஏ -6 | 1,530,851,705 | - |
| நிதிச் சொத்துக்கள் | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ -5/5(ஏ) | 65,963,845 | - |
| காசும் மற்றும் காசுக்குச் சமனானவையும் | ஏசீஏ -3 | - | - |
| மொத்தச் சொத்துக்கள் | | **1,596,815,550** | - |
| | | | |
| நிகரச் சொத்துக்கள்/செல்வம் | | | |
| திறைசேரிக்கு நிகரச் சொத்துக்கள் | | 10,133,519 | - |
| சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரண தொகுதி | | 1,530,851,705 | - |
| வாடகை மற்றும் வேலை முன்பதிவுகளுக்கு முன்பதிவு | | - | - |
| | | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ -4 | 55,830,326 | - |
| கட்டுநிதி மீதி | ஏசீஏ -3 | - | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | **1,596,815,550** | - |

பக்க இலக்கங்கள் 55 தொடக்கம் 57 வரை காட்டப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட ஏசீஏ 1 தொடக்கம் ஏசீஏ 7 வரையிலான படிவங்களில் முன்வைக்கப்படும் கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்பு பக்க இலக்கங்கள் 58 தொடக்கம் 61 வரையில் உள்ளடக்கப்பட்ட கணக்குக் குறிப்பு விவரங்கள், இந்த இறுதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட பிரிவுகளாகும். இந்த நிதிநிலைக் கூற்றுக்களினைத் தயாரித்தல் அரச நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025.12.17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டுதல்கள் 02/2025 என்ற இலக்க ஏற்பாடுகளுக்கிணங்க இடம்பெற்றுள்ளது. மேற்குறிப்பிட்ட இறுதிக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளவிவரங்கள், தொடர்புடைய கணக்குக் குறிப்புகள் மற்றும் பிற கணக்குத் தகவல்கள் திறைசேரிக் கணக்குப் புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதுடன் என்றும் அவை அப்புள்ளிவிவரங்களுடன் ஒத்துப்போகின்றன என்றும் இத்தால் சான்றளிக்கின்றோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) உட்பிரிவின் பிரகாரம் நிதிக் கட்டுப்பாடு தொடர்பில் செயற்றிறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பொன்று அறிக்கையிடும் நிறுவனத்தினுள் காணப்படுவதுடன், நிதிக் கட்டுப்பாட்டிற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பின் செயற்றிறனைக் கண்காணித்து அதன் பிரகாரம் அவ்வமைப்புக்களினைத திறம்படச் செயற்படுத்துவதற்கு தேவையானவாறு மாற்றங்களினை முன்னெடுப்பதற்கு அடிக்கடி மீளாய்வு இடம்பெறுவதை இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

..................................
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்,
பெயர் :
பதவி:
திகதி :

..................................
பிரதான நிதி உத்தியோகத்தர்
பெயர் :
பதவி :
திகதி :

**(மேலே காட்டப்பட்டிருப்பது சிங்கள மொழியில் வெளியான அத்தியாயம் 03 இன் தமிழ் மொழிபெயர்ப்பொன்றாகும்.)**

## 3.4 காசுப் பாய்ச்சல் தொடர்பிலான கூற்று

| | | |
|---|---|---|
| | | ஏசீஏ - சி |
| **2025 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான** | | |
| | | |
| **காசுப் பாய்ச்சல் தொடர்பிலான கூற்று** | | |
| | | |
| | **உண்மை நிலை** | |
| | | **திருத்திய** |
| | **2025** | **2024** |
| | **ரூபா.** | **ரூபா.** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல்** | | - |
| **மொத்த வரிப் பெறுகைகள்** | - | - |
| **கட்டணங்கள், மேலதிகங்கள், தண்டப் பணங்கள் மற்றும் உரிமங்கள்** | - | - |
| இலாபம் | - | - |

| | | |
|---|---|---|
| **வருமானம் அல்லாத பெறுகைகள்** | - | - |
| **ஏனைய செலவினத் தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்** | 61,803,989 | - |
| **கட்டுநிதிக் கிடைப்பனவு** | 812,534,032 | - |
| **முற்பணத்தினை அறவீடு செய்தல்** | 92,830,781 | - |
| வைப்புக் கிடைப்பனவுகள் | 31,328,826 | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் (அ)** | **998,497,628** | **-** |
| | | |
| **கழித்தல் : நிதியினைச் செலவு செய்தல்** | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுச் செலவினங்கள் | 448,586,103 | - |
| மானியங்கள் மற்றும் மாற்றல்கள் | 213,462,961 | - |
| **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு, மூலதனப் பரிமாற்றங்கள், திறன் மேம்பாடு மற்றும் இதர மூலதனச் செலவினங்கள்** | 259,608,353 | - |
| ஏனைய செலவினத் தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 8,484,025 | - |
| திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி | 44,457,887 | - |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 93,964,748 | - |
| வைப்புக் கொடுப்பனவுகள் | 29,534,707 | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் செலவு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஆ)** | **1,098,098,785** | **-** |
| | | |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (இ) = (அ) - (ஆ)** | **(99,601,157)** | **-** |
| | | |
| **முதலீட்டுச் நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கிலாபம் | - | - |
| **உரிமைகளை நீக்கும் ஏற்பாடுகள் மற்றும் பௌதிகச் சொத்துக்களை விற்பனை செய்தல்.** | - | - |
| **உப கடனினை அறவீடு செய்தல்** | - | - |
| முதலீட்டுச் நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஈ) | **-** | **-** |
| | | |
| கழித்தல் : நிதியினைச் செலவு செய்தல் | | |
| **மூலதனச் சொத்து உருவாக்கம், கொள்முதல் மற்றும் பிற முதலீட்டு கையகப்படுத்துதல்கள்** | 40,066,726 | - |
| முதலீட்டு நடவடிக்கைகளுக்குச் செலவு செய்யப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ) | **40,066,726** | **-** |
| | | |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | **(40,066,726)** | **-** |

| | | |
|---|---|---|
| | | |
| செயற்பாடு மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல். (எ)=(இ ) + (ஊ) | **(139,667,883)** | **-** |
| <u>நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல்</u> | | |
| உள்நாட்டுக் கடன் | - | - |
| வெளிநாட்டுக் கடன் | - | - |
| மானியக் கிடைப்பனவுகள் | 139,667,883 | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஏ) | **139,667,883** | **-** |
| | | |
| <u>கழித்தல் : நிதியினைச் செலவு செய்தல்</u> | | |
| **உள்நாட்டுக் கடனினை மீளவும் செலுத்துதல்** | - | - |
| **வெளிநாட்டுக் கடனினை மீளவும் செலுத்துதல்** | - | - |
| **நிதி நடவடிக்கைகளுக்குச் செலவு செய்யப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஐ)** | **-** | **-** |
| | | |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட நிதிப் பாய்ச்சல் கூற்று (ஒ)=(ஏ)-(ஐ) | **139,667,883** | **-** |
| | | |
| நிதியின் தேறிய மாற்றங்கள் (ஓ) = (எ) -(ஒ) | **-** | **-** |
| ஜனவரி 01 ஆந் திகதியன்றைய ஆரம்பக் காசு மீதி | **-** | **-** |
| திசம்பர்31 ஆந் திகதியன்றைய இறுதி காசு மீதி | **-** | **-** |

### 3.5 நிதி நிலைக் கூற்றுக்கள் - தொடர்பற்றது.

### 3.6 வருமானங்களினைச் சேகரிக்கும் செயற்றிறன் - தொடர்பற்றது.

### 3.7 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்துவதன் செயற்றிறன்

| ஒதுக்கீடுகளின் வகை | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் | | உண்மைச் செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், முடிக்கப்பட்ட இறுதி ஒதுக்கீட்டு அளவு % மாக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடுகள் | | | |
| மீண்டுவரும் | **1,841,300,000** | **1,840,724,170** | **1,590,991,903** | **86%** |
| மூலதனம் | **4,917,700,000** | **5,121,125,830** | **2,140,460,089** | **42%** |

3.8 நி.பி. 208 இன் பிரகாரம், பிற அமைச்சுக்கள்/திணைக்களங்களின் பிரதிநிதியாக இத் திணைக்களத்திற்கு/மாவட்டச் செயலகத்திற்கு/மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள்.

ரூ. ,000

| தொடர் இல. | ஒதுக்கீடு கிடைக்கப் பெற்ற அமைச்சு/திணைக்களம் | ஒதுக் கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடுகள் | | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீடுகளின் % மாக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஒதுக்கீடுகள் | இறுதி ஒதுக்கீடுகள் | | |
| 1. | மாவட்டச் செயலகங்களுக்கு | | 4,679,750,000 | 4,878,458,598 | 2,587,990,864 | |
| 2. | சுகாதார அமைச்சுக்கு | | 500,000,000 | 500,000,000 | 95,905,495 | |

## 3.9. நிதியல்லாத சொத்துக்களினை அறிக்கையிடுவதன் செயற்றிறன்.

ரூ. ,000

| சொத்துக் குறியீடு | குறியீடு | 31.12.2025 ஆந் திகதிய பொருட் கணக்கெடுப்பு அறிக்கையின் பிரகாரம் மீதி | 31.12.2025 ஆந் திகதிய நிதி நிலவர அறிக்கையின் பிரகாரம் மீதி | எதிர்வரும் காலத்தில் கணக்கிடுவதற்குள்ள | முன்னேற்றத்தினை % மாக அறிக்கையிடுதல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள் | 88,313,100 | 88,313,100 | - | - |
| 9152 | எந்திர உபகரணங்கள் | 402,112,045 | 402,112,045 | - | - |
| 9153 | காணிகள் | 86,300,000 | 86,300,000 | - | - |
| 9154 | தொட்டுணர முடியாத சொத்துகளை | - | | - | - |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | | - | - |
| 9160 | நடந்து கொண்டிருக்கும் பணி | 954,126,559 | 954,126,559 | - | - |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துகள் | | | | |

## 3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்,
கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும்
சமூக வலுவூட்டுகை அமைச்சு.

**தலைப்பு 124 - கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் 2025 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதி நிலைக் கூற்றுக்கள் தொடர்பில் 2008 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

குறிப்பிட்ட அறிக்கை இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

02. மேற்கூறிய அறிக்கையில் ஏதேனும் தகவல்கள் தவறாகவோ முரண்பாடாகவோ அல்லது அவற்றினை வெளியிடுவது பொதுநலனுக்குப் பாதகமாக அமைந்தாலோ இக்கடிதம் அனுப்பப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் எனக்கு அறிவிக்கவும்.

03. மேலே குறிப்பிட்டுள்ளவாறு 07 நாட்களுக்குள் எந்தப் பதிலும் பெறப்படாதுவிடின் வரைவு அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களுக்கு நீங்கள் ஒப்புக் கொண்டதாக கருத்திற் கொண்டு அந்த அறிக்கையினை அடிப்படையாயகக் கொண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்காக இறுதி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

**ஒப்பம்/கே.கே.எஸ். ஜயக்கொடி,**
பிரதிக் கணக்காய்வாளர் அதிபதி,
கணக்காய்வாளர் அதிபதிக்காக.

பிரதிகள் - 01. செயலாளர், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு.
02. செயலாளர், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு.

(வரைவு)　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　இரகசியமானது

எல்எஸ்டபிள்யுடி/எம்எஸ்ஈ/எவ்எஸ்/2025

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்,
கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும்
சமூக வலுவூட்டுகை அமைச்சு.

**தலைப்பு 124 - கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் 2025 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதி நிலைக் கூற்றுக்கள் தொடர்பில் 2008 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1. தகுதிவாய்ந்த கருத்துரை

தலைப்பு 124 - கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் 2025 திசம்பர் 31 ஆந் திகதியன்றைய நிதிநிலை தொடர்பிலான கூற்று, அத்தினத்தன்று முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் செயற்றிறன் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் போதுமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களினையும் உள்ளடக்கி நிதிநிலைக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களினைக் கொண்டு 2025, திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்கள், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் திருத்தி வாசிக்கப்பட வேண்டிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154(1) என்ற அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கண்காணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சுக்கு முன்வைக்கப்படும் இந்நிதிநிலைக் கூற்றுக்கள் தொடர்பில் எனது கருத்துக்களினை எடுத்தியம்புதல் மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்படுகிறது. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154(6) பிரிவுடன் திருத்தி வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 10 வது பிரிவின் பிரகாரம் முன்வைக்கப்பட வேண்டிய கணக்காய்வு அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படும்.

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் 2025 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களின், நிதி நிலவரம், நிதி முன்னேற்றம் மற்றும் காசுப் பாய்ச்சல், நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 1 இல் குறிப்பிடப்பட்ட நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பதன் அடிப்படையின் கீழ் அனைத்து முக்கிய விடயங்களினையும் கொண்டு நியாயபூர்வமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதே எனது கருத்தாகும்.

### 1.2. தகுதிவாய்ந்த கருத்துரை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கிணங்க (இ.க.நி) என் மூலம் கணக்காய்வு இடம்பெற்றுள்ளது. கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, கணக்காய்வின் பொறுப்பு போன்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. என் மூலம் புலனாய்வு செய்யப்பட்ட தகுதிவாய்ந்த கருத்துரை தொடர்பில் அடித்தளமொன்றினை வழங்குவதற்கு என்மூலம் பெறப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுனமானவை எனவும் உன்னதமானவை எனவும் நான் நம்புகின்றேன்.

1.3. **பொருளின் முக்கியத்துவம் - நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பதற்கான அடிப்படை**

இந்த நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டதற்கான அடிப்படையினை விபரிக்கும் நிதிநிலை அறிக்கைகளின் குறிப்பு 1 இன் மீது தங்களின் கவனத்தினை ஈர்த்துக் கொள்வதற்கு விரும்புகின்றேன். இவ் நிதிநிலை அறிக்கைகள், அரசின் நிதிப் பிரமாணங்கள் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசம்பர் 17 ஆந் திகதிய பொதுக் கணக்குகள் வழிகாட்டுதல் இலக்கம் 02/2025 இன் பிரகாரம், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு, பொதுத்திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆதலால், இந்நிதிநிலைக் கூற்றுக்கள் பிற நோக்கங்களுக்குப் பொருந்த முடியாததாக இருக்கலாம். எனது அறிக்கை, அமைச்சு, பொதுத் திறைசேரி மற்றும் இலங்கைப் பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்கு மட்டுமே நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்விடயம் குறித்து எனது கருத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

1.4. **நிதிசார் கூற்றுக்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பு**

அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்கீட்டு வழிகாட்டுதல் இலக்கம் 02/2025 க்கு இணங்க அனைத்து முக்கியமான அம்சங்கள் தொடர்பிலுள்ள நியாயத்தினை எடுத்தியம்பும் வகையில் நிதிசார் கூற்றுக்களினைத் தயாரித்தல் மற்றும் ஊழல் அல்லது மோசடி தொடர்பில் ஏற்படக்கூடிய போதுமான தவறான கூற்றுக்களினைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தேவையான உள்ளக நிர்வாகத் தீர்மானம் எடுத்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) வது பிரிவின் பிரகாரம், அமைச்சினால் வருடாந்த மற்றும் காலத்திற்கேற்ற நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பதற்கு ஏற்றவாறு சுய வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் சரியானவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளினை முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதி முகாமை தொடர்பில் விளைத்திறனான உள்ளக முகாமைத்துவ திட்டமொன்றினைத் தயாரித்து முன்னெடுக்கப்பட்டு வருவகிறது என்பதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அத் திட்டத்தின் விளைத்திறன் தொடர்பில் அவ்வப்போது மீளாய்வு இடம்பெற்று அதன் பிரகாரம் திட்டத்தினை விளைத்திறனாக முன்னெடுத்துச் செல்லுவதற்கு தேவையான மாற்றங்கள் இடம்பெறுதல் வேண்டும்.

1.5. **நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிசார் கூற்றுக்கள், ஊழல் மற்றும் தவறின் காரணத்தினால் ஏற்படும் தவறான கூற்றுக்களினைத் தவிர்த்து, நியாயத்தினை மேலும் வழங்குதல் மற்றும் எனது கருத்துரையினை உள்ளடக்கி கணக்காய்வாளரின் அறிக்கையினை விடுவித்தல் எனது நோக்காகும். நியாயத்தினை உறுதிப்படுத்துதல் உயர் மட்ட உறுதிப்பாடு எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை முன்னெடுக்கும்போது, அது எந்நேரமும் கணிசமானளவு தவறான கூற்றுக்களினை வெளிக்கொணர்ந்துள்ளது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. ஊழல் மற்றும் தவறு தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தினை விளைவிக்கும் என்பதால் கணிசமான தவறான கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதுடன், இந்நிதிக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு, பயன்பாட்டாளர்களினால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்களின் மீது தாக்கத்தினை விளைவிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்மூலம் ஆய்வில் தொழில் நடுவர் மற்றும் தொழில் அமைப்புடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என் மூலம் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடித்தளத்தினை வழங்கும்போது, ஊழல் மற்றும் தவறின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய கணிசமான தவறான கூற்றில் கவனத்தினைச் செலுத்தி மதிப்பீடு செய்தவேளையில் தருணத்திற்கேற்ப உயர் கணக்காய்வு முறைமை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. போதுமான தவறுக் கூற்றினால் இடம்பெறும் விளைவுகளுக்கு மேலாக ஊழல்களினால் இடம்பெறும் தாக்கம் அதிகமானது என்பதுடன், பிளவு, தவறு ஏட்டினைத் தயாரித்தல், வேண்டுமென்றே கைவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைக் கைவிடுதல் தவறொன்று ஏற்படுவதற்கு காரணமாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைத்திறன் தொடர்பில் கருத்துரையினை வெளிப்படுத்துவதற்கு எண்ணவில்லையாயினும், தருணத்திற்கு உகந்த கணக்காய்வு முறைமையினைத் திட்டமிடுவதற்கு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பிலான புரிந்துணர்வொன்று பெறப்பட்டுள்ளது.

- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் சிறந்த தன்மை, கணக்கீடு செய்யப்படும் மதிப்பீடுகளில் நியாயபூர்வம் மற்றும் முகாமைத்துவத்தினால் முன்னெடுக்கப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகளில், பொருத்தப்பாடு தென்பட்டுள்ளது.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு, உள்ளீர்ப்புச் செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உன்னதமான வகையிலும் மற்றும் நியாயபூர்வமான வகையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் வெளிப்படைத்தன்மையினை உள்ளடக்கி நிதிசார் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் அவதானிக்கப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வினை அலசி ஆராய்தல், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தர் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளார்.

**1.6. நிதிசார் கூற்றுக்கள் தொடர்பிலான கருத்துக்களினை எடுத்தியம்புதல்.**

1.6.1. **முற்பணக் கொடுப்பனவுகள்**

(அ) 2025 திசம்பர் 31 ஆந் திகதியன்று தீர்க்கப்படாதிருந்த 03 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் கடன்

மீதி ரூபா. 284,727 அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பணியிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டிய 01

வருடத்தினைத் தாண்டிய கடன் மீதியில் 2026 மே மாதம் 30 ஆந் திகதியன்று மேலும் அறவீடு செய்யப்பட வேண்டிய மீதி ரூபா. 467,671 ஆகவிருந்தது.

1.6.2 **கட்டுநிதி இணக்கக் கூற்றின் மீதி**

(அ) கட்டுநிதி இணக்கக் கூற்றில், பிற தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் நிறுவனத்தினால் முற்பண

"பீ" கணக்கில் பற்று வைக்கப்பட்ட தொகை ரூபா. 510,406 ஆக இருந்தபோதிலும் அமைச்சின் கணக்குப் புத்தகங்களின் பிரகாரம் ரூபா. 358,579 என்று காணப்பட்டபோதிலும், அக்கணக்கின் மதிப்பு ரூபா. 151,827 அளவுக்கு மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கட்டுநிதி இணக்கக் கூற்றின் பிரகாரம் பிற தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் நிறுவனத்தினால்

முற்பண "பீ" கணக்கில் ரூபா. 74,269,912 என்று பற்று வைக்கப்பட்டபோதிலும் அமைச்சின் கணக்குப்

புத்தகங்களின் பிரகாரம் ரூபா. 73,546,852 என்று காணப்பட்டபோதிலும் அப் பெறுமதி ரூபா. 723,060

மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) கட்டுநிதி இணக்கக் கூற்றின் பிரகாரம் பிற தலைப்புக்களினால் முற்பண "பீ" கணக்குக்குச் செய்யப்பட்ட பற்றில் மீதி இல்லாமைப் போயினும் திறைசேரி அச்சுப்பொறி வெளியீட்டின் பிரகாரம் ரூபா. 571,232 என்று காணப்பட்டபோதிலும் அமைச்சின் கணக்குப் புத்தகங்களின் பிரகாரம் ரூபா. 571,232 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டுள்ளது.

### 1.6.4. நிதி சாரா சொத்துக்கள்

நிதி நிலைக்கூற்றுக்களின் பிரகாரம் நிதி சாரா சொத்துப் பிரகடனத்தின் பேரேட்டுக் கணக்கு இலக்கம் 9152 போக்குவரத்து உபகரணத்தின் (Transport Equipment) கீழ் சொத்துக் கழிப்பனவுப் பெறுமதி ரூபா. 39,100,000 என்று காட்டப்பட்டிருந்ததுடன், அமைச்சுத் தகவல்களின் பிரகாரம் கழிப்பனவு செய்யப்பட்ட KL – 2768 என்ற வாகனத்தினதும் மற்றும் KD – 0604 என்ற வாகனத்தினதும் பெறுமதி முறையே, ரூபா. 7,000,000 மற்றும் ரூபா. 4,100,000 ஆகக் காட்டப்பட்டபோதிலும் 2024 திசம்பர் 31 ஆந் திகதிய வாகனங்கள் தொடர்பிலான பதிவேட்டின் பிரகாரம் அவ்வாகனங்களின் செலவு முறையே, ரூபா. 17,500,000, ரூபா. 3,000,000 ஆகக் காணப்பட்டது. அதள் பிரகாரம் சொத்துக் கழிப்பனவின்போது அகற்றப்பட்ட சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்காய்வுக்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.6.5. வைப்புக் கணக்கு மீதிகள்

6000-0-0-13-0-86 என்ற வைப்புக் கணக்கு இலக்கத்தின் மீளாய்வு ஆண்டில் அமைச்சின் கணக்குப் புத்தகங்களின் பிரகாரம் மீதி ரூபா. 8,690,354 எனக் காணப்பட்டதுடன், கணனி அச்சுப் பொறியின் பிரகாரம், வைப்பு மீதி ரூபா. 8,564,954 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் அமைச்சுப் புத்தகங்களின் பிரகாரம் மீதி ரூபா. 125,000 மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

## 2. பிற சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பிலான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(இ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களினை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் நேரொத்தவை எனவும்,

(ஆ) கடந்த வருடம் தொடர்பிலான நிதிசார் கூற்றுக்கள் தொடர்பில் என்மூலம் இடம்பெற்ற பரிந்துரைகள் அமுலாக்கப்பட்டிருந்தன.

| கடந்த வருடத்துடன் தொடர்பிலான | நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரை | இவ் அறிக்கையின் பந்திக் குறிப்பு |
|---|---|---|

அறிக்கையின் பந்திக் குறிப்பு

4.4 (ஆ) 2014 ஆம் ஆண்டில், ஒரு ஜீப் வாகனமொன்று விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் நி.பி. 104(1) க்கு முரணானவாறு விபத்து இடம்பெற்று 10 வருடங்கள் கடந்து அதாவது 2024 ஜனவரி மாதம் 02 ஆந் திகதி முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதில் இடம்பெற்ற நட்டம் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் விபத்துத் தொடர்பில் மோட்டார் வாகனத் திணைக்களத்தின் மோட்டார் வாகனப் பரீட்சிப்பாளரின் அறிக்கையும் கிடைக்கப் பெறாதிருந்தது. பொறுப்பன தரப்பினரினால் வாகனம் விபத்துக்குட்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட காலவரையறையினுள் இழப்பினை ஈடுசெய்வது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையின் காரணமாக இந்த இழப்பினை மீள்நிரப்புவதற்கு முடியாதுள்ளதுடன், 2024 திசம்பர் 18 ஆந் திகதி வரையில் ஜீப் வாகனம் பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தப்பட்டிருந்தது. 4.4 (அ)

## 3. நிதி மீளாய்வு

### 3.1. செலவு முகாமைத்துவம்

(அ) அரச கணக்கு வழிகாட்டுதல்கள் 02/2025 இன் 3.4 வது பந்தியின் பிரகாரம் தேறிய ஒதுக்கீடு மற்றும் செலவுக்கிடையேயான வேறுபாடு ரூபா. 10,000 அல்லது நூற்றுக்கு 5 சதவீதத்திற்கும் அதிகமான ஒவ்வொரு செலவு விடயத்திற்குமான காரணங்கள் காட்டப்படுதல் வேண்டுமாயினும், நிகழ்ச்சித் திட்டங்கள் 1 மற்றும் 2 இன் செலவு விடயங்கள் 12 இன் தேறிய ஒதுக்கீட்டின் மொத்தம் ரூபா. 591,530,000 வும், செலவு மொத்தம் ரூபா. 113,942,594 வும் மற்றும் மீதி ரூபா. 468,097,323 ஆகக் காணப்பட்டது. இவ்வேறுபாடு நூற்றுக்கு 23 சதவீதம் தொடக்கம் 83 சதவீதம் வரை இடைவெளி காணப்பட்டதற்கான காரணங்கள் காட்டப்பட்டிருக்கவில்லை. ஒட்டுமொத்தமாக அமைச்சின் மொத்தத் தேறிய ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 46 சதவீதம் மீதமாகக் காணப்பட்டது.

(ஆ) 124-02-08-1001-1409 வரையான செலவு விடயங்களின் கீழ் அக்குரஸ்ஸ முன்பிள்ளைப் பருவ விருத்தி நிலையத்திற்கு ரூபா. 13,530,020 மீண்டுவரும் தேறிய ஒதுக்கீட்டிலிருந்து ரூபா. 1,122,951 மட்டுமே செலவு செய்யப்பட்டிருந்ததுடன், நிதிச் சொத்துக்களினைப் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தலின் கீழ் ரூபா. 250,000 தேறிய ஒதுக்கீடு முழுமையாக மீதமாகக் காணப்பட்டது.

### 3.2. <u>பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு வருதல்</u>

மீளாய்வு ஆண்டுடன் தொடர்பிலான வெளித் தரப்பினருக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா. 3,086,733 பொறுப்புக்களாக கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 3.3. சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்காமை.

| சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளினை முன்வைத்தல் | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண விதிக்கோவை | |
| I. நி.பி. 104 (1)(அ) | இழப்பு அல்லது நட்டம் இடம்பெற்று உடனடியாக அதன் அளவு மற்றும் காரணங்களினைக் கண்டறியவும் மற்றும் |

| | |
|---|---|
| | அதற்குப் பொறுப்பானவர்களினைத் தீர்மானிக்கவும் விசாரணைகள் தொடங்கப்படவில்லை. |
| ii. நி.பி. 104(3) | பூர்வாங்க அறிக்கை 07 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்ற போதிலும் 2025 ஆம் ஆண்டில் விபத்துக்களில் சிக்கிய 15 வாகனங்கள் தொடர்பான பூர்வாங்க அறிக்கைகள் 11 தொடக்கம் 86 நாட்கள் வரையிலான தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருநததுடன், மேலும் பூர்வாங்க விசாரணைகளுக்கான அதிகாரிகளினை நியமிப்பதிலும் தாமதம் ஏற்பட்டது. |
| iii. நி.பி. 104(4) | இழப்பு அல்லது சேதம் ஏற்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்றபோதிலும், ஒரு வருடத்தினுள் விபத்துக்களில் சிக்கிய 5 வாகனங்கள் தொடர்பிலான முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பதில் 3 தொடக்கம் 7 மாதங்கள் வரை தாமதம் ஏற்பட்டது. |
| பொதுக் கணக்குகள் சுற்றுநிரூப இலக்கம் 262/2017 | தீர்க்கப்படாது காணப்பட்ட கடன் மீதியினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.4. இடைக்காலக் கட்டுநிதியினை வழங்குதல் மற்றும் தீர்த்தல்.**

2020 ஆகஸ்டு 28 ஆந் திகதிய 01/2020 எனற இலக்க அரச நிதிச் சுற்றுநிரூபத்தின் 09 வது பந்தியினைத் திருத்தி நி.பி. 371 இன் பிரகாரம் இடைக்காலக் கட்டுநிதியினைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தரினால் பணி முடிவடைந்து உடனடியாக செலுத்துதல் வேண்டும் என்ற போதிலும், மாதிரிக் கணக்காய்வுப் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்ட அமைச்சின் 31 சந்தர்ப்பங்கள் தொடர்பில் ரூபா. 1,583,422 முற்பணத்தினைப் பெற்ற உத்தியோகத்தர்கள் 07 தொடக்கம் 47 நாட்கள் வரையிலான கால இடைவெளி தாமதப்படுத்தி தீர்த்தல் முன்னெடுக்கப்பட்டிருந்தது

**3.5. வைப்புக்கள்**

(அ) மூன்றாவது தரப்பினருக்கு மீளவும் கொடுப்பனவினைச் செய்வதற்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வைப்புக் கணக்கில் இரண்டு வருடங்களுக்கும் மேலாகக் காணப்பட்ட ரூபா. 835,875 மீதி, மீளாய்வு ஆண்டின் நிறைவில் நி.பி. 571(3) இன் பிரகாரம் அரச வருவாய்க்கு வரவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வைப்பு இருப்புச் சரிபார்ப்பு அறிக்கையினைத் தயாரிக்கும்போது, திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரமான இருப்பினை, அமைச்சுப் புத்தகங்களின் பிரகாரம் இருப்பாகக் கொண்டுவந்தமையினால் இருப்பு சரிபார்ப்பு அறிக்கையினைத் தயாரிப்பதன் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1, செயற்றிறன்**

**3.1.1. தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று**

அமைச்சின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று, வளர்ச்சியின் பலாபலன்களினைச் சமமாக அனுபவிக்கும் ஒரு செழிப்பான சமூகம் மற்றும் கிராமிய அபிவிருத்தியினை மேம்படுத்துதல், சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டலினை உறுதிப்படுத்துவதற்கு சகல பங்குதாரர்களின் பங்கேற்புடன் வேலைத்திட்டங்களினைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்குதல் வேண்டுமாயினும், அது தொடர்பில் சகல பிரிவுகளினாலும் சம பங்களிப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**4.1.2. கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

(அ) உளவளத்துணைப் பிரிவு தொடர்பில் 2025 ஆம் ஆண்டுக்காக 124-2-03-007-2509 என்ற செலவு விடயத்தின் கீழ் ரூபா. 10,000,000 ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் 07 பிரிவுகளின் கீழ் 25 செயற்பாடுகளினைக் கொண்ட 12,905 வேலைத்திட்டங்களினை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தன. அவற்றினுள் ஒரு வேலைத்திட்டத்தின் எவ்வித செயற்பாடும் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், 09 வேலைத்திட்டங்களின் செயற்றிறன், நூற்றுக்கு 10 சதவீதம் தொடக்கம் 66 சதவீதம் வரையிலான இடைவெளியினைக் கொண்டு விளங்கியது. ஒரு வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படவேண்டிய வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் நிறுவனத்திலுள்ள மனித வளங்களினை ஆகக்கூடிய விளைத்திறனுடன் அவ்வேலைத்திட்டங்களினை அமுலாக்குவதற்கு தொழிற்படுதல் தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) ஊழியர்களின் திறன் மற்றும் அறிவினை மேம்படுத்துவதற்கு 03 பயிற்சி வேலைத்திட்டங்களினூடாக 149 ஊழியர்களின் திறனினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதிலும் 98 ஊழியர்களுக்காக 02 வேலைத்திட்டங்கள் மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. அது நூற்றுக்கு 66 சதவீத முன்னேற்றம் மட்டுமேயாகும்.

(இ) கிராமிய மேம்பாட்டுப் பணியகத்தின் கீழ் செயற்றிட்டச் சாத்தியக்கூறு மற்றும் சாத்தியக்கூறு தொடர்பிலான வெளிக்கள விஜயங்களினூடாக 50 அறிக்கைகளினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தபோதிலும் 23 மதிப்பீட்டு அறிக்கைகள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது.

(LSW/D/MSE/AQ/2025/02)

(ஈ) கிராமிய மேம்பாட்டுப் பணியகத்தின் செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் சமுதாயம் தொடர்பிலான 14,008 விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களினை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் ரூபா. 15,000,000 ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டு நிறைவு வரையிலும் எந்தவிதமான வேலைத்திட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**4.1.3. எதிர்பார்த்த பயன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை.**

பிலிமத்தலாவ பயிற்சி ஆய்வு நிறுவனத்தினால் ரூபா. 203,575 செலவு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரை பல்வேறு விசேட துறைகள் தொடர்பிலான ஆய்வுகள் இடம்பெற்று ஆய்வறிக்கைகள் தலைமை அலுவகத்தின் நூலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன், அந்தந்த துறைசார்ந்த நிறுவனத்திற்குப் பிரதி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(LSW/D/RDTRI/2025/AQ/01)

**4.1.4. செயற்றிட்டங்களினை நிறைவேற்றுவதில் தாமதம்**

கிராமிய மேம்பாட்டு வேலைத்திட்டத்திற்கான (2025-2029) வழிகாட்டல் விதிக்கோவை 01/2025 இன் 03 வது பந்தியிலுள்ளவாறு, ஒருங்கிணைந்த அபிவிருத்தி அணுகுமுறையினூடாக கிராமப்புற மற்றும் தோட்டப்புறங்களிலுள்ள பன்முக வறுமையினை ஒழிக்கும் ஒட்டுமொத்தமான நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக ஆகக்குறைந்த வகையில் 1000 கிராம உத்தியோகத்தர் தொகுதிகளில் இவ்வேலைத்திட்டத்தினை அமுலாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தபோதிலும், 260 கிராம உத்தியோகத்தர் தொகுதிகள் தொடர்பில் அமுலாக்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை 193 ஆகும். வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தின் பிரகாரம்,

(i) ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் பன்முக வறுமை உயர் மட்டத்தில் காணப்படும் 03 தொகுதிகளினை அடையாளம் கண்டு முன்னுரிமையளிக்கப்படுதல் வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தபோதிலும் 07 கிராம உத்தியோகத்தர் தொகுதிகளுக்கு 38 செயற்றிட்டங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ii) மேற்குறிப்பிட்ட வழிகாட்டி விதிக்கோவையின் பிரகாரம் வேலைத்திட்டம் அமுலாக்கப்படும் பிரதான துறைகளின் கீழ் தொழில்வாண்மை தொடர்பிலான திறன்கள் மற்றும் ஆற்றல்களினை மேம்படுத்துதல், சமூகம் முகங்கொடுக்கும் சமூகப் பிரச்சினைகளினைத் தீர்ப்பதற்கு உதவுதல், தேவையான தலையீடுகளினைச் செய்தல் மற்றும் சூழல் பாதுகாப்பு போன்ற துறைகள் தொடர்பில் வேலைத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தேவைகளினை நன்கு ஆய்வுசெய்யாது செயற்றிட்ட அறிக்கைகளினைத் தயாரித்தல் மற்றும் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு இயலுமையினைக் கொணட பயனாளிகளினைத் தெரிவு செய்வது இடம்பெறாது செயற்றிட்ட அறிக்கைகளினைத தயாரித்து நிதியினை அங்கீகரித்ததன் பின்னர் 10 செயற்றிட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சில செயற்பாடுகள்./சில உபகரணங்களினைத் திருத்தி செயற்றிட்டத்தினை முன்னெடுப்பதற்கு அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது.

### 4.1.5. நிதி விடுவிக்கப்பட்டிருந்த பின்னரும் முன்னேற்றம் காணாத செயற்றிட்டங்கள்

(அ) 124-2-5-2202 (001) மூலதன மாற்றல்கள் செலவு விடயத்தின் கீழ், அபிவிருத்தி உதவிக்கான ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கென நிதியளிக்கப்பட்ட வெளிநாட்டு உதவியினூடாக ரூபா. 998,000,000 தேறிய ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா. 21,739,406 மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளதுடன், ரூபா. 976,260,594 அதாவது நூற்றுக்கு 98 சதவீதம் மீதமாகியிருந்தது. மீதிக்கான காரணங்களாக திணைக்களத்தின் கொள்முதல் செயற்பாடு தாமதமாகியமையின் கீழ் செயற்றிட்டப் பிரிவின் உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப உதிரிப்பாகங்களினைக் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட நிதி செலவிடப்படாது காட்டப்பட்டிருந்தது. இவ்வேலைத்திட்டத்திற்கு நிதி ஆதாரத்தின் செலவு தொடர்பில் கவனத்திற் கொள்ளாது முகாமைத்துவத் தீர்மானத்திலுள்ள பலவீனங்களின் காரணமாக இச் சேமிப்பு ஏற்பட்டுள்ளது என்பதால் கொடுக்கப்பட்டுள்ள காரணங்கள் கணக்காய்வுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கவையாக இல்லை.

(ஆ) மூலதன மாற்றல்கள் செலவு விடயத்தின் கீழ், அபிவிருத்தி உதவிக்கான சமூகப் பாதுகாப்புச் செயற்றிட்டம் (உலக வங்கி - இலங்கை அரசு) சார்பில் நிதியீட்டல் எதிரிணை நிதியத்தினூடாக ரூபா. 40,000,000 தேறிய ஒதுக்கீடுகள் முழுமையாக மீதமாகியிருந்தது.

## 4.2. வெளிநாட்டு உதவிச் செயற்றிட்டங்கள்

(அ) வெளிநாட்டு உதவிச் செயற்றிட்டங்களின் செயற்றிறன்

உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்திலுள்ள தம்புள்ள விவசாய சேவை நிலையத்திற்கு உரித்தான வல்கம் வாவித் தொகுதியில் அமைந்துள்ள "கொரகக வாவி" அப்பகுதிக்கு உரித்தான விவசாய அமைப்புக்களின் உறுப்பினர்களின் ஊழியப்படைப் பங்களிப்பினை நேரடியாகப் பெற்று மீள்நிர்மாணப் பணிகளினைச் செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா. 5,400,000 நிதி, அவ்வுறுப்பினர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வரவிடப்பட்டுள்ளதுடன், 2025 பெப்ரவரி மாதம் 7 ஆந் திகதிய MRDSS/ SS/PSWFPC/03/01/03 என்ற அமைச்சின் செயலாளரின் கடிதத்தினூடாக முன்வைக்கப்பட்டிருந்த வழிகாட்டுதல்களினைப் பின்பற்றாது ஒரு தனியார் நிறுவனத்தினூடாக எந்திரங்கள் மற்றும் வாகனங்களினை வாடகைக்கு எடுத்து உரிய புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுள்ளதுடன், சம்பந்தப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்றிட்டத்தின் சொத்துக்களினை அரைகுறையாகப் பயன்படுத்துதல்/பயன்படுத்தாது இருத்தல்

மாத்தளை மாவட்டத்திற்கு உரித்தான 7 வாவிகள் மற்றும் கால்வாய்களின் புனரமைப்புப் பணிகளினைச் செயல்படுத்துவதற்காக அப்பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விவசாய அமைப்புக்கும் ரூபா. 7,960,269 பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணத் தொகுதிகள் 25, மீளமைப்புப் பணிகள் இடம்பெற்று 2025 யூன் தொடக்கம் ஒக்டோபர் 18 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குப் பின்னர் 2025 ஒக்டோபர் 21 தொடக்கம் 28 ஆந் திகதி வரை காலப்பகுதியினுள் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஒவ்வொரு விவாசாய அமைப்பின் தேவையினைக் கவனத்திற் கொள்ளாது பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த உபகரணங்களில் ரூபா. 1,222,698 பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்படாது தேங்கிக் காணப்பட்டன.

(CPCG/ML/C/Audit Paras (2025)/2026/09)

(இ) 2023 மே மாதம் 19 ஆந் திகதிய 24/2023 என்ற இலக்க கல்வி அமைச்சின் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் ஆரோக்கியமான சுறுசுறுப்பான குழந்தைகளின் தலைமுறை என்ற தொனிப்பொருளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடசாலை ஊட்டச்சத்து நிகழ்ச்சித் திட்டத்திற்கு மேற்குறிப்பிட்ட சுற்றுநிரூப இலக்கம் 15 இன் கீழ் வீட்டுத் தோட்டக்கலை பாடசாலை ஊட்டச்சத்து வேலைத்திட்டம் 2024 ஆம் ஆண்டு தொடக்கம் மொனராகல மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 09 பாடசாலைகளில் அமுலாக்கப்பட்டிருந்தது. பாடசாலை ஊட்டச்சத்து உணவு வழங்குனர்களுக்கு, மரக்கறிகள், பழங்கள் மற்றும் முட்டைகளினை வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட வீட்டுத் தோட்டக் கலை மற்றும் கோழி வளர்ப்புச் செயற்றிட்டப் பயனாளிகளுக்கு உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவியினை வழங்குவது இடம்பெறுகிறது.

I. அதன் கீழ், 2025 ஆம் ஆண்டு தொடர்பில் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கண்காணிப்பு, பயிற்சி மற்றும் நிர்வாகச் செலவுகளுக்கு 124-02-05-04-2202 (13) என்ற செலவு விடய இலக்கத்தின் கீழ், மொனராகல மாவட்டச் செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்களுக்கு ரூபா. 3,440,000 வழங்கப்பட்டுள்ளதுடன், அதில் 28 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 40 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களுக்கு ரூபா. 2,294,206 செலவு செய்யப்பட்டது.

II. 08 பிரதேச செயலகப் பிரிவுகளில் இடம்பெற்ற மாதிரி ஆய்வின் பிரகாரம் 2025 ஒக்டோபர் மாதத்தினுள் பாடசாலை ஊட்டச்சத்து செயற்றிட்டத்தில், 208 கோழி வளர்ப்பு செயற்றிட்டங்களில் 8315 கோழிகளின் மொத்த முட்டை உற்பத்தி 209305 என்பதுடன், அதில் 56177 முட்டைகள் வரையில் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

III. 124-02-05-04-2202 (15) என்ற செலவு விடய இலக்கத்தின் கீழ் தொழில்முனைவோர்களினைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா. 2,342,082 ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அதில், ரூபா. 1,502,300 அதாவது நூற்றுக்கு 64 சதவீதம் மட்டுமே செலவு செய்யப்பட்டிருந்தது.

IV. மேற்குறிப்பிட்ட பிரதேச செயலகங்களில் வீட்டுத் தோட்டக்கலை 12 பயனாளிகள் மற்றும் கோழி வளர்ப்புச் செயற்றிட்டத்தின் 18 பயனாளிகளினால் ஒக்டோபர் மாதத்தில் 09 பாடசாலைகளுக்கு, மரக்கறிகள், பழங்கள் மற்றும் முட்டைகளினை வழங்கும்போது,

- பயனாளிகள் வசிப்பிடத்தினை விட்டுச் செல்லல், உரிய மாதத்தில் சாகுபடிப் பணிகள் இடம்பெறாமை, சாகுபடி உற்பத்திகளினைப் பாடசாலை விநியோகஸ்தர்களுக்கு வழங்காது விற்பனை செய்திருத்தல், பாடசாலை விநியோகஸ்தர்கள்

உற்பத்திகளினை நிராகரித்தல், உத்தியோகத்தர்களினால் செயற்றிட்டப் பயனாளிகள் அல்லாவதர்களுக்கு விவசாய உபகரணங்களினை வழங்குதல் இடம்பெற்றிருந்தது.

- முட்டை உற்பத்திப் பயனாளிகளினால் முட்டை உற்பத்தியினை பாடசாலைகளுக்கு வழங்காது விற்பனை செய்திருத்தல், கோழி வளர்ப்பு நிறுத்தப்பட்டிருத்தல், விலங்குகளுக்கு உணவு வழங்கப்படாதிருத்தல் இடம்பெற்றிருந்தது, அதன் பிரகாரம் உரிய செயற்றிட்டத்தின் கீழ், "ஆரோக்கியமான சுறுசுறுப்பான குழந்தைகள் தலைமுறை" என்ற பாடசாலை ஊட்டச்சத்து நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கு நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை.

**4.3. கொள்முதல்கள்**

(அ) கொள்முதல் கையேட்டின் 4.1.2. இன் பிரகாரம் வருடாந்த பிரேரிக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தினைத் தயாரிக்கும்போது பயன்படுத்தவேண்டிய படிவத்தில் செயற்பாட்டுத் திட்டம் மற்றும் பிரதான கொள்முதல் திட்டத்திற்கான குறிப்புக்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திருத்தப்பட்ட கொள்முதல் திட்டத்தின் பிரகாரம் 123-2-3-2102, 1-2-2103 மற்றும் 2-3-2103 என்ற செலவு விடய இலங்கங்களின் கீழ், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் எந்திரங்கள் மற்றும் பொறித் தொகுதிகளினை கொள்வனவு செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா. 16,000,000 ஆக இருந்ததுடன், உரிய கொள்முதல்கள் ஆரம்பிக்கப்பட்ட தினம் 2-3-2102 செலவு விடயம் தொடர்பில் 2025 மே மாதம் 01 ஆந் திகதியாகவும் மற்றும் இறுதித் தினம் 2025 நவம்பர் மாதம் 30 ஆந் திகதியாகவும், 1-2-2103 செலவு விடயம் மற்றும் 2-3-2103 செலவு விடயம் தொடர்பில் 2025 பெப்ரவரி 01 ஆந் திகதி மற்றும் இறுதித் தினம் 2025 ஒக்டோபர் மாதம் 31 ஆந் திகதி என்றபோதிலும், 2025 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியில் ரூபா. 9,323,119 மீதமாகியிருந்தது. மீதமாகியமைக்குக் காரணங்களாக டிவ்வா புயல் பேரிடர் சூழ்நிலையின் காரணமாக கொள்முதல் பணிகளினை பூர்த்தி செய்ய முடியாதுபோனமை என எடுத்துக் காட்டப்பட்டிருந்தபோதிலும், கொள்முதல் வழிகாட்டி விதிக் கோவையினதும் மற்றும் கொள்முதல் கையேட்டின் 4.1.3. வது பந்தியின் பிரகாரம் விரிவான கொள்முதல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காமை மற்றும் 4.1.5 வது பந்தியின் பிரகாரம் கொள்முதல் கால அட்டவணை தயாரிக்கப்படாமையின் காரணமாக மேற்குறிப்பிட்ட கொள்முதல் பணிகளினைப் பூர்த்தி செய்வதற்கு முடியாது போயுள்ளது.

(இ) பொரள்ள மற்றும் பிலிமத்தலாவ பயிற்சி நிலையத்திற்கு 2025 ஆம் ஆண்டு தொடர்பில், துப்புரவு, சலவை, பாதுகாப்பு மற்றும் சமைத்த உணவு சேவைகளினை வழங்கும் கொள்முதல் நடைமுறையில் கொள்முதல் வழிகாட்டிக் கோவையினதும் மற்றும் கொள்முதல் கையேட்டினதும் 4.2, 5,2,3 மற்றும் 06 இன் இணைப்பு I, இணைப்பு II, இணைப்பு III வது பந்தியினைப் பின்பற்றி உரிய பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(LSW/D/RDTRI/2025/AQ/01,02)

(ஈ) மாத்தளை மாவட்டத்திற்கு உரித்தான வாவி மற்றும் 7 கால்வாய்களின் புனர்நிர்மாணப் பணிகளினை செயலாக்குவதற்காக ரூபா. 9,777,650 விவசாய உபகரணங்களினைக் கொள்வனவு செய்வதற்கு உரிய 2024 கொள்முதல் வழிகாட்டிக் கோவையின் 5.9 வது பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(UPCG/MG/C/WFP/2025/24)

**4.4. இழப்புக்கள் மற்றும் நட்டங்கள்**

(அ) KA - 6730 என்ற இலக்கத்தினைக் கொண்ட ஜீப் 2014, செப்ரெம்பர் மாதம் 24 ஆந் திகதியன்று தனிப்பட்ட பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தபோது விபத்துக்குள்ளானது. மேலும் 11 ஆண்டுகளுக்கும் மேலாகப் பாதுகாப்பற்ற நிலையில் நிறுத்தப்பட்டிருந்தது. நி.பி. 104(3) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை,

நி.பி. 104(4) இன் பிரகாரம் முழுமையான அறிக்கை முன்வைக்கப்படாமை மற்றும் நி.பி, 105, 106 இன் பிரகாரம் பணிகள் மீளாய்வு ஆண்டு நிறைவாகியும் நிறைவேற்றப்படாதிருந்தது. விபத்து இடம்பெற்றவேளையில் இழப்பீட்டின் மொத்தக் காப்புறுதித் தொகை ரூபா. 1,900,000 ஆகவிருந்தது. நி.பி. 156 (i) (அ) இன் பிரகாரம் தாமதம், அலட்சியம், தவறு அல்லது மோசமான காரணத்தினைக் கொண்டு அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்புத் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் தனிப்பட்ட முறையில் பொறுப்பு வகித்தல் வேண்டும் என்பதுடன், அதனால் ஏற்படும் இழப்பு ஈடு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், மேற்குறிப்பிட்ட வாகனம் விபத்துக்குள்ளாகிய வேளையில் ரூபா. 1,900,000 க்கு காப்பீடு செய்யப்பட்டிருந்த சேதமடைந்த அச் சொத்தினை மீளவும் பழைய நிலைக்குக் கொண்டுவருதல் அல்லது அது போன்ற சொத்தொன்றினை கட்டியெழுப்புதல் வேண்டும் என்பதால் நிதிப் பிரமாணம் 105 இன் பிரகாரம் உரிய இழப்பினை, திணைக்களத்தின் கட்டணமாக நூற்றுக்கு 25 சதவீதம் நிதியினை அறவீடு செய்வதற்கு இதுவரை பொறுப்பு வகித்த தரப்பினர் நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளாகியிருந்த JH – 3850 என்ற இலக்க டபிள் கெப் வாகனத்தின் இழப்பு ரூபா. 424,340, 2021 பெப்வரி 25 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தின் அப்போதைய சமுர்த்தி, வீட்டுப் பொருளாதார, நுண் நிதி சுய தொழில் தொழில்முனைவோர் அபிவிருத்தி மற்றும் அரைகுறைப் பயன்பாட்டு அரச வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு கடிதமொன்று முன்வைக்கப்பட்டு வழக்குத் தொடுக்கப்படாது சாரதியிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறிப்படப்பட்டிருந்தபோதிலும் இவ் அறிக்கையின் தினம் வரை அந்நிதியினை அறவீடு செய்வதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(LSW/D/MSE/AQ/03)

### 4.5. முகாமைத்துவத்தின் பலவீனங்கள்

(அ) சலவை சேவைகள் வழங்குவதற்கான உடன்படிக்கைப் பத்திரத்தின் 3.1 வது பிரிவின் பிரகாரம், சுத்தம் செய்வதற்காக கையளிக்கப்பட்ட படுக்கை விரிப்புக்கள் மற்றும தலையணை உறைகளினை சுத்தம் செய்து மூன்று நாட்களுக்குள் ஒப்படைப்பதற்கு உடன்பட்டிருந்தபோதிலும், சலவைச் சேவையினை வழங்கும் நிறுவனம், சலவைச் சேவையினை 2025 யூன் 01 தொடக்கம் 2025 நவம்பர் 09 ஆந் திகதி வரையிலான காலவரையறையினூடாக 14 முறை உரிய பொருட்களினைச் சுத்தம் செய்து மீளவும் ஒப்படைப்பதற்கு 04 நாட்கள் தொடக்கம் 20 நாட்கள் வரையிலான கால அவகாசம் எடுத்துக்கொண்டுள்ளதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது. இத்தகை தாமதங்கள் காரணமாக, உறைவிடப் பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கு வசதிகளினை வழங்குவதன் தரம் குறித்து கணக்காய்வில் சிக்கல் எழுந்துள்ளது.

(LSW/D/RDTRI/2025/AQ/01)

(ஆ) வறுமையினை ஒழிக்கும் நோக்குடன் அரச, பிரத்தியேக மற்றும் பொது ஒருங்கிணைப்புக்கான வேலைத்திட்டமொன்றாக 2017 ஆம் ஆண்டில் கிராம சக்தி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அது தொடர்பில் கிராம சக்திப் பணியகம் நிறுவப்பட்டுள்ளது. பல கட்டங்களின் கீழ், 14,022 கிராம உத்தியோகத்தர் தொகுதிகளினை உள்ளடக்குமாறு அத் தொகுதிகளினுள் அரச அனுசரணையுடன் மேம்படுத்தக்கூடிய அதிக சதவீதக் குடும்பங்களின் பங்கேற்புடன், 3608 கிராம சக்திச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், அதில் 3500 சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (123 வது அதிகார சபை) 6(3) வது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. இச்சங்கங்களில் 1447 செயலிலும் மற்றும் 1667 சங்கங்கள் செயலிழந்தும் காணப்பட்டுள்ளது.

I, செயலிழந்த கிராம சக்திச் சங்கங்களுக்கு உரித்தான மொத்த நிதியின் அளவு ரூபா. 400,965,085 என்பதுடன், அதில், 376,077,653 அரச நிதியாகும்.

II, 07 மாவட்டங்களிலுள்ள 1162 சங்கங்களில் 1015 சங்கங்கள் அதாவது நூற்றுக்கு 87 சதவீதம் செயலிழந்து காணப்பட்டது.

III. 2023 நவம்பர் 14 ஆந் திகதிய மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் செயலாளரின் SDB/GS/DIST-03 /2023 என்ற இலக்க மற்றும் மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பந்தி இலக்கம் 03 இன் II, III மற்றும் IV இன் ஊடாக செயலிழந்த நிலைக்கு உள்ளாகிய கிராம சக்தி சங்கங்கள் குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்ததுடன், அக்கடிதம் வழங்கப்பட்டு 02 வருடங்கள் வரையான காலம் சென்றிருந்தபோதிலும் மேலும் செயலிழந்த சங்கங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

IV. அதன் பிரகாரம் கிராமசக்தி வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த அரச நிதி செயலிழந்த சங்கங்களில் நீண்டகாலமாக முடங்கிக் கிடந்துள்ளதால் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்குப் பயன்படுத்துவதற்கு அல்லது அரசின் பிற அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்கு வாய்ப்புக்களினை வழங்குவதற்கு பணியகத்தின் பொறுப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், நிதி முறைகேடுகளின் அபாயமும் கவனத்திற்கொள்ளப்படவில்லை.

**5. மனித வள முகாமைத்துவம்**

**5.3. இணைப்புச் செய்யப்பட்ட பணியாட்தொகுதி, உண்மையான பணியாட்தொகுதி**

(அ) மீளாய்வு ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட உண்மையான வெற்றிடங்கள் மற்றும் மிகையான ஆளணி பின்வருமாறாகும்.

| தொகுதி | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | வெற்றிடங்கள்/மிகை |
|---|---|---|---|
| சிரேஸ்ட நிலை | 28 | 22 | (6) |
| மூன்றாம் நிலை | 3 | 3 | - |
| இரண்டாம் நிலை | 16384 | 15688 | (696) |
| ஆரம்ப நிலை | 45 | 34 | (11) |
| ஒப்பந்தம் | 4 | 1 | (3) |

(ஆ) மீளாய்வு ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட உண்மையான மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகையான ஆளணியின் பிரகாரம் சிரேஸ்ட நிலைப் பதவிகள் 06 ம், இரண்டாம் நிலையில் 696 ம், ஆரம்ப நிலையில் 11 ம் என்றவாறு வெற்றிடங்கள் காணப்பட்டுள்ளன. ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 04 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தபோதிலும் 03 வெற்றிடங்கள் காணப்பட்டுள்ளன.

(ஆ) அமைச்சின் பணிப்பாளர் (பதில்) உத்தியோகத்தர்கள் 02 பேரும், உதவிப் பணிப்பாளர் 03 பேரும், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 07 பேரும், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 09 பேரும், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (சமூகப் பாதுகாப்பு) 07 பேரும் என்றவாறு, ஒரே பணியிடத்தில் 07 தொடக்கம் 27 வரையான இடைப்பட்ட காலத்திற்கு இடமாற்றம் செய்யப்படாது பணியாற்றுவதுடன், அவர்களினை இடமாற்றம் செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**ஒப்பம்/கே.கே.எஸ். ஜயக்கொடி,**
பிரதிக் கணக்காய்வாளர் அதிபதி,
கணக்காய்வாளர் அதிபதிக்காக.

# அத்தியாயம் 04

## செயற்றிறன் சுட்டி

### 4.1. நிறுவனத்தின் செயற்றிறன் சுட்டி (செயற்றிட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு)

| விசேட சுட்டி | எதிர்பார்த்த விளைவின் சதவீதமாக (%) நிலவர முடிவு | | |
|---|---|---|---|
| | 100 % - 90 % | 75 % - 89 % | 50 % - 74 % |
| | | | |
| **அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தலையீடுகளின் எண்ணிக்கை** (PWDs) | √ | | |
| **சமூகப் பிரச்சினைகளினைக் குறைப்பதற்காக நடாத்தப்பட்ட ஆய்வுகள், பயிற்சிகள், ஆலோசனைகள் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை** | | √ | |
| முதியோர்களின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தலையீடுகளின் எண்ணிக்கை | | √ | |
| **ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைகள் திட்டத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை.** | √ | | |
| **கிராமிய மேம்பாட்டினை வலுப்படுத்துவதற்கு செயலாக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை** | √ | | |

# அத்தியாயம் 05

## பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை (SDG) அடைவதன் செயற்றிறன்

### 5.1. அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

| இலக்கு/குறிக் கோள் | இலக்குகள் | சாதனைக்கான குறிகாட்டிகள் | இதுவரை சாதனைகள் பெற்றதன் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | **0 % - 49 %** | **50 % -74 %** | **75 % - 100%** |
| 1) எல்லா இடங்களிலுமுள்ள அனைத்துவ வகையான வறுமையினையும் ஒழித்தல். (SDG 01) | 1.1) 2030 ஆம் ஆண்டளவில் உலகின் சகல இடங்களிலும் வாழும் சகல மக்களின் கடுமையான வறுமையினை ஒழித்தல், தற்போதைய மதிப்பீட்டின் பிரகாரம் நாளொன்றுக்கு 1.25 டொலரினை விடக் குறைவான வருமானம் ஈட்டும் கடுமையான வறிய தொகுதிக்கு உரித்தாகும். (1.1) | 1.1.1) **கிராமிய மேம்பாட்டினை வலுப்படுத்துவதற்கு அமுலாக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை.** | | | √ |
| | 1.2) அடி மட்டத்திலுள்ளவர்களினை உள்ளடக்கி சகல மக்கள் தொடர்பிலும் தேசிய ரீதியில் பொருத்தமான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களினைச் செயற்படுத்துதல் மற்றும் 20230 ஆம் ஆண்டளவில் வறுமையினால் வாடும் மற்றும் | 1.2.1) ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைகள் திட்டத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை. | | | √ |
| | | 1.2.2) சுய தொழில் செய்பவர்களுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை. | | | √ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நலிவடைந்த குழுக்களினை போதியவாறாக அதனூடாக உள்ளடக்குதல். (1.3) | | | | |
| | 1.3) குறிப்பாக ஆகக்குறைந்த வகையில் அபிவிருத்தியடைந்த நாடுகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படும் சகல வகையிலான வறுமையினையும் ஒழிப்பதற்கும் மற்றும் தேவையான போதுமான மற்றும் நம்பிக்கை வைக்கக்கூடிய முறைகளினை உருவாக்குவதற்கு மேம்படுத்தப்பட்ட அபிவிருத்தி ஒத்துழைப்பினை உள்ளடக்கிய பல்வேறான மூலங்களிலிருந்து வளங்களினை வழங்குவதையும் குறிப்பிடத்தகளவில் மேம்படுத்துதல். (1.3) | 1.3.1) கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை. | | | √ |
| | | 1.3.2) கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டுள்ள கள மட்ட உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை. | | | √ |
| | | 1.3.3) கிராம சமூகத்தின் சமூகப் பொருளாதார வலுவூட்டலினை மேம்படுத்துவதற்கு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை. | | | √ |
| 2) பசியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பையும் சிறந்த ஊட்டச்சத்தையும் உறுதி செய்தல் மற்றும் நிலையான வேளாண்மையை | 2.1) 2030 ஆம் ஆண்டளவில் பசியினை ஒழித்தல், குறிப்பாக குழந்தைகளினை உள்ளடக்கி வறுமையில் வாடும் மற்றும் பாதிக்கக்கூடிய மக்களுக்கு பாதுகாப்பான, | 2.1.1) சாகுபடி செய்யப்பட்ட ஏக்கர்களின் அளவு | | | √ |
| | | 2.1.2) பயன்களினைப் பெற்ற மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் தாயர்மார்களின் எண்ணிக்கை | | √ | |
| | | 2.1.3) பண்ணைகளின் எண்ணிக்கை, பாடசாலைகளின் எண்ணிக்கை, | | | √ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஊக்குவித்தல் (SDG 02) | சத்தான மற்றும் போதுமான உணவினை வருடம் பூராவும் பெற்றுக் கொள்வதற்கு முடியும் என்பதை உறுதிப்படுத்துதல். | மாணவர்களினை எண்ணிக்கை | | | |
| 3) ஆரோக்கியமான வாழ்க்கையினை உறுதி செய்து அனைத்து வயதிலுமுள்ள அனைவருக்கும் நலன்புரியினை மேம்படுத்துதல். (SDG 03) | 3.1) 2030 ஆம் ஆண்டளவில் தொற்றாத நோய்களினால் ஏற்படும் அகால மரணங்கள், கிகிச்சைகளினூடாக மற்றும் தடுப்புத் திட்டங்களினூடாக மூன்றில் ஒரு பங்காகக் குறைத்தல் மற்றும் உள சுகாதாரத்தினைச் சிறந்தவாறு மேம்படுத்துதல். (3.1) | 3.1.1) உளவியல் சமூகப் பிரச்சினைகளினை அடிப்படையாகக் கொண்ட குழுக்கள் தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்ட பயனாளிகளின் எண்ணிக்கை. | | | |
| | 3.2) நிதி அபாயத்தில் கவனம் செலுத்துவதற்கு பாதுகாப்பு உட்பட, பாதுகாப்பான, செயற்றிறனான, தரமான உயர்ந்த மற்றும் குறைந்த செலவில் பெற்றுக் கொள்ளக்கூடிய மருந்துகள், ஊசிகள் மற்றும் அத்தியாவசியமான சுகாதார சேவைகள் அனைவருக்கும் கிடைக்கக்கூடியவாறு உலகளாவிய அளவில் சுகாதார வசதிகளினைப் பெற்றுக் கொள்வதற்கு இயலுதல். 3.8) | 3.2.1) மருத்துவ உதவியினைப் பெற்றுக் கொண்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை. | | | √ |
| | | 3.2.2) முதியோர்களுக்காக நடாத்தப்பட்ட மருத்துவ முகாம்களின் எண்ணிக்கை. | | √ | |
| | | 3.2.3) சுகாதாரப் பராமரிப்பு உதவியினைப் பெற்ற முதியோர்களின் எண்ணிக்கை. | | | √ |
| | | 3.2.4) உதவி உபகரணங்களினைப் (செவிப்புலக் கருவிகள், மூக்குக் கண்ணாடிகள்) பெற்ற முதியோர்களின் எண்ணிக்கை. | | | √ |
| 4) விரிவான, சமத்துவமான, தரமான கல்வியினை | 4.1) 2030-ஆம் ஆண்டிற்குள், பல்கலைக்கழகக் கல்வி உட்பட, | 4.1.1) சமூகப் பணி பட்டப்படிப்பில் பங்கேற்ற மாணவர்களின் எண்ணிக்கை | | | √ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உறுதி செய்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்கும் வாய்ப்புக்களினை வழங்குதல். **(SDG 04)** | அனைத்துப் பெண்கள் மற்றும் ஆண்களுக்கும் தரமான மற்றும் மலிவு விலையில் தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் உயர்கல்வி கிடைப்பதை உறுதி செய்தல். (4.3) | 4.1.2) தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் இளைஞர் குழுக்களில் திறன் மேம்பாட்டிற்காக நடத்தப்படும் திட்டங்களின் எண்ணிக்கை | | | √ |
| | | 4.1.3) கல்வியுதவி வழங்கப்பட்ட அங்கவீனமுற்ற மாணவர்களின் எண்ணிக்கை. | | | √ |
| 5) அனைவருக்கும் சத்தான, முழுமையான மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி, முழு, உற்பத்தி மற்றும் சிறந்த வேலைவாய்ப்பை ஊக்குவித்தல் (SDG 8) | 2030 க்குள் அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் இளைஞர்கள் உட்பட அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கும் பயன்மிக்க ஒழுக்கமான வேலை வாய்ப்புகளை வழங்குதல் (8.5) | 5.1.1) சுய தொழில் உதவியினைப் பெற்றுக் கொண்ட முதியோர்களின் எண்ணிக்கை | | √ | |
| | | 5.1.2) சுய தொழில் உதவியினைப் பெற்றுக் கொண்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை | | | √ |
| | | 5.1.3) அங்கவீனமுற்ற நபர்களின் திறன்களினை வளர்த்த நிறுவனங்களின் எண்ணிக்கை | | | √ |
| 6) நகரங்கள் மற்றும் குடியிருப்புகளை சரியான, பாதுகாப்பான, வலுவான மற்றும் நிலையானதாக மாற்றுதல். **SDG 11)** | 6.1) 2030க்குள் அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் மலிவு விலையில் வீடுகள் மற்றும் அடிப்படை சேவைகளை அணுகுவதை உறுதிசெய்து, குடிசை வீடுகளை மேம்படுத்துதல் (11.1) | 6.1.1) வீடமைப்பு உதவியினைப் பெற்றுக் கொண்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை. | | | √ |
| | | 6.1.2) வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உதவியினைப் பெற்ற முதியவர்களின் எண்ணிக்கை | | | √ |

## 5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை அடைவதிலுள்ள சவால்கள்.

1. தேசிய செயற்றிட்டங்கள் மற்றும் சட்டங்களினைச் செயற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்/அமைச்சுக்களுக்கு ஏற்பாடுகள் இல்லாமையின் காரணமாக முன்னேற்றத்தினைக் கோருவதில் சிரமங்களுக்கு முகங்கொடுப்பதற்கு நேரிடுதல்.
2. வேலைத்திட்டங்களினை ஒருங்கிணைப்பதில் உத்தியோகத்தர்கள் மற்றும் வளங்களுக்குப் பற்றாக்குறை காணப்படுதல்
3. விடய அறிவு பயிற்சித் தேவைகள் போதுமானதாக காணப்படாமை.
4. அபிவிருத்தி வேலைத்திட்டங்களினைச் செயற்படுத்தும்வேளையில் நவீன தொழில்நுட்ப முறைகளினைப் பயன்படுத்துவதற்கு உத்தியோகத்தர்கள் காட்டும் எதிர்மறையான உளப்பாங்குகள், போதுமான பௌதிக வளங்கள் இல்லாமை மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகள் மற்றம் பயன்பாடு தொடர்பில் முதியோர் சமூகத்தின் புரிந்துணர்வு குறைவடைதல்.
5. போதுமான பணியாளர்கள் மற்றும் பௌதிக வளங்கள் இல்லாமை.
6. கிராம மட்டத்தில் அமுலாக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் முதியோர் சமூகத்தினை செயலூக்கமாகத் தொடர்புபடுத்துவதற்கு சிரமங்கள் ஏற்படுதல்..
7. சில பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படும் கிராம உத்தியோகத்தர் தொகுதிகளின் அளவு பாரியளவு என்பதால் விடயத்தினை உள்ளடக்குவதற்கு ஒரு உத்தியோகத்தர் போதாதிருத்தல்.
8. திட்டமிட்டபடி கட்டுநிதி கிடைக்காமை.

# அத்தியாயம் 06

## மனித வளத் தோற்றுவாய்

### 6.1 ஆளணி முகாமைத்துவம்

| நிறுவனம் | சிரேஸ்ட நிலை | | மூன்றாம் நிலை | | இரண்டாம் நிலை | | ஆரம்பநிலை | | தற்காலிகம் | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப் பட்ட ஆளணி | சேவையிலுள் ள ஆளணி | அங்கீகரிக்கப் பட்ட ஆளணி | சேவையிலுள் ள ஆளணி | அங்கீகரிக்கப் பட்ட ஆளணி | சேவையிலுள் ள ஆளணி | அங்கீகரிக்கப் பட்ட ஆளணி | சேவையிலுள் ள ஆளணி | அங்கீகரிக்கப் பட்ட ஆளணி | சேவையிலுள் ள ஆளணி | அங்கீகரிக்கப் பட்ட ஆளணி | சேவையிலுள் ள ஆளணி | வெற்றிடம்/ மேலதிகம் |
| கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகைப் பிரிவு | 28 | 20 | 3 | 3 | 544 | 538 | 45 | 35 | 4 | 1 | 624 | 597 | 27 |
| **திணைக்களங்கள்/நிறுவனங்கள்/பிரிவுகள்** | | | | | | | | | | | | | |
| அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் | 6 | 5 | 3 | 2 | 53 | 39 | 6 | 2 | 0 | 0 | 68 | 48 | 20 |
| முதியோர்களுக்கான தேசிய செயலகம் | 7 | 3 | 2 | 1 | 116 | 101 | 24 | 12 | 0 | 0 | 149 | 117 | 32 |
| இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை | 8 | 6 | 17 | 14 | 130 | 87 | 43 | 37 | 0 | 0 | 198 | 144 | 54 |
| உலக உணவு அமைப்புக்கான கூட்டாண்மைச் செயலகம் | 10 | 5 | 0 | 0 | 15 | 7 | 6 | 1 | 0 | 0 | 31 | 13 | 18 |
| தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் | 53 | 30 | 9 | 4 | 49 | 34 | 26 | 20 | 0 | 0 | 137 | 88 | 49 |
| கிராமிய அபிவிருத்திப் பணியகம் | 15 | 11 | 04 | 0 | 74 | 33 | 10 | 2 | 0 | 0 | 103 | 46 | 57 |
| கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் | 4 | 3 | 14 | 10 | 21 | 18 | 11 | 7 | 0 | 0 | 50 | 38 | 12 |
| அரச சார்பற்ற அமைப்புக்களுக்கான தேசிய செயலகம் | 6 | 2 | 0 | 0 | 66 | 54 | 5 | 2 | 0 | 1 | 77 | 59 | 18 |
| மொத்தம் | **137** | **85** | **52** | **34** | **1068** | **911** | **176** | **118** | **4** | **1** | **1437** | **1150** | **287** |

## 6.2 நிறுவனத்தின் செயற்றிறனுக்காக மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகையானது எவ்வாறு பாதித்துள்ளது என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடவும்.

இப் பிரிவு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 624 ஆகும். 2024.12.31 ஆந் திகதியன்று இவ்வமைச்சில் தற்போதுள்ள ஆளணி 594 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட ஆளணி பற்றாக்குறையின் காரணமாக அமைச்சின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளினை அடைவதற்கு ஒரு தடையாகக் காணப்பட்டுள்ளது.

புள்ளி விவர உத்தியோகத்தர் பதவிக்கு குடிசன மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டதன் கீழ் 01 பதவி தொடர்பில் இவ்வமைச்சுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

## 6.3 மனித வளத்திறன் விருத்தி

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | | பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டத்தின் காலவரையறை | மொத்த முதலீடு ரூ.மி | | நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உளளூர்/ வெளியூர் | முடிவு/பெறப்பட்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உள்நாடு | வெளிநாடு | | |
| 1 | மனப்பான்மை மேம்பாட்டு வெளிப்பணி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (முதல் தொகுதி) | 50 | 2 நாட்கள் 2025.03.21 ஆந் திகதி மற்றும் 2025.03.22 ஆந் திகதி | 0.217124 | | உள்ளூர் | திறமையான, செயற்றிறன்மிக்க மற்றும் தரமான சேவைகளினை வழங்குவதற்கு உத்தியோகத்தர்களினை ஊக்குவித்தல். |
| 2 | 2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கொள்முதல் வழிகாட்டுதல்கள் விதிக்கோவை குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். (முதல் தொகுதி) | 78 | 2024.04.01 ஆந் திகதி -06 மணிநேரம் (மு.ப.. 9.00 – பி.ப. 4.00) | 0.057095 | | உள்ளூர் | புதிய கொள்முதல் வழிகாட்டுதல்கள் விதிக் கோவை குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துதல். |
| 3 | 2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கொள்முதல் வழிகாட்டுதல்கள் விதிக்கோவை குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். (இரண்டாவது தொகுதி) | 51 | 2024.04.28 ஆந் திகதி -06 மணிநேரம் (மு.ப.. 9.00 – பி.ப.. 4.00) | 0.00 | | உள்ளூர் | புதிய கொள்முதல் வழிகாட்டுதல்கள் விதிக் கோவை குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துதல். |
| 4 | மனப்பான்மை மேம்பாட்டு வெளிப்பணி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (இரண்டாவது தொகுதி) | 48 | 2 நாட்கள். 2025.05.23 ஆந் திகதி தொடக்கம் 2025.05.24 ஆந் திகதி வரை, | 0.16835 | | உள்ளூர் | திறமையான, செயற்றிறன்மிக்க மற்றும் தரமான சேவைகளினை வழங்குவதற்கு உத்தியோகத்தர்களினை ஊக்குவித்தல். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | இணைந்த சேவையின் அலுவலகப் பணியாளர் சேவையின் I, II மற்றும் III வது தரங்களின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளவர்களுக்கு நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | 29 | 2024.06.13 ஆந் திகதி 03 மணி நேரம் - (மு.ப. 1.00 – பி.ப. 4.00) | 0.005515 | | உள்ளூர் | உரிய விடயத்துறை தொடர்பில் அறிவினை வளர்த்தல். |
| 6 | பிரஜைகள் பட்டயத்தினைத் தயாரிப்பதிலிள்ள அமைப்பு ரீதியிலான தடைகளினைக் கண்டறிந்து எளிதாக்குதல் மற்றும் ஊழல் அபாயங்களினை மதிப்பிடுவது குறித்த பயிற்சிப் பட்டறை | 222 | 2025.07.22 ஆந் திகதி தொடக்கம் 2025.07.30 ஆந் திகதி வரை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடாத்தப் பட்டது. | 0.045425 | | உள்ளூர் | உரிய விடயத்துறை தொடர்பில் அறிவினை வளர்த்தல். |
| 7 | பிரஜைகள் பட்டயத்தினைத் தயாரிப்பதிலிள்ள அமைப்பு ரீதியிலான தடைகளினைக் கண்டறிந்து எளிதாக்குதல் மற்றும் ஊழல் அபாயங்களினை மதிப்பிடுவது குறித்த பயிற்சிப் பட்டறை | 36 | 2025.07.31 ஆந் திகதி சீதுவ NISD மற்றும் 2025.08.01 ஆந் திகதி பிளிமத்தலாவ RDTRI இன் பயிற்சி நிலையத்தில் நடாத்தப் பட்டது. | 0.02073 | | உள்ளூர் | உரிய விடயத்துறை தொடர்பில் அறிவினை வளர்த்தல். |
| 8 | மோட்டார் வாகனமொன்றினைப் பாவிப்பதன் பொதுவான அறிவு மற்றும் நாளதுவரைப்படுத்தப்பட்ட மோட்டார் வாகனச் சட்டங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | 40 | 2025.08.12 ஆந் திகதி - 05 மணிநேரம் (மு.ப. 9.30 - பி.ப. 3.30) | 0.0114 | | உள்ளூர் | மோட்டார் வாகனமொன்றினைப் பாவிப்பதன் பொதுவான அறிவு மற்றும் நாளதுவரைப்படுத்தப் பட்ட மோட்டார் வாகனச் சட்டங்கள் பற்றிய அறிவினை வளர்த்தல். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 9 | மனித வள விருத்தித் திட்டத்தினை தயாரித்தல் பற்றிய விழிப்புணர்வூட்டும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | 61 | 2025.08.15 ஆந் திகதி 03 மணி நேரம் (மு.ப. 9.30 – பி.ப. 12.30) | 0.01176 | | உள்ளூ ர் | மனித வள விருத்தித் திட்டத்தினைத் தயாரித்தல் பற்றிய அறிவினை வழங்குதல். |
| 10 | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 3 ஆவது வகுப்பின் உத்தியோகத்தர்களின் முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையினை இலக்கிட்டு மற்றும் தேவைப்பாட்டினைக் கொண்டுள்ள பிற உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட நிதிப் பிரமாணம் தொடர்பிலான ஒருநாள் பயிற்சி வேலைத்திட்டம். | 62 | 2025.09.08 ஆந் திகதி - 06 மணி நேரம் ((மு.ப. 9.00 – பி.ப. 4.00) | 0.016561 | | உள்ளூ ர் | நிதிப் பிரமாணம் தொடர்பிலான அறிவினை வளர்த்தல். |
| 11 | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 3 ஆவது வகுப்பின் உத்தியோகத்தர்களின் முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையினை இலக்கிட்டு மற்றும் தேவைப்பாட்டினைக் கொண்டுள்ள பிற உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட தாபன விதிக் கோவை தொடர்பிலான பயிற்சி வேலைத்திட்டம். | 45 | 2025.09.10 ஆந் திகதி 04 மணி நேரம் (மு.ப. 10.30 - பி.ப. 2.30) | 0.011661 | | உள்ளூ ர் | **தாபன விதிக்கோவை தொடர்பிலான அறிவினை வளர்த்தல்.** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கடமைப் பொறுப்பினை விழிப்புணர்வூட்டும் மற்றும் கணக்காய்வு விசாரணைகளுக்கு சரியான மற்றும் முறைசார் மறுமொழிகளினை வழங்குதல் தொடர்பில் ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | 56 | 2025.09.15 ஆந் திகதி 06 மணி நேரம் (மு.ப. 9.00 - பி.ப. 4.00) | 0.026166 | | உள்ளூர் | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கடமைப் பொறுப்பினை விழிப்புணர்வூட்டும் மற்றும் கணக்காய்வு விசாரணைகளுக்குச் சரியான மற்றும் முறைசார் மறுமொழிகளினை வழங்குவது தொடர்பிலான அறிவினை வளர்த்தல். |
| 13 | அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் கடமைப்பொறுப்புக் குறித்து விழிப்புணர்வூட்டும் ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | 47 | 2025.10.10 ஆந் திகதி - 06 மணிநேரம் (மு.ப. 9.00 - பி.ப. 4.00) | 0.011550 | | உள்ளூர் | அமைச்சுக்கும் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கும் நியமனம் கிடைக்கப் பெற்ற மற்றும் இடமாற்றம் கிடைக்கப்பெற்ற உத்தியோகத்தர்களுக்கு அமைச்சினதும் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களினதும் கடமைப் பொறுப்புத் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல். |
| 14 | Distance Learning Centre Ltd. நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட அரசின் சம்பள மென்பொருள் (Government Payroll System) தொடர்பிலான இரண்டு நாள் பயிற்சி வேலைத்திட்டம். | 3 | 2025.10.28 2025.10.29 ஆந் திகதிகளில் Distance Learning Centre Ltd. இல் நடாத்தப் பட்டது. | 0.045 | | உள்ளூர் | சம்பளத்தினைத் தயாரித்தல் தொடர்பில் சிறந்த அறிவினைப் பெற்றுக் கொள்ளல். |
| 15 | ஓய்வு பெறுவதற்கு முன்னர் அது தொடர்பில் தயாராகும் கருத்தரங்கு. | 54 | 2025.11.21 ஆந் திகதி - 04 மணிநேரம் (மு.ப. 9.00 – பி.ப.. 1.00) | 0.00 | | உள்ளூர் | ஆரம்பகால ஓய்வூதிய வாழ்க்கையினைத் திட்டமிடுதல். |
| 16 | Diploma in Law for Executives | 2 | 1 வருடம் | 0.134 | | உள்ளூர் | உரிய விடயத்துறை தொடர்பிலான அறிவினை வளர்த்தல். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 17 | JICA Knowledge Co- Creation Program Social Participation of Persons with Disabilities through Community Based Inclusive Approach | 1 | **2025.01.15 - 2025.02.22** | | **Casual Allowance 25X15 = USD 375 Warm Clothing Allowance Pounds 75** | வெளியூர் | உரிய விடயத்துறை தொடர்பிலான அறிவினை வளர்த்தல். |
| 18 | From Liang Jia He to Common Prosperity - New Era China Cooperation Training Programme | 1 | **2025.01.10 - 2025.01.21** | | **Casual Allowance 25x12 = USD 300** | வெளியூர் | உரிய விடயத்துறை தொடர்பிலான அறிவினை வளர்த்தல். |
| 19 | Social Protection & Resilience an Asia - Pacific Workshop | 1 | **2025.02.11 - 2025.02.13** | | **Casual Allowance 25X4 = USD 100** | வெளியூர் | உரிய விடயத்துறை தொடர்பிலான அறிவினை வளர்த்தல். |
| 20 | Workshop on Social Protection Data and Monitoring | 1 | **2025.04.01 - 2025.04.05** | | **Casual Allowance 25X4 = USD 100** | வெளியூர் | சமூகப் பாதுகாப்புத் தரவு மற்றும் கண்காணிப்புப் பற்றிய அறிவு. |
| 21 | Training Programme on 'Digitalization' under the NCGG – SLIDA MoU | 1 | **2025.04.20 - 2025.05.03** | | **Casual Allowance 25x14 = 350** | வெளியூர் | டிஜிட்டல் மயமாக்கல் பற்றிய அறிவு |
| 22 | Informal Sector Enterprise Entrepreneurship & Local Economic Development | 1 | **2025.05.14 - 2025.05.29** | | **Casual Allowance 25x15 = 375** | வெளியூர் | தொழில் முனைவு மற்றும் பிராந்திய பொருளாதார மேம்பாடு தொடர்பிலான அறிவு. |
| 23 | Rising Heat, Rising Action : Solutions for Women in a Warming World, TA 10127-REG: Strengthening Woman's Resilience to Heat Stress in Asia and the Pacific | 2 | **2025.06.01 - 2025.06.05** | | **Casual Allowance 25x04 = 100 25x04 = 100** | வெளியூர் | உரிய விடயத்துறை தொடர்பிலான அறிவினை வளர்த்தல். |
| 24 | Knowledge Sharing on Best Practice on Accelerated Pro - Poor and Inclusive Growth Initiatives | 1 | **2025.06.23 - 2025.06.27** | | **Casual Allowance 25x04 = 100** | வெளியூர் | உரிய விடயத்துறை தொடர்பிலான அறிவினை வளர்த்தல். |
| 25 | Immersion and Learning Visit for the Empowerment Program team to the Satat Jeevikoparjan Yojana (SJY) Program by the Government of Bihar | 1 | **2025.07.28 - 2025.08.01** | | **Casual Allowance 25x6 =150** | வெளியூர் | உரிய விடயத்துறை தொடர்பிலான அறிவினை வளர்த்தல். |
| 26 | Knowledge Sharing on Best Practice on Accelerated Pro - Poor and Inclusive Growth Initiatives | 1 | **2025.07.27 - 2025.08.09** | | **Casual Allowance 25x13 = 325** | විදේශීය | உரிய விடயத்துறை தொடர்பிலான |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 25x13 = 325<br><br>Warm Clothing Allowance Pounds 75 Pounds 75 | | அறிவினை வளர்த்தல். |
| 27 | Plenary Speaker at Delivering for Nutrition in South Asia : Towards Impact at Scale Conference | 1 | 2025.12.01 - 2025.12.05 | | Casual Allowance 40 x 04 = 160<br><br>Warm Clothing Pounds 75 | வெளியூர் | உரிய விடயத்துறை தொடர்பிலான அறிவினை வளர்த்தல். |

**** நிறுவனத்தின் செயற்றிறனில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் எவ்வாறு பங்காற்றுகிறது என்பது தொடர்பில் சுருக்கமாகத் தெளிவுபடுத்தவும்.**

இவ்வமைச்சுக்கும் மற்றும் இணை நிறுவனங்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்களுக்கிடையே மிகவும் முக்கியமான பணியாக நாட்டின் பொருளாதார, சமூக, பௌதிக மற்றும் உள ரீதியில் பின்தங்கிய மற்றும் நலிவடைந்த நிலைகளில் வாழும் குழுக்களினை, பொருளாதார, சமூக, கலாசார மற்றும் ஆன்மீக ரீதியாக வலுவூட்டி அவர்களுக்கு உயர் வாழ்க்கைத் தரமொன்றினை அடையச் செய்வதற்கான கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களினை உருவாக்குதல், அமுலாக்குதல். பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தலாகும்.

இப் பணியினை நிறைவேற்றுவதற்காக அமைச்சின் சமூக வலுவூட்டல் பிரிவினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் மனித வள விடயம் மற்றும் தொழில்நுட்ப அறிவினை வலுவூட்டுதல் வேண்டும் என்பதுடன், அதற்கு நிகராக அவர்கள் தமது பொறுப்புக்களினைச் சரிவர நிறைவேற்றுவதை ஊக்குவிக்கும் வகையில் முறையான வழிகாட்டலுடன்கூடிய மனப்பாங்கு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அவர்களினைத் தவறாது அனுப்புதல் வேண்டும்.

இந்த நோக்கங்களினைக் கருத்திற்கொண்டு அமுலாக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள், தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை அறிவினை வழங்குவதனையும் மற்றும் மனப்பான்மைகளினை வளர்ப்பதனையும் நோக்கமாகக் கொண்டு, மேற்கூறிய தரப்பினர்களுக்கு திறமையான சேவையொன்றினை வழங்குவதற்கு உத்தியோகத்தர்களுக்கிடையே உள உந்துதலினை ஏற்படுத்துவதுடன், அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் செயற்றிறனினை மேலோங்கச் செய்வதற்கு அதனூடாக பாரிய பங்களிப்பு வழங்கப்படுகிறது.

# அத்தியாயம் 07

## இணக்க அறிக்கை

| இலக்கம் | ஏற்புடையதாக்கிக் கொள்ளவேண்டிய தேவைப்பாடு | இணக்க நிலவரம் (இணக்கம்/இணங்காமை) | இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக தெளிவுபடுத்துதல். | இணங்காமையினை எதிர்காலத்தில் தடுப்பதற்கு முன்மொழியப்படும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதிக் கூற்றுக்கள்.கணக்குகள் சரியான திகதியில் முன்வைக்கப்படாமை.** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் | **இணக்கம்** | | |
| 1.2 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு | **இணக்கம்** | | |
| 1.3 | வர்த்தக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு) | **தொடர்பற்றது** | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | **தொடர்பற்றது** | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | **தொடர்பற்றது** | | |
| 1.6 | பிற | **-** | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் ஏடுகளினைப் பாமரித்தல் (நி,பி. 445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றுநிரூபம் 267/2018 இன் பிரகாரம் நிலையான சொத்து பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | **இணக்கம்** | | |
| 2.2 | ஆளுக்குரிய வேதனாதி ஏடு/ஆளுக்குரிய வேதனாதி அட்டைகளினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | **இணக்கம்** | | |
| 2.3 | கணக்காய்வு விசாரணை ஏட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | **இணக்கம்** | | |
| 2.4 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் ஏட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | **இணக்கம்** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **2.5** | சகல மாதாந்த கணக்குப் பொழிப்புக்களினை (CIGAS) தயாரித்து குறிப்பிட்ட தினத்தில் பொதுத் திறைசேரிக்கு முன்வைத்தல். | **இணக்கம்** | | |
| **2.6** | காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | **இணக்கம்** | | |
| **2.7** | பொருட் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | **இணக்கம்** | | |
| **2.8** | இருப்புப் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | **இணக்கம்** | | |
| **2.9** | இழப்பு நட்டம் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | **இணக்கம்** | | |
| **2.10** | பொறுப்புக்களின் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | **இணக்கம்** | | |
| **2.11** | அடியிதழ்சேர் புத்தகங்களின் (GA-N20) பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | **இணக்கம்** | | |
| **3** | **நிதி முகாமை தொடர்பிலான செயற்பாடுகள் (நி.பி.135)** | | | |
| **3.1** | நிதி அதிகார நிறுவனத்தினுள் அதிகாரங்கள் பகிரப்படுதல். | **இணக்கம்** | | |
| **3.2** | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை தொடர்பில் நிறுவனத்தினுள் விழிப்புணர்வூட்டப்பட்டிருத்தல். | **இணக்கம்** | | |
| **3.3** | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் இரண்டு உத்தியோகத்தர்கள் அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கையினைக் கொண்ட உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கக்கூடியவாறு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருத்தல். | **இணக்கம்** | | |
| **3.4** | 2014.05.11 ஆந் திகதிய 171/2004 என்ற இலக்க பொதுக் கணகுக்கள் சுற்றுநிரூபத்தின் பிரகாரம், அரசின் ஊதிய மென்பொருள் பொதியினைப் பாவிக்கும்போது கணக்காளர்களின் முகாமையின் கீழ் நடவடிக்கைகளினை எடுத்தல் | **இணக்கம்** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | **வருடாந்த திட்டங்களினைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல். | **இணக்கம்** | | |
| 4.2 | வருடாந்தக் கொள்முதல் திட்டத்தினைத் தயாரித்தல் | **இணக்கம்** | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல். | **இணக்கம்** | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரித்து தேசியப் பாதீட்டுத் திணைக்களத்திற்கு (NBD) குறிப்பிட்ட தினத்தில் முன்வைத்தல். | **இணக்கம்** | | |
| 4.5 | வருடாந்த காசு பாய்ச்சல் கூற்றினை குறிப்பிட்ட தினத்திற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு முன்வைத்தல். | **இணக்கம்** | | |
| 5 | **கணக்காய்வு விசாரணைகள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் அதிபதியினால் விதிக்கப்பட்ட தினத்தில் சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் மறுமொழிகளினை வழங்கியிருத்தல். | **இணக்கம்** | | |
| 6 | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி.134(2) DMA/1-2019 இன் பிரகாரம் வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல். | **இணக்கம்** | | |
| 6.2 | சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலப்பகுதியினுள் விடையளித்திருத்தல். | **தொடர்பற்றது** | **முன்வைக்கப்பட்ட பெரும்பான்மையான கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு மாத காலப்பகுதியினுள் பதிலளிப்பதற்குத் தவறுதல்.** | **உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு மாதத்த னுள் விடையளிக்கு மாறு நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளின் தலைவர்களினை விழிப்புணர்வூட்டுதல்.** |
| 6.3 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம் சகல உள்ளகக் | **இணக்கம்** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளினை முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு முன்வைத்திருத்தல். | | | |
| **6.4** | நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளினை கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல். | **இணக்கம்** | | |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| **7.1** | DMA சுற்றுநிருபம் 1-2019 இன் பிரகாரம் ஆகக் குறைந்த வகையில் 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களாவது உரிய வருடத்தினுள் முன்னெடுத்திருத்தல். | **இணக்கம்** | | |
| **8** | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| **8.1** | 01/2017 என்ற இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றிநிரூபத்தின் 07 வது அத்தியாயத்தின் பிரகாரம் சொத்துக்களினைக் கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பிலான தகவல்களினை கொம்றோலர் ஜனரால் அலுவலகத்திற்கு முன்வைத்திருத்தல். | **இணக்கம்** | | |
| **8.2** | மேற்குறிப்பிட்ட சுற்றுநிரூபத்தின் 13 வது அத்தியாயத்தின் பிரகாரம் அச் சுற்றுநிரூபத்தின் ஏற்பாடுகளினை அமுலாக்குவதை ஒருங்கிணைப்பதற்கு பொருத்தமான இணைப்பு உத்தியோகத்தர் ஒருவரினை நியமித்து அவ் உத்தியோகத்தர் தொடர்பிலான தகவல்கள் கொம்றோலர் ஜனரால் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருத்தல். | **இணக்கம்** | | |
| **8.3** | அரச நிதிச் சுற்றுநிரூப இலக்கம் 05/2016 இன் பிரகாரம், பொருட் கணக்கெடுப்பு ஆய்வுகளினை முன்னெடுத்து உரிய அறிக்கைகளினை குறிப்பிட்ட தினத்தன்று | **இணக்கம்** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல். | | | |
| **8.4** | வருடாந்த பொருட் கணக்கெடுப்பு ஆய்வில் வெளிக் கொணரப்பட்ட மேலதிகம், பற்றாக்குறை மற்றும் பிற பரிந்துரைகளினை, சுற்றுநிரூபத்தில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் முன்னெடுக்கப்பட்டிருத்தல். | **இணக்கம்** | | |
| **8.5** | முதிர்வடைந்த பொருட்களினை அகற்றுதல் நி.பி. 772 இன் பிரகாரம் முன்னெடுத்திருத்தல். | **இணக்கம்** | | |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| **9.1** | குழாம் வாகனங்கள் தொடர்பில் தினசரி ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் பொழிப்பு அறிக்கைகளினைத் தயாரித்து குறிப்பிட்ட தினத்தில் கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்தல். | **இணக்கம்** | | |
| **9.2** | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்களினை கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அகற்றுதல். | **இணக்கம்** | | |
| **9.3** | வாகன லொக் புத்தகங்களினைப் பேணும்போது அவற்றினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்தல். | **இணக்கம்** | | |
| **9.4** | சகல வாகன விபத்துக்கள் தொடர்பிலும் நி.பி. 103,104,109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | **இணக்கம்** | | |
| **9.5** | 2016.12.29 ஆந் திகதிய 2016/30 என்ற இலக்க பொது நிர்வாக சுற்றுநிரூபத்தின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீளவும் பரீட்சித்தல். | **இணக்கம்** | | |
| **9.6** | குத்தகைக் காலத்திற்குப் பிறகு, குத்தகை வாகன லொக் புத்தகங்களின் முழு உரிமையினையும் ஒப்படைத்திருத்தல். | **தொடர்பற்றது** | | |
| **10** | **வங்கிக் கணக்கினை முகாமை செய்தல்.** | | | |
| **10.1** | குறிப்பிட்ட தினத்தன்று வங்கி இணக்கக் கூற்றுக்களினைத் தயாரித்து உறுதிப்படுத்தி | **இணக்கம்** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவற்றினைக் கணக்காய்வுக்கு முன்வைத்திருத்தல். | | | |
| **10.2** | மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னரான ஆண்டுகளிலிருந்து முன் கொண்டுவரப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல். | **இணக்கம்** | | |
| **10.3** | வங்கி இணக்கக் கூற்றுக்களில் வெளிக்கொணரப்பட்ட மற்றும் இணக்கஞ் செய்யவேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அம் மீதிகளினை ஒரு மாதக் காலப்பகுதியினுள் தீர்த்தல். | **இணக்கம்** | | |
| **11** | **வழங்கல் பயன்பாடு** | | | |
| **11.1** | செய்யப்பட்ட ஏற்பாடுகளினை அவற்றின் வரையறையினை மீறாத வகையில் செலவுகளினை ஈடுசெய்தல். | **இணக்கம்** | | |
| **11.2** | நி.பி. 94(1) இன் பிரகாரம் செய்யப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து பயன்படுத்தப்பட்ட பின்னர் ஆண்டு இறுதியின் மீதி ஒதுக்கீடுகளின் வரையறையினைத் தாண்டாத வகையில் பொறுப்புக்களுக்கு வருதல். | **இணக்கம்** | | |
| **12** | **அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்** | | | |
| **12.1** | கட்டுப்பாடுகளுக்கு இணங்குதல் | **இணக்கம்** | | |
| **12.2** | நிலுவையிலுள்ள கடன் மீதிகள் தொடர்பில் காலப் பகுப்பாய்வொன்றினை முன்னெடுத்திருத்தல். | **இணக்கம்** | | |
| **12.3** | ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையிலுள்ள கடன் மீதியினைத் தீர்த்திருத்தல். | **இணக்கம்** | | |
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| **13.1** | தாமதமான வைப்புத் தொடர்பில் நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருத்தல். | **இணக்கம்** | | |
| **13.2** | பொது வைப்புத் தொடர்பிலான வைப்புக் கணக்கினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்திருத்தல். | **இணக்கம்** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியின் காசுப் புத்தகத்தின் மீதியினை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்புதல். | **இணக்கம்** | | |
| 14.2 | நி.பி. 371 இன் பிரகாரம் தற்செயலான இடைக்கால கட்டுநிதியினை அத்தகைய பணி நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படுதல். | **இணக்கம்** | | |
| 14.3 | நி.பி. 371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரையறையினை மீறாத தற்காலிக இடைக்கால கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல் | **இணக்கம்** | | |
| 14.4 | கட்டுநிதிக் கணக்கு மீதியினை, திறைசேரியின் புத்தகங்களுடன் மாதாந்தம் ஒப்புரவு செய்தல். | **இணக்கம்** | | |
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | உரிய விதிமுறைகளுக்கிணங்க திரட்டப்பட்ட வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்துதல் இடம்பெற்றிருத்தல். | **இணக்கம்** | | |
| 15.2 | திரட்டப்பட்டிருந்த வருமானத்தினை வைப்புக் கணக்குக்கு வரவிடாது நேரடியாக வருமானத்திற்கு வரவிட்டிருத்தல். | **இணக்கம்** | | |
| 15.3 | நி.பி. 176 இன் பிரகாரம் நிலுவை வருமான அறிக்கைகளினை கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல். | **இணக்கம்** | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வரையறையினுள் பதவியணியினை முன்னெடுத்தல். | **இணக்கம்** | | |
| 16.2 | பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கு கடமைப் பட்டியல்கள் எழுத்துமூலம் வழங்கப்பட்டிருத்தல். | **இணக்கம்** | | |
| 16.3 | 20.09.2017 ஆந் திகதிய MSD சுற்றுநிரூப இலக்கம் 04/2017 இன் பிரகாரம் சகல அறிக்கைகளினை முகாமைத்துவ சேவைகள் | **இணக்கம்** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | திணைக்களத்திற்கு முன்வைத்திருத்தல். | | | |
| **17** | **பொதுமக்களுக்குத் தகவல்களினை வழங்குதல்.** | | | |
| **17.1** | தகவல்கள் அறிந்துகொள்ளும் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல்களினை வழங்கும் ஆவணமொன்று நாளதுவரைப்படுத்தப்பட்டு முன்னெடுத்தல். | **இணக்கம்** | | |
| **17.2** | நிறுவனம் தொடர்பிலான தகவல்கள் அதன் இணையத் தளத்தினூடாக வழங்கப்படுதல், இணையத்தளத்தினூடாக அல்லது மாற்று வழிகளினூடாக நிறுவனம் தொடர்பில் பொதுமக்களின் புகார்கள்/குற்றச்சாட்டுக்களினை வெளிப்படுத்துவதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருத்தல். | **இணக்கம்** | | |
| **17.3** | தகவல்களினை அறிந்துகொள்ளும் சட்டத்தின் 08 வது மற்றும் 10 வது பிரிவின் பிரகாரம் வருடமொன்றுக்கு இரு தடைவை அல்லது வருடமொன்றுக்கு ஒரு தடைவை அறிக்கைகள் முன்வைக்கப்பட்டிருத்தல். | **இணக்கம்** | | |
| **18** | **பிரஜைகள் பட்டயத்தினை அமுலாக்குதல்** | | | |
| **18.1** | 05/2008 மற்றும் 05/2018 (1) என்ற இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் பிரஜைகள் /பயனாளிகள் பட்டயம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருத்தல். | **இணக்கம்** | | |
| **18.2** | அச்சுற்றுநிரூபத்தின் 2.3. பந்தியின் பிரகாரம் பிரஜைகள்/பயனாளிகள் பட்டயத்தினைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்கும் செயற்பாடுகளினை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு தொடர்பில் நிறுவனங்களினூடாக மூலோபாயமொன்று தயாரிக்கப்பட்டிருத்தல். | **இணக்கம்** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | **மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிரூப இலக்கம் 02/2018 இணைப்பு 02 படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருத்தல். | **இணக்கம்** | | |
| 19.2 | பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணிநேரப் பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்குறிப்பிட்ட மனித வளத் திட்டத்தினுள் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல். | **இணக்கம்** | | |
| 19.3 | மேற்குறிப்பிட்ட சுற்றுநிரூபத்தின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு அனைத்துப் பதவியணிக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருத்தல். | **இணக்கம்** | | |
| 19.4 | மேற்குறிப்பிட்ட சுற்றுநிரூபத்தின் 6.5 வது பந்தியின் பிரகாரம் மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை மேம்படுத்துதல், திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் தொடர்பில் பொறுப்புக்களினை ஒப்படைத்து மூத்த உத்தியோகத்தர் ஒருவரினை நியமித்தல். | **இணக்கம்** | | |
| 20 | **கணகாய்வுப் பந்திகளுக்குப் பதிலளித்தல்** | | | |
| 20.1 | கடந்த ஆண்டு தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியினால் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளினூடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீர் செய்யப்பட்டிருத்தல். | **இணக்கம்** | | |